

# நிதியியல் கல்வியறிவிற்கான

## உங்களது நிதியியல் நலனை அடைவதற்கு துணைபுரியும்

ரவி அபேசூரிய, CFA, FCMA, CGMA, MBA

CFA Society Sri Lanka

CSE
COLOMBO STOCK EXCHANGE
*Creating Wealth and Value*

# உள்ளடக்கம்


01 **நிதியியல் கல்வியறிவின் வரைவிலக்கணம் மற்றும் பயன்கள** 03

நிதியியல் கல்வியறிவின் வரைவிலக்கணம் 03
நிதியியல் கல்வியறிவின் அனுகூலங்கள் 04

02 **நிதியியல் சுதந்திரம் மற்றும் செல்வத்தை எவ்வாறு அடைவது?** 06

உங்களுக்கு சில கருத்துக்களை வழங்குவதற்காக, வருமானத்தை உருவாக்கும் சொத்துக்களடங்கிய பட்டியல் 09
நிதியியல் சுதந்திரம் மற்றும் செல்வத்தை அடைவதற்கு துணைபுரியும் முக்கிய படிப்பினைகள் 10

03 **தனிப்பட்ட நிதியியல் திட்டமிடல்** 12

நிதியியல் திட்டமிடலின் ஆறு படிகள் மற்றும் சாமர்த்தியமான குறிக்கோள்களை நிறுவுதல் 12
நிதியியல் திட்டமிடல் ஏன் முக்கியத்துவம் வாய்ந்தது? 16

04 **சாமர்த்தியமாக கடன் பெறுங்கள்** 17

ஏதேனும் நிதியியல் நிறுவனத்திடமிருந்து நீங்கள் கடன் பெறுவதற்கு தீர்மானிப்பதற்கு முன்னர் கருத்திற்கொள்ள வேண்டிய வினாக்கள் 17
வன்மையான கடன்கொடுநர்கள் / அதிகூடிய வட்டிக்கு கடன் வழங்குபவர்களிடமிருந்து உங்களைப் பாதுகாத்துக்கொள்வது எப்படி? 20
கடன் பொறிக்குள் உள்நுழைவது இலகுவானது ஆனால் அதிலிருந்து வெளியே வருவது கடினமானது 22
உங்களது கடன் அட்டைகளை புத்திசாலித்தனமாக பயன்படுத்துங்கள் 24

05 **பணம் எவ்வாறு தொழிற்படுகின்றது?** 27

நிதியியல் வெற்றியின் இரகசியம் 27
உங்களது சேமிப்பு உங்களுக்காக உழைக்கட்டும் 29
சேமிப்பிற்கும் முதலீட்டிற்கும் இடையேயான வித்தியாசங்கள் 30
தொடர்வட்டி உங்களது சிறந்த நண்பன் 33
சில முதலீடுகள் உண்மைக்கு புறம்பானவையாகும் 35
கடன் தரப்படுத்தல்களை புரிந்துகொள்ளல் 36
முதலீடு செய்வதிலுள்ள இடர்நேர்கைகளை தெரிந்துகொள்ளுங்கள் 39
மூலதனச் சந்தையில் முதலீடு செய்தல் 40
முதலீட்டினை மேற்கொள்ளும்போது நிபுணத்துவ ஆலோசனையைப் பெற்றுக்கொள்ளுங்கள் 44

06 **ஆதன (செல்வ) முகாமைத்துவம்** 46

சொத்து ஒதுக்கீடு மற்றும் முதலீட்டுத் தேக்க பன்முகப்படுத்துதல் 46
இடர்நேர்கை முகாமைத்துவம் 48

| | | |
|---|---|---|
| 07 | **எதிர்பாரா நிகழ்வுகளுக்கு தயாராயிருங்கள்** | 50 |
| | எதற்காக காப்புறுதி செய்தல் வேண்டும்? | 50 |
| | காப்புறுதியின் வகைகள் | 51 |
| | காப்புறுதி செய்யும்போது செய்யவேண்டியவைகள் மற்றும் செய்யத்தகாதவைகள் | 53 |
| 08 | **உங்களது பணிஓய்விற்கான திட்டமிடல்** | 54 |
| | எதற்காக ஓய்வுபெறுவதற்கு திட்டமிடல் வேண்டும்? | 54 |
| | பணிஓய்விற்காக முதலீடு செய்யும்போது ஏற்படக்கூடிய முக்கிய சவால்கள் | 56 |
| | பணிஓய்வின்போது புத்திசாலித்தனமாக உங்களது சேமிப்பினை முகாமைப்படுத்துங்கள் | 58 |
| 09 | **நிறைவு** | 61 |
| 10 | **உசாத்துணைகள்** | 62 |

# 01 நிதியியல் கல்வியறிவின் வரைவிலக்கணம் மற்றும் அனுகூலங்கள்

## நிதியியல் கல்வியறிவின் வரைவிலக்கணம்

நிதியியல் கல்வியறிவின் வரைவிலக்கணத்தை பின்வருமாறு எடுத்துக்கூறலாம். ஒருவரது நிதியியல் நலனை மேம்படுத்துவதற்காக, பொருளாதார மற்றும் தனிப்பட்ட சூழ்நிலைகளை அடிப்படையாகக் கொண்டு தெளிவான நிதியியல் தீர்மானங்களை மேற்கொள்வதற்கு அவசியமான நிதியியல் அறிவு, திறமை, மனப்பாங்கு மற்றும் நடத்தை ஆகியவற்றின் பிணைப்பு என்று கூறலாம். இங்கு,

- "அறிவு" என்பது தனிப்பட்ட நிதியியல் விடயங்கள் பற்றிய ஓர் புரிந்துணர்வை கொண்டிருப்பது என்று பொருள்படும்;
- "திறமை" என்பது ஒருவரது தனிப்பட்ட நிதியினை முகாமைப்படுத்துவதற்காக அவ்வறிவினை பயன்படுத்தக்கூடிய ஆற்றல் என்று பொருள்படும்; மற்றும்
- "மனப்பாங்கு மற்றும் நடத்தை" என்பது ஒருவரது தனிப்பட்ட நிதியினை கையாளுதல் தொடர்பான குறிப்பிட்ட சூழ்நிலைகளில் எழக்கூடிய நம்பிக்கைகள், உணர்வுகள், தன்னம்பிக்கை மற்றும் பாரபட்சங்கள் என்று பொருள்படும்.

**நிதியியல் அறிவு என்பது "ஆயுட்கால நிதியியல் பாதுகாப்பிற்காக ஒருவரது நிதியியல் வளங்களை முகாமைப்படுத்துவதற்கு அறிவு மற்றும் திறமையினைப் பயன்படுத்தக்கூடிய ஆற்றலாகும்".**



# நிதியியல் கல்வியறிவின் அனுகூலங்கள்

நிதியியல் உள்ளடக்கல் என்பது அனைத்து மட்டத்திலும் உள்ள மக்களுக்கு ஒரு நாட்டின் நிதியியல் அமைப்பினை அணுகுவதற்கான வசதியினை வழங்குதல் என்று பொருள்படும். இது தனிநபர்கள் தாங்கள் பொறுப்பேற்கும் இடர்நேர்கை (Risk) பற்றித் தெரிந்துகொள்ளுதல் மற்றும் நிதியியல் சேவைகளை எவ்வாறு அவர்கள் பயன்படுத்துகின்றார்கள் என்பதில் செலுத்தும் அக்கறை என்பவற்றைப் பொருத்தே பயனுறுதிமிக்கதாகக் காணப்படும். இலங்கையில் காணப்படுகின்ற குறைந்த நிதியியல் அறிவானது பலரை உயர்ந்த மட்டத்திலான கடனாளியாக ஆக்கியதுடன் மக்கள் பிரமிட் திட்டங்கள் போன்ற இடர்நேர்கை கூடிய முதலீடுகளில் முதலீடு செய்யவும் வழிநடத்தியுள்ளது.

நிதியியல் கல்வியறிவிற்கும் அச்சு கல்வியறிவிற்கும் இடையேயான இடைவெளியானது பிராந்தியத்திலேயே இலங்கையில் அதிகமாகக் காணப்படுகின்றது. முன்னேற்றமடைந்த பொருளாதாரங்களில் சராசரியாக 65% மான வயது வந்தோர் நிதியியல் ரீதியில் அறிவு படைத்தவர்களாவர். தெற்காசியாவிலேயே ஆகக்குறைந்த சதவீதமான நிதியியல் கல்வியறிவுடையோர் காணப்படுகின்றார்கள். இலங்கையினைப் பொறுத்தளவில் 35% மானோரே நிதியியல் கல்வியறிவினைக் கொண்டுள்ளார்கள். இலங்கையின் குறைந்த நிதியியல் கல்வியறிவானது வறியோர் முதல் வைத்தியர்கள், சட்டத்தரணிகள் மற்றும் நீதிபதிகள் போன்ற தொழில் நெறிஞர்கள் வரை அனைத்து சமூக அடுக்குகளிலும் பரந்து காணப்படுகின்றது.

**"ஒரு நாட்டின் நிதி அமைப்புக்கு அனைத்து மட்டங்களிலும் உள்ள மக்களுக்கு அணுகலை வழங்கும் நிதி உள்ளடக்கம், தனிநபர்கள் தாங்கள் எடுக்கும் அபாயங்களை அறிந்திருந்தால் மற்றும் அவர்கள் நிதிச் சேவைகளை எவ்வாறு பயன்படுத்துகிறார்கள் என்பதில் கவனமாக இருந்தால் மட்டுமே பயனுள்ளதாக இருக்கும்."**

இலங்கையில் பல நேர்மையற்ற நிறுவனங்கள் சட்டவிரோதமாக அல்லது சட்ட வரம்பிற்கு அப்பால் செயற்படுகின்றன. இவை உயர்ந்த வட்டியினைச் செலுத்தும் வைப்புகளை திரட்டுகின்றன அல்லது அதி உயர்ந்த வட்டி வீதத்தில் கடனை வழங்கும் முறைசாரா கடன் வழங்கும் திட்டங்களை வழங்குகின்றன. நிதியியல் ரீதியில் போதுமான கல்வியறிவற்றவர்கள் தங்களது குறுங்காலத் தேவைகளில் மாத்திரம் கவனஞ் செலுத்துவதுடன் தமது தீர்மானங்களின் நீண்டகால விளைவுகளைப் புரிந்துகொள்வதில்லை. இவர்களது பலவீனத்தைப் பயன்படுத்தி இந்நிறுவனங்கள் செழிப்படைகின்றன.

- மக்கள் நிதியியல் அழுத்தங்களுக்கு முகங்கொடுக்கும்போது, அவர்களது உடனடி நடவடிக்கை மேலதிக பணத்தைத் தேடுவதாகும். இன்று அவர்கள் முகங்கொடுக்கும் பிரச்சனைக்குரிய தீர்வு அதிக பணத்தினை தேடிச் செல்லுதல் என அவர்கள் நம்புகின்றார்கள். அவர்களது பிரச்சனைக்கான மூல காரணம் அவர்களது குறைவான நிதியியல் கல்வியறிவு என்பதனை புரிந்துகொள்வதில்லை. அத்தகைய 'தீர்வுகள்' அவர்களை ஆழமான நிதியியல் அழுத்தங்களுக்குள் இழுத்துச்செல்கின்றன.

- நிதியியல் ரீதியில் கல்வியறிவினை பெற்றுள்ளவிடத்து, இது தனிப்பட்ட நபர்களுக்கும் அவர்களது குடுப்பத்தாருக்கும் தெளிவான நன்மைகளை வழங்குகின்றது. சேமிக்கும்போது மற்றும் பணத்தை கடன் வாங்கும்போது இவர்கள் சிறப்பான மற்றும் தகவலறிந்த தீர்மானங்களை மேற்கொள்ளக்கூடியதாயிருக்கின்றது. அதேபோன்று இவர்கள் தங்களது தேவைகளை மிகவும் பயனுறுதிமிக்க விதத்தில் முக்கியமானவற்றை வரிசைப்படுத்தி எதிர்கால பயன்பாட்டிற்காக ஓர் நிதித் திரட்டினை கட்டியெழுப்பக்கூடியதாகவும் இருக்கின்றது. அத்துடன், பணத்தைக் கடனாகப் பெறும்போது கடனுக்கு செலுத்தவேண்டிய வட்டி பற்றியும் ஓர் நியாயமான

காலப்பகுதியினுள் கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கான அவர்களது ஆற்றல் பற்றியும் ஓர் தெளிவான புரிந்துணர்வினைக் கொண்டிருப்பார்கள்.

- கருத்துள்ள நிதியியல் தீர்மானங்களை மேற்கொள்ளும் மக்கள் அனேகமாக அவர்களது நிதியியல் குறிக்கோள்களை அடைவதுடன், நிதியியல் இடர்நேர்கைகளை முகாமைப்படுத்தியும் நிதியியல் சொத்துக்கள் பலவற்றை கட்டியெழுப்பவும் இயலுமாக இருக்கின்றது. இவர்கள் சமூகத்திற்கு ஓர் சுமையாக இல்லாது நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிப்பு செய்யக்கூடியதாகவும் இருக்கின்றது.

- பணம் வரலாம் அதேபோன்று கையை விட்டுச் செல்லலாம். ஆனால் பணம் எவ்வாறு சிறப்பாக தொழிற்படும் என்று நீங்கள் நிதியியல் ரீதியில் கல்வியறிவுடையவராக இருப்பின், நீங்கள் பணத்தின்மேல் அதிகாரம் செலுத்தக்கூடியதாகவும் உங்களது செல்வத்தை கட்டியெழுப்பக்கூடியதாகவும் இருக்கும்.

- முதலாவதும் மிகவும் முக்கியமானதுமான படியாக, நீங்கள் உங்களது பணத்தை உருவாக்குதல், கட்டுப்படுத்துதல் மற்றும் பாதுகாத்தல் ஆகியவற்றில் திறமை உடையவராக மாறுவதாகும். நீங்கள் உங்களது நிதியியல் நுண்ணறிவினைப் பெற்றுக்கொள்வதற்கு முயற்சித்து நிதியியல் ரீதியில் கல்வியறிவுடையவராக வருவதன் மூலம் உங்களது குறிக்கோள்களை வெற்றிகரமாக அடைவதற்கான சுதந்திரத்தை பெற்றுக்கொள்கின்றீர்கள்.

# 02 நிதியியல் சுதந்திரம் மற்றும் செல்வத்தை பெற்றுக்கொள்வது எப்படி?



**“செல்வம் என்பது, ஒருவர் தொழில்புரிவதை இன்று நிறுத்தினால், ஆயுட்காலம் முழுவதும் அவர் தமது வாழ்க்கை முறையினை பேணுவதற்கான அவரது ஆற்றல் என்று பொருள்படும்”**

கல்வி முறையானது மக்களை கடினமாக கற்குமாறும், நல்ல தகமைகளைப் பெறுமாறும் நல்ல ஊதியத்தினை வழங்கும் ஒரு தொழிலைப் பெற்றுக்கொள்ளுமாறும் கற்பிக்கின்றது. அதாவது, எவ்வாறு பணத்திற்காக வேலை செய்யவேண்டும் என்பதைக் குறிப்பிடுகின்றது, ஆனால் பணம் எவ்வாறு உங்களுக்காக தொழிற்படும் என்பதனைக் கற்பிப்பது கிடையாது. கல்லூரி பாடத்திட்டங்களினுள் காணப்படும் நிதியியல் திறமைகளிலான இக்குறைபாட்டின் மூலம் அறிந்துகொள்வது என்னவெனில் உயர்ந்த கல்வி கற்ற மக்கள்கூட பணத்தை எவ்வாறு முகாமைப்படுத்துவது என்பதனை தெரியாதுள்ளார்கள். இதன் விளைவாக, அனேகமான மக்கள் தமது செலவினங்களுக்காக உழைப்பதுடன், அவர்கள் வாழ்நாள் முழுவதும் ஊதியத்தினை நம்பியே காலம் கழிக்கின்றார்கள். பல கணக்காளர்கள், வைத்தியர்கள் மற்றும் வழக்கறிஞர்கள் கடினமாக தொழில் செய்கின்றார்கள். இருந்தாலும் இவர்கள் போதுமானளவு வருமானத்தினை உழைப்பதில்லை என்பதுடன் இந்த இயந்திர வாழ்க்கையினுள் மூழ்கியுள்ளார்கள்.

பணத்திற்காக வேலை செய்வதன் அடிப்படை சிக்கல் என்னவெனில், ஓர் நீண்ட கால பிரச்சனைக்கு தொழில் ஓர் குறுங்கால தீர்வாக காணப்படுவதாகும். மக்கள் பொதுவாக, அவர்களது ஊதியம் உயர்வடைந்தால் அல்லது ஓர் புதிய தொழிலைப் பெற்றுக்கொண்டால் அவர்களுக்கு போதுமானளவு பணம் கிடைத்துவிடும் என்ற நம்பிக்கையினைக் கொண்டுள்ளார்கள். எவ்வாறாயினும், பணம் எவ்வாறு தொழிற்படுகின்றது என்பதனை நீங்கள் அறிந்திராவிட்டால் உங்களுக்கு ஒருபோதும் போதுமானளவு பணம் கிடைக்காது. பணம் மாத்திரம் எதற்கும் தீர்வாக அமையாது. அனேகமான மக்களுக்கு அதிகமாக பணம் கிடைத்தாலும் அவர்கள் அதிகளவு கடனாளியாகின்றார்கள்.

மக்களுக்கு அவர்கள் பாடசாலைகளில் கல்வி கற்கும்போது பணத்தை எவ்வாறு புத்திசாலித்தனமாக செலவழிப்பது என்பது பற்றி கற்றுக்கொடுப்பது கிடையாது. பல மக்களுக்கு ஓர் சொத்திற்கும் - 'அதாவது உங்கள் சட்டை பையினுள் பணத்தை போடும் ஏதோ ஒன்று' மற்றும் ஓர் பொறுப்பிற்கும் - 'அதாவது உங்கள் சட்டை பையிலிருந்து பணத்தை எடுக்கும் ஏதோ ஒன்று' உள்ள வித்தியாசம் என்னவென்று தெரியாது.

நிதியியல் ரீதியாக சுதந்திரமாக வருவதற்கான ஒரே வழி உங்களது செலவினங்களை செலுத்துவதற்கான வருமானத்தை உருவாக்கும் சொத்துக்களை திரட்டுவதாகும். சாமர்த்தியமான மக்கள் நிலையான வைப்புகள், முறிகள், யுனிட் ட்ரஸ்ட்கள், பங்குகள், வருமானத்தினை உருவாக்கும் சொத்து மனைகள் (சுநயட நுளவயவந), மற்றும் வருமானத்தினை உருவாக்கும் அல்லது பெறுமதியளவில் உயர்வடையும் ஏதேனும் ஒன்று மற்றும் அதற்கு தயாராயுள்ள ஓர் சந்தை போன்றவற்றில் அவர்களது சொத்துக்களை கட்டியெழுப்புகின்றார்கள். எவ்வாறாயினும், அனேகமான மக்கள் பெரும்பாலும் தவணை அடிப்படையில் (கடனைப் பெற்று, அதாவது ஓர் பொறுப்பினை உருவாக்குகின்றார்கள்) ஓர் ஸ்மார்ட் தொலைபேசியினை கொள்வனவு செய்வார்களே தவிர அவர்களது ஸ்மார்ட் தொலைபேசியினை வாங்குவதற்கான பணத்தை வழங்கக்கூடிய வருமானத்தை உருவாக்கக்கூடிய சொத்துக்களில் அப்பணத்தை முதலீடு செய்வதில்லை. அனேகமான மக்களுக்கு ஏற்படுவது போன்று பணம் உங்களது வாழ்க்கையை கட்டுப்படுத்துவதனை விரும்பாவிடின், நீங்கள் ஏனையோரிலிருந்து வித்தியாசமாக செயற்படுதல் வேண்டும்.

நீங்கள் ஓர் குறிப்பிட்ட செயல்முறையினை பின்பற்றி அதற்கு அர்ப்பணிப்புடன் இருப்பீர்களாயின், எந்த வயதிலும் நிதியியல் சுதந்திரத்தை அடையமுடியும். நீங்கள் எவ்வளவு விரைவாக வெற்றியீட்டப் போகின்றீர்கள் என்பது பின்வரும் இரண்டு காரியங்களில் தங்கியுள்ளது.

1. ஒவ்வொரு வருடத்திற்குமான உங்களது செலவினங்களை சந்திப்பதற்கு தேவையான பணம்.
2. அத்தகைய செலவினங்களைச் சந்திப்பதற்காக பணத்தை உருவாக்கக்கூடிய ஓர் சொத்துத் தேக்கத்தினை கட்டியெழுப்புவதில் எவ்வளவு முனைப்புடனும் தீர்மானத்துடனும் நீங்கள் காணப்படுகின்றீர்கள் என்பதாகும்.

நீங்கள் உங்களது வருமானத்தினுள் வாழப் பழகிக்கொண்டு உங்களது சொத்துக்களை கட்டியெழுப்பும் ஒழுக்கத்தினை கொண்டவரானால் உங்களால் இதனை செய்யமுடியும். அனேகமான மக்களுக்கு நிதியியல் சுதந்திரத்தினது சௌகரியம் தேவை, ஆனால் அதனை அடைவதற்கான அசௌகரியங்களினுள் செல்வதற்கு சிலரே முயற்சிக்கின்றார்கள்.

வறியவர்கள் பணத்திற்காக தொழில் செய்கின்றார்கள். அனேகமான மக்கள் தங்களது செலவினங்கள் எவ்வேளையிலும் வருமானத்திற்கு சமமாக இருப்பதனை காண்கிறார்கள். இவர்கள் தாம் வழக்கமாக உழைப்பதிலும் பார்க்க அதிகமாக உழைத்தாலும் மாதக் கடைசியில் எவ்வித பணமும் எஞ்சியிருப்பதில்லை ஏன் என்பதை புரிந்துகொள்கின்றார்கள் இல்லை. இவர்கள் நிதியியல் ரீதியில் சிரமத்திற்குள்ளாகின்றார்கள் ஏனெனில், அவர்களது வருமானம் அதிகரிக்கும்போது அவர்களது செலவிடுதலும் தொடர்ச்சியாக அதிகரித்துக்கொண்டே செல்கின்றது. எவ்வாறாயினும், அவர்களது சொத்துக்கள் அதிகரிப்பதில்லை, ஆனால் அவர்களது பொறுப்புக்கள் அதிகரிக்கின்றன. இவர்கள் தாம் தொழில்புரியும் நிறுவனங்களை செல்வம் படைத்த நிறுவனங்களாக உருவாக்குவதற்காக தொழில்புரிகின்றார்கள், தங்களது கடனை செலுத்தவதற்காக வங்கிக்காக தொழில்புரிகின்றார்கள் மற்றும் அரசாங்கத்திற்கு வரி செலுத்துவதற்காக தொழில்புரிகின்றார்கள். கடினமாக தொழில்புரிவது என்பதன் அர்த்தம் என்னவெனில், இந்த மூன்று தரப்பினர்களுக்கும் உங்களது உழைப்பின் பெரிய பங்கினை கையளிப்பதாகும்.

பணக்காரர்கள் அவர்கள் ஏழைகள் போன்று வாழ்வதன் காரணமாக பணக்காரர்களாயிருக்கின்றார்கள். இதற்கு எதிர்மறையாக, வறிய மக்கள் அவர்கள் பணக்காரர்கள் போன்று வாழ்தற்கு முயற்சிப்பதன் காரணமாக வறியவர்களாக காணப்படுகின்றார்கள். நீங்கள் பணக்காரராக வேண்டுமா அல்லது பணக்காரர் போன்று காணப்படவேண்டுமா? சற்று சிந்தித்துப் பாருங்கள். பணக்காரர்கள் பின்வரும் காரணங்களுக்காக மேலும் பணம்படைத்தவர்களாக மாறுகின்றார்கள். அவர்களது செலவினங்களுக்கும் அதிகமான வருமானத்தை அவர்களது சொத்துக்கள்

உருவாக்குகின்றன, வருமானத்தின் ஒரு பகுதியானது புதிய சொத்துக்களின் முதலீடு செய்யப்படுகின்றது. இதன் காரணமாக உருவாக்கப்படும் வருமானமானது மேலும் அதிகரிக்கின்றது. புதிய சொத்துக்களில் வருமானத்தினை மீள் முதலீடு செய்தலானது தொடர்வட்டியின் பலத்தினை தூண்டுகின்றது. இதனை அல்பர்ட் ஐன்ஸ்டீன் அவர்கள் ஒருசமயம் உலகின் எட்டாவது அதிசயம் என்று குறிப்பிட்டிருந்தார். ஏனெனில் இதனைப் புரிந்துகொள்பவர்கள் வருமானத்தினை உழைப்பார்கள், புரிந்துகொள்ளாதவர்கள் செலுத்துவார்கள். செல்வந்த மற்றும் புத்திசாலித்தனமான முதலீட்டாளர்கள் எந்நேரமும் புன்னகையுடன் காணப்படுகின்றார்கள் ஏனெனில் ஒவ்வொரு நாளின் ஒவ்வொரு வினாடியும் அவர்கள் பணத்தை உருவாக்குகின்றார்கள்.

ஒரு சிறிய பனித்திரளானது மலையிலிருந்து கீழே வரும்போது ஓர் பலம்மிக்க பனிச்சரிவாக உருவாகி மேலும் பனித்திரள்களை சேகரித்துக்கொள்கின்றது. உங்களுடைய செல்வமும் இதேபோன்றே தொழிற்படுகின்றது. நீங்கள் ஆரம்பத்தில் செய்யவேண்டிய வேலையானது அனேகமாக மிகவும் வேதனை மிக்கதாக காணப்படலாம். அத்துடன் நீங்கள் கட்டுப்பாட்டினையும் கடைப்பிடித்தாக வேண்டும். இதற்கான விளைவினை ஓரிரவில் நீங்கள் காணமுடியாது. ஆனால் உங்களது செல்வப் பனிக்கட்டியானது கட்டியெழுப்பப்பட்டவுடன் உங்களது செல்வம் இயற்கையாகவே மேலும் செல்வத்தை கவரும். அப்போது தொடர்வட்டியின் சக்தி உங்களுக்குச் சார்பாக தொழிற்படும். பனித்திரள்கள் ஒன்றுதிரண்டு காலப்போக்கில் வளர்ச்சியடைவதைப்போல் உங்களது செல்வமும் வளர்ச்சியடையும். எதுவும் அதன் வளர்ச்சியினை தடுக்கமுடியாது. ஓர் முதலீடானது உங்களுக்கு வட்டியினைச் செலுத்தும் வரைக்கும் நீங்கள் இரவில் புன்னகையுடன் இருக்கலாம், ஏனெனில் நேரம் உங்கள் நண்பன் என்பதனை நீங்கள் அறிந்துள்ளீர்கள். உங்களுக்கு எவ்வளவு நீண்டகாலம் இருக்கின்றதோ அந்தளவுக்கு நீங்கள் மிகவும் செல்வந்தராக மாறலாம்.

தொடர்வட்டியானது (ஊழஅிழரனெைபெ ஐவெநசநளவ) சாதாரண மக்களிலிருந்து கோடீஸ்வரர்களை உருவாக்கும், முக்கியமாக நீங்கள் இளமையாக இருந்தால். நாங்கள் பின்வரும் உதாரணத்தை எடுத்துப் பார்ப்போம் : சராசரியாக 25 வயதுடைய ஒரு நபர் மாதந்தோறும் ரூபா 287 இனை சேமித்து வருகிறார் எனவும் இச்சேமிப்பிற்கு 12% தொடர்வட்டி செலுத்தப்படுமாயின் அந்நபர் 55 வயதினை அடையும்போது அவரிடம் ஒரு மில்லியன் ரூபா இருக்கும். இது பின்வரும் அனுமானத்தின் அடிப்படையில் கணிப்பிடப்பட்டுள்ளது. அதாவது ஓர் நிலையான வைப்பிற்கு சாதாரணமாக 12% வட்டியினைப் பெற்றுக்கொள்வது; 30 வருட காலப்பகுதியில் இந்நபரது வருமானம் எவ்வித அதிகரிப்பினையும் காணவில்லை மற்றும் இவர் மேலதிகமாக எதனையும் சேமிக்கவில்லை என்றும் அனுமானிக்கப்பட்டுள்ளது. மெய்யான விளைவானது இதற்கும் பார்க்க அதிகமாக காணப்படலாம். வளர்ச்சியடையும் கம்பனிகளில் முதலீடு செய்வதன் மூலம் பங்குதாரர்களுக்கு அதிகளவு இலாபத்தை பகிர்ந்தளிப்பதனால், ஆரம்ப முதலீடானது நீண்ட காலப்பகுதியில் பலமடங்கு பெருகலாம். முதலீட்டின் இந்த சக்தியினை குறைத்து மதிப்பிடவேண்டாம். இவை யாவும் தொடர்வட்டியின் காரணத்தினாலாகும். 'தொடர்வட்டி உங்களது உயர்ந்த நண்பன்' என்பது பின்னர் இந்நூலில் விளக்கப்படுத்தப்பட்டுள்ளது.

## உங்களுக்கு சில கருத்துக்களை வழங்குவதற்காக வருமானத்தினை உருவாக்கும் சொத்துக்களின் பட்டியல் இதோ:-

1. பணவீக்கத்தின் சதவீதத்திலும் பார்க்க அதிக வட்டியினை வழங்கும் நிலையான வருமான முதலீட்டுக் கருவிகள்.

2. காலப்பகுதியில் பெறுமதி அதிகரிக்கக்கூடிய வாடகையை உருவாக்கும் ஆதனச் சொத்து.

3. எந்நேரமும் உங்களது பிரசன்னம் தேவைப்படாத, உங்களுக்கு உரித்தான வணிகங்கள், ஆனால் வெற்றிகரமாகவும் இலாபகரமானதாகவும் காணப்படுவதற்கு நன்கு திறம்பட முகாமைப்படுத்தப்படுதல்.

4. காலப்போக்கில் பெறுமதி உயர்வடையும், நல்ல பங்கிலாபத்தினை வழங்கும் யுனிட் ட்ரஸ்ட்கள்.

5. காலப்போக்கில் பெறுமதி உயர்வடையும் நல்ல பங்கிலாபத்தினை செலுத்தும் பங்குகள்.




**“உங்களது உயிர்ப்பற்ற வருமானம் உங்களது செலவவினங்களை விஞ்சும்போது நீங்கள் நிதியியல் ரீதியில் தந்திரமானவராகின்றீர்கள்”**

# நிதியியல் சுதந்திரம் மற்றும் செல்வத்தை அடைவதற்கு துணைபுரியும் முக்கியமான படிப்பினைகள்

இந்த முக்கிய படிப்பினைகள் நீங்கள் சம்பளத்தில் தங்கியிருக்காத வாழ்க்கையினை அடைவதற்கு துணைபுரிவதுடன் நீங்கள் படிப்படியாக செல்வந்தராவதற்கும் துணைபுரியும்.

**1.** நீங்கள் கற்றுக்கொள்ளப்போவது நீங்கள் அடையவிரும்புவதற்கு துணைபுரியும். எனவே நீங்கள் கற்றுக்கொள்ளப்போவதினை மிகவும் கவனமாக வாசித்தறியுங்கள். அவரவரது துறையினில் சிறந்து காணப்படும் மக்களை கண்டுபிடியுங்கள். அறிவினைப் பெற்றுக்கொள்வதில் மேற்கொள்ளும் முதலீடானது சிறந்த வருமானத்தினை உங்களுக்கு வழங்கும். இந்த புத்தகத்தினை வாசிப்பதன்மூலம் நீங்கள் ஓர் முக்கியமான முதலீட்டினை மேற்கொள்கின்றீர்கள்.

---

**2.** வெறுமனே வருமானத்தினை மாத்திரம் இலக்காகக் கொள்ளாது அதிக சொத்துக்களை இலக்காகக் கொள்ளுங்கள். உங்களது செலவினங்களை குறைவாக வைத்திருப்பதுடன் உங்களது பொறுப்புக்களை குறையுங்கள்.

**3.** நீங்கள் எதனையாவது கொள்வனவு செய்ய விரும்பினால், முதலாவதாக உங்களது செலவினங்கள் மற்றும் உங்களது கொள்வனவிற்கான பணத்தினை வழங்குவதற்காக உங்களது சொத்துக்களிலிருந்து போதுமானளவு பணத்தினை உருவாக்குங்கள். உங்களது தேவைகளை வரிசைப்படுத்துங்கள். உங்களது நாளாந்த அவசியத் தேவைகளைச் சந்தித்ததன் பின்னரே ஆடம்பர செலவினங்களை மேற்கொள்ளுங்கள்.

---

**4.** உங்களது சொத்துக்களினால் உருவாக்கப்படும் மேலதிகக் காசு வருமானமானது வருமானத்தை உருவாக்கும் சொத்துக்களில் மீள்முதலீடு செய்யப்படல் வேண்டும்.

**5.** உங்களது சொத்துக்களை பாதுகாப்பதற்கும் உங்களது வரியினைக் குறைப்பதற்கும் ஓர் கம்பனியினை நிறுவுங்கள். ஊழியர் ஒருவரினால் உழைக்கும் வருமானத்தில் "யுலுநு என்னும் 'நீங்கள் உழைக்கும்போது செலுத்துங்கள்' வரியானது அறவிடப்படுவதுடன் எஞ்சியுள்ள பணத்தினையே உங்களால் செலவழிக்கமுடியும். ஓர் கம்பனியானது அதன் அனுமதிக்கத்தக்க செலவினங்களை கழித்ததன் பின்னர் உழைக்கும் வருமானமானது பொதுவாக தேறிய வருமானம் (மொத்த வருமானத்திலிருந்து அனுமதிக்கத்தக்க செலவினங்களை கழித்ததன் பின்னர்) என்றழைக்கப்படும். இதுவே செல்வந்தர்களால் பயன்படுத்தப்படும் மிகப்பெரிய சட்டத்திலுள்ள ஓட்டையாகும்.

---

**6.** கற்பதற்காக தொழிற்படுங்கள் உழைப்பதற்காக அல்ல. உங்களது சொந்த வணிகத்தினை ஆரம்பிப்பதற்கான கலையினை கற்றுக்கொடுக்கக்கூடிய ஓர் தொழிலினை தேர்ந்தெடுங்கள். உங்களிலிலும் பார்க்க சாமர்த்தியமான நபர்களை அமர்த்தி அவர்களுக்கு நல்ல ஊதியத்தினை வழங்குங்கள்.

---

**7.** ஒவ்வொரு செல்வந்தரும் ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தில் பணத்தினை இழந்துள்ளார்கள். பணத்தினை இழக்காத வண்ணம் செயற்பட்டால் உங்களால் பணத்தினை உருவாக்க முடியாது என்று பொருள்படும். 'வெற்றியீட்டுதல் என்றால் இழப்பதற்கு அச்சமில்லை என்று பொருள்படும்'. தோல்வியானது வெற்றியாளர்களுக்கு ஊக்கமளிப்பதுடன் இழப்பவர்களை தோற்கடிக்கும். நீங்கள் திட்டமிட்டபடி ஏதாவது தொழிற்படாவிட்டால், அது வேறு அணுகுமுறையினை முயற்சிப்பதற்கு உங்களுக்கு ஊக்கமளிக்கட்டும். கற்றுக்கொண்டு முன்னேறுங்கள்.

**8.** உங்களது உணர்வுகளின்மீது கட்டுப்பாட்டினை வைத்திருங்கள். அச்சம் அல்லது ஏனையோரது அபிப்பிராயம் உங்களது செயற்பாட்டினை வழிநடத்த அனுமதியாதீர்கள்.

---

**9.** 'என்னிடம் வாங்கும் திறன் இல்லை' என்பது உங்களது மூளையினை மூடிவிடும். 'எவ்வாறு எனது வாங்கும் திறனை அடைவது?' என்பதனை நீங்கள் உங்களையே கேட்கும்போது உங்களது சிந்தனை செயல்முறைகள் திறக்கப்படுவதுடன் உங்களது நிதியியல் புத்திக்கூர்மையினை தூண்டி ஓர் ஆக்கபூர்வமான தீர்விற்கு வழிவகுக்கும்.

---

**10.** உங்களுக்கு இறுதியாக அல்ல, முதலில் செலுத்துங்கள். ஒவ்வொரு மாதமும் உங்களது செலவினப் பட்டியல்களை செலுத்துவதற்கு முன்னர் ஒரு குறிப்பிட்ட தொகைப் பணத்தை ஓர் நிலை ஆணையினைப் (standing order) பயன்படுத்தி வருமானம் உருவாக்கும் சொத்துக்களில் முதலாவதாக முதலீடு செய்யுங்கள். நீங்கள் அக்குறிப்பிட்ட பணத்தை முதலீடு செய்வதற்கு இயலாதவிடத்து இவ் அழுத்தத்தினை பயன்படுத்தி உங்களது செலவினங்களை செலுத்துவதற்கு அல்லது குறைப்பதற்கான புதிய வழிமுறைகளை கண்டுபிடிப்பதற்கு ஊக்கமளியுங்கள். இது மிகவும் கடினமானது, ஆனால் முக்கியமான கொள்கையாகும். நீங்கள் உங்களது முதலீட்டினை இறுதியாக மேற்கொண்டால், நீங்கள் எவ்வித அழுத்தத்தினையும் உணரமாட்டீர்கள் ஆனால் ஏதேனும் புதிய வருமான மூலங்களை அறிந்துகொள்ளமாட்டீர்கள்.

# 03 தனிப்பட்ட நிதியியல் திட்டமிடல்

## நிதியியல் திட்டமிடல் மற்றும் சாதுரியமான குறிக்கோள்களை அமைப்பதிலான ஆறு படிகள்

தனிப்பட்ட நிதியியல் திட்டமிடலானது உங்களது செலவுகள், சேமிப்புகள் மற்றும் முதலிடுதல் நடவடிக்கைகளை முகாமைப்படுத்துவதனை உள்ளடக்கும். சௌகரியமாக வாழ்வதற்கான நிதியியல் நலம், நிதியியல் பாதுகாப்பினை கொண்டிருத்தல் மற்றும் உங்கள் நிதியியல் குறிக்கோள்களை அடைதல் என்பவற்றிற்கு நிதியியல் திட்டமிடல் இன்றியமையாததாகும். எவ்வாறாயினும், இன்று நீங்கள் செல்வந்தராயிருப்பினும் சரி வறியவராயிருப்பினும் சரி நீங்கள் ஒழுங்காக உங்களது நிதியினை முகாமைப்படுத்தத் தவறினால், நீங்கள் நிதியியல் சிரமத்திற்குள் செல்வதற்கான சாத்தியப்பாடானது மிகவும் அதிகமாகும். உங்களால் தாக்குப்பிடிக்க இயலாத வாழ்க்கை முறையினை வாழ முயற்சிப்பது உங்களை பேரிடரிற்கு இற்றுச்செல்லும். உங்களது நிதியில் திட்டமிடலானது உங்களது அனைத்து குடும்பத்தாரினதும் குறிக்கோள்கள், வளங்கள் மற்றும் பொறுப்புக்களை உள்ளடக்குதல் வேண்டும். நீங்கள் குடும்பத்தாரது தேவைகளை பூர்த்தி செய்யலாம் ஆனால் ஒவ்வொரு அங்கத்தவரதும் விருப்புகளை நிவர்த்தி செய்ய இயலாதிருக்கலாம். நிதியியல் திட்டமிடல் செயல்முறையானது ஆறு படிகளைக் கொண்டிருக்கின்றது.



### 1. உங்களது தற்போதைய நிதியியல் நிலைமையினை தீர்மானித்துக்கொள்ளுங்கள்

நீங்கள் நிதியியல் ரீதியாக தற்போது எங்குள்ளீர்கள் எனும் கண்ணோட்டத்தினை பெற்றுக்கொள்வதற்கு நீங்கள் உங்களது மாதாந்த அனைத்து வருமானங்கள் மற்றும் செலவினங்களது பட்டியலொன்றை தயாரித்துக்கொள்ளுதல் வேண்டும். உங்களது வருமானம் மற்றும் செலவினங்களது பதிவேட்டினை தயாரித்தவுடன், உங்களது பணம் எங்கே செல்கின்றது என்பது பற்றிய ஓர் நல்ல புரிந்துணர்வினை பெற்றுக்கொள்வீர்கள். இத்தருணத்தில் நீங்கள் உங்களது சொத்துக்கள் (பண ரீதியாக உங்களுக்கு தற்போது சொந்தமானவை) மற்றும் பொறுப்புக்களை (பண ரீதியாக தற்போது நீங்கள் ஏனையோருக்கு கொடுக்க வேண்டியவை) இனங்கண்டுகொள்வது பயன்மிக்கதாகும். உங்களது தனிப்பட்ட நிதியினை முகாமைப்படுத்துவதற்கான ஓர் சிறந்த முறையாக தனிப்பட்ட நிதியியல் மென்பொருள் (personal finance software) அல்லது பின்தொடர்தல் பயன்பாட்டினை (tracker apps) பயன்படுத்துவதாகும். இவற்றுள் சிலவற்றை இலவசமாகப் பெற்றுக்கொள்ளலாம். அனேகமாக நீங்கள் உழைக்கும் அனைத்தையும் செலவழிப்பதனைக் காணலாம். ஆனால் மனம் தளராதீர்கள். செல்வத்தினை கட்டியெழுப்பும் இக்கட்டத்தினை நான் 'வறுமை' என அழைக்கின்றேன். நீங்கள் ஒரு மாதத்தில் பத்தாயிரம் ரூபாயினை உழைத்தாலும் பல நூறு ஆயிரங்களை உழைத்தாலும் ஒன்றுமே கையில் எஞ்சியிருப்பதில்லை. இது ஓர் மன நிலையினை பிரதிபலிக்கின்றது.

## 2. உங்களது குடும்ப நிதியியல் குறிக்கோள்களை விருத்தி செய்யுங்கள்

**விருத்தி செய்யுங்கள்** நிதியியல் நலனின் அடுத்த கட்டமானது நிதியியல் குறிக்கோள்களை நிருவுதலாகும். உங்களது குறிக்கோள்களை நிருவுதலானது நிதியில் ரீதியாகவும் தனிப்பட்ட ரீதியாகவும் நீங்கள் அடைய விரும்புவதனை பரிசீலித்து, தீர்மானித்து எழுத்துருவில் ஆக்கும் உணர்வுபூர்வமான முயற்சியாகும். குறிப்பிட்ட, அளவிடக்கூடிய, அடையக்கூடிய, வெகுமதியளிக்கக்கூடிய மற்றும் கால எல்லைக்குட்பட்ட குறிக்கோள்களை நிருவுதல் அவசியமாகும். வாழ்க்கையில் நீங்கள் எதனை அடைய விரும்புகின்றீர்கள் என்பதனை நினைத்து அவற்றை அடைவதற்கான குறிக்கோள்களை நிருவுங்கள். உங்களது குறிக்கோள்கள் குறுங்காலத்தை (ஒரு வருடம் அல்லது அதற்கு குறைந்தது) உடையதாக அல்லது மத்திய காலத்தை (இரண்டு அல்லது ஐந்து வருடங்கள்) கொண்டவையாக இருக்கலாம். உதாரணமாக, நீங்கள் ஐந்து வருடக் காலத்தில் ஒரு துண்டு காணியினை வாங்க விரும்பினால், அதற்காக இப்போதே சேமிக்க ஆரம்பியுங்கள். அதேபோன்று குறிக்கோள்கள், சௌகரியமான பணிஓய்வுக்காலத்தைப் பெற்றுக்கொள்ளுதல் போன்ற நீண்ட காலத்தை (ஐந்து வருடங்களுக்கு மேற்பட்டவை) உடையவையாக இருக்கலாம். உங்களுக்கு முக்கியமான ஒன்றை (வெகுமதியளிக்கக்கூடியது) அடைவதற்காக நீங்கள் முயற்சிப்பீர்களாயின், உங்களிடம் ஓர் குறிக்கோளும் கால எல்லைக்குட்பட்ட திட்டமொன்றும் இருந்தால் நீங்கள் அனேகமாக வெற்றியடைவீர்கள்.



## 3. உங்களது தெரிவுகளை இனங்காணுங்கள் - உங்களது தேவைகள் மற்றும் உங்களது விருப்புகள்

**விருப்புகள்** உங்களது தேவைகளுக்கும் (நீங்கள் வாழ்வதற்கு நீங்கள் கட்டாயம் வைத்திருக்கவேண்டியவை) உங்களது விருப்புகளுக்கும் (நீங்கள் விருப்பப்படுவது ஆனால் அவை இன்றி வாழலாம்) இடையேயாயன வித்தியாசத்தினை அறிந்துகொள்வது முக்கியமானதாகும். சுகபோகங்களைப் பற்றி எண்ணுவதற்கு முன்னர் உங்களது அடிப்படை தேவைகளை சந்திப்பதற்கு திட்டமிடுங்கள். உதாரணமாக, தொலைக்காட்சிப் பெட்டி போன்ற புதிய இலத்திரணியல் சாதனங்கள், மிகவும் விலை உயர்ந்த ஆடைகள் மற்றும் வெளியே சென்று உணவு உண்பது போன்ற சுகபோகங்களுக்கு உங்களது பணத்தினை செலவழிப்பதற்கு முன்னர் உங்களது பிள்ளைகளது பாடப்புத்தகங்களை கொள்வனவு செய்வதனை உறுதி செய்தல் வேண்டும். அனேகமானோர் தாங்கள் விரும்பாத நபர்களிடம் தம்மை அடையாளப்படுத்திக்கொள்வதற்காக, தமக்கு தேவைப்படாத பொருட்களை, தம்மிடம் இல்லாத பணத்தைக் கொண்டு கொள்வனவு செய்கின்றார்கள். பணத்தை செலவழிக்கும்போது உங்களது உணர்ச்சிகள் உங்களைக் கட்டுப்படுத்துவதற்கு இடமளியாதீர்கள். நிதியியல் ரீதியாக சுதந்திரமான நபர்கள் அவர்களது நண்பர்கள் புதிய கையடக்கத் தொலைபேசியினை வைத்திருப்பதனை இட்டு கவலைகொள்ளமாட்டார்கள். ஒவ்வொரு வார இறுதியிலும் அவர்களது நண்பர்கள் இராப் போசனத்திற்கு வெளியே செல்கிறார்கள் என்பதையிட்டும் எவ்வித சலனமும் கொள்ளமாட்டார்கள்.



**4. உங்களுக்கு எது முக்கியம் என்பதனை தீர்மானியுங்கள்** நீங்கள் முன்னர் நிருவிய நிதியியல் குறிக்கோள்கள் உங்களது நிதியியல் முகாமைத்துவத்தினை ஒழுக்கப்படுத்துவதுடன் உங்களது குறிக்கோள்களை அடைவதற்கு வழிசமைக்கும். இதற்கான ஈடுகட்டலானது, வாய்ப்புச் செலவினம் (ழிழசவரளைவல உழளவ) அல்லது ஒரு தெரிவினை மேற்கொள்ளும்போது அதற்குப் பதிலாக நீங்கள் வேறொன்றினை கைவிடுவது எனக் கொள்ளலாம். உங்களது நீண்டகால குறிக்கோள்களை அடையவேண்டுமாயின், உங்களது குறுங்கால இன்பங்களை தியாகம் செய்தல் வேண்டும். உதாரணமாக, எதிர்கால பணிஓய்வு நிதியம் எதிர் புகைபிடிப்பதன் மூலம் ஏற்படும் சொற்ப நேர இன்பம். நீங்கள் தினமும் மூன்று சிகரட்டுகளை புகை பிடிப்பீர்களாயின் ஒரு சிகரட் ரூபா 50 வீதம், ஒரு வருடத்திற்கு ரூபா 54,750 தேவைப்படும். நீங்கள் புகை பிடிப்பதனை நிறுத்தினால், நீங்கள் ஒரு வருடத்திற்கு ரூபா 54,750 இனை சேமிக்கலாம். 30 வருட காலத்திற்கு வருடாந்தம் ரூபா 54,750 வீதம் 10©HARAN Graph (தேசி சேமிப்பு வங்கியின் நிலையான வைப்பில்) தொடர்வட்டிக்கு நீங்கள் முதலீடு செய்வீர்களாயின், 30 வருடங்களின் பின்னர் உங்களுக்கு ரூபா 12 மில்லியன் பணிஓய்வு நிதியாகக் கிடைக்கும்.



**5. ஓர் பாதீட்டினை (Budget) தயாரித்துக்கொள்ளுங்கள்** முதலாம் படியானது உங்களது நிதியியல் நிலைமையினை தெளிவுபடுத்தியிருக்கும். உங்களது செலவினம் உங்களது வருமானத்திலும் பார்க்க அதிகமாக இருத்தல், உங்களது சொத்துக்களிலும் பார்க்க பொறுப்புக்கள் அதிகமாக இருத்தல் அல்லது உங்களது சேமிக்கும் ஆற்றலிலும் பார்க்க உங்களது குறிக்கோள்கள் மிகவும் அதிகமாக காணப்படுதல் சாதாரணமாகும். உங்களது முதன்மை நிலையினை தீர்மானித்ததன் பின்னர் அவற்றிற்கு எவ்வளவு செலுத்தவேண்டும் என்பதனை கண்டறியுங்கள். உங்களது உழைப்பிலும் பார்க்க அதிகமாக செலவழிக்காமல் இருப்பதனை உறுதிசெய்வதற்காக திட்டமிடுங்கள். இதற்கு முன்னோக்கியாக பாதீடொன்றினை தயாரித்தல் காணப்படுகின்றது. விலைகள் பொதுவாக காலப்போக்கில் அதிகரிக்கும் என்பதனை கருத்திற்கொண்டு, உங்களது நிதியியல் குறிக்கோள்களை அடைவதற்கு கவனமாக செயற்படுங்கள். அதாவது எங்கிருந்து வருமானத்தினைப் பெற்றுக்கொள்வது என்பதனை திட்டமிடுவதாகும். உங்களது வருமானத்திலிருந்து போதிய பணத்தினைப் பெற்றுக்கொள்ள இயலாவிட்டால், பகுதிநேர வேலை, வீட்டிலிருந்தான தொழில்கள் மூலம் மேலதிக பணத்தினை திரட்டிக்கொள்ளுங்கள். உங்களது செலவுகளைக் குறைத்து வருமானத்தினை உருவாக்கும் சொத்துக்களை கட்டியெழுப்புங்கள். குறைவாக செலவழிப்பதற்கான வழிமுறைகளை கண்டறியுங்கள். இதன் மூலம் உங்களது நிதியியல் குறிக்கோள்களை அடைவதற்கு துணைபுரிவதற்காக ஒரு தொகை பணத்தினை சேமிக்கமுடியும். பழைய



செலவழிப்புப் பழக்கங்களை விட்டுவிடுதல் கடினமாக இருக்கலாம், ஆனால் உங்களது குறிக்கோளினைப் பற்றி ஞாபகப்படுத்திக்கொள்ளும்வரை நீங்கள் ஊக்கமாக காணப்படுவீர்கள். சேமிப்பிற்கு அல்லது கடனைக் குறைப்பதற்கான பணத்தினை தேடிக்கொள்ளும் சிரமமற்ற வழியாக காணப்படுவது என்னவெனில், உங்களது வருமானம் கிடைத்தவுடன் அதற்கான பணத்தை முதலில் அதிலிருந்து பெற்றுக்கொள்வதாகும். நீங்கள் காணாதவற்றை உங்களால் தவறவிடவும் முடியாது அதேபோல் அவற்றிற்கு உங்களால் செலவுசெய்யவும் முடியாது.

---

**6. அவதானமாயிருங்கள், உங்களது முன்னேற்றத்தினை அளவிடுங்கள் மற்றும் கண்காணியுங்கள் மற்றும் உங்களது திட்டத்தினை மீளாய்வு செய்யுங்கள்** உங்களது குறிக்கோள்களை பற்றிய பதிவீடுகளை வைத்திருங்கள், அவற்றை அடையும்போது முக்கியமான மைற்கற்களை அடையாளமிட்டுக்கொள்ளுங்கள். காலாகாலம் இந்த தகவலினை திரும்பப் பார்க்கவும். குறிக்கோள்களை எழுதிவைத்தல், அவற்றை மீளாய்வு செய்தல் மற்றும் உங்களது முன்னேற்றத்தினை பதிவு செய்து வைத்தல் என்பன உங்களை ஊக்குவிக்கும். நீங்கள் உங்களது திட்டத்தினை பின்பற்றும்போது நிதியியல் திட்டமிடலானது தொடர்கின்றது. நீங்கள் முதிர்வடையும்போது, உங்களது நிதியியல் குறிக்கோள்கள் மற்றும் தேவைகள் மாற்றமடையலாம். அதாவது உங்களது நிதியியல் திட்டமும் மாற்றமடைதல் வேண்டும். ஒவ்வொரு வருடமும் இதனை நீங்கள் மீள் மதிப்பிட்டு திருத்தியமைத்துக்கொள்ளுதல் வேண்டும்.



# நிதியியல் திட்டமிடல் ஏன் முக்கியமானது?



1. செல்வத்தினை கட்டியெழுப்புவதற்கு சிறந்த வழியாக ஓர் ஒழுக்கமான, திட்டமிடப்பட்ட செயல்முறை காணப்படுகின்றது.

2. "உடனடியாக பணக்காரனாக்கும்" திட்டங்களை தவிர்ப்பதற்கு துணைபுரிகின்றது.

3. யதார்த்தமான குறிக்கோள்கள் அமைக்கப்படுவதனை உறுதிசெய்யும். இதன் பின்னர் இந்த குறிக்கோள்களை அடைவதற்காக சுய கட்டுப்பாடுடைய அணுகுமுறை பிரயோகிக்கப்படும்.

4. நீண்டகால குறிக்கோள்கள் பற்றி யோசிப்பதற்கும் திட்டமிடுவதற்கும் உங்களை நிர்ப்பந்திக்கும்.

5. ஓர் திட்டம் அமுலிலுள்ளபோது மாற்றங்கள் மற்றும் திருத்தங்களை இலகுவாக மேற்கொள்ளலாம்.

6. தேவைப்படும்போது பங்காளிகளுக்கு (துணைவி, பிள்ளைகள், வாரிசுகள்) தெளிவினை வழங்கும்.

# 04 சாமர்த்தியமாக கடன் பெறுங்கள்

## ஏதேனும் நிதியியல் நிறுவனத்திடமிருந்து கடனைப் பெறுவதற்கு தீர்மானிப்பதற்கு முன்னர் கவனிக்க வேண்டிய வினாக்கள்

உங்களது வாழ்க்கையின் ஓர் காலகட்டத்தில் நீங்கள் பணத்தை கடனாக பெறவேண்டி இருக்கலாம். நீங்கள் உங்கள் நிதியியல் ஸ்திரத்தன்மையினை பேணவேண்டுமாயின், நீங்கள் சாமர்த்தியமாக கடன் பெறுதல் அவசியமானதாகும்.

ஏதேனும் தேவைக்காக கடனைப் பெற்றுக்கொள்வதற்கு எண்ணும்போது, பின்வரும் காரணங்களை கவனிக்கத் தவறாதிருப்பதுடன் ஏதேனும் சந்தேகங்களை தெளிவுபடுத்திக்கொள்வதற்காக கடன் கொடுப்பவரிடம் பின்வரும் வினாக்களைக் கேளுங்கள். இந்தக் காரணிகளைக் கருத்திற்கொண்டு பல்வேறு கடன் கொடுநர்களிடமிருந்து சிறந்த கொடைமுனைவினைத் (offer) தெரிவுசெய்யுங்கள்.

மிகவும் முக்கியமான காரணியாகக் காணப்படுவது என்னவெனில், ஒவ்வொரு மாதமும் அல்லது வாரமும் கடனை திருப்பிச் செலுத்துவதற்கு அவசியமான மேலதிக வருமானம் உங்களிடம் உள்ளதா என்பதனை நிச்சயப்படுத்திக்கொள்ளல் வேண்டும். எந்த கடன் வழங்கும் நிறுவனத்தின் உத்தியோகத்தரும் நேர்காணலின்போது உங்களிடம் இக்கேள்வியினை கேட்பதுடன் இதன் அடிப்படையிலேயே நீங்கள் எந்தளவுக்கு கடனைத் திருப்பிச் செலுத்தக்கூடிய ஆற்றலைக் கொண்டுள்ளீர்கள் என்பதனை தீர்மானிப்பார்.

**“ஒவ்வொரு மாதமும் அல்லது வாரமும் கடனைத் திருப்பிச் செலுத்துவதற்குத் தேவையான செலவழிப்பு வருமானம் அல்லது உபரி உங்களிடம் உள்ளதா என்பதைச் சரிபார்ப்பது மிக முக்கியமான ஒரே விடயம்?”**

உங்களது கடனைத் திருப்பிச் செலுத்தக்கூடிய கொள்திறனை நீங்கள் கொண்டுள்ளீர்கள் என்பதனை நிரூபிக்க முடியுமாயின், நீங்கள் உங்களது நிதியியல் நிறுவனத்திற்கு உங்களது கணக்கிலிருந்து மாதாந்தம் அல்லது வாராந்தம் கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கான நிலை ஆணை (standing order) ஒன்றினை வழங்குதல் வேண்டும். இல்லாவிடின், நீங்கள் கணக்கு வைத்திருக்கும் வங்கிக்கு குறிப்பிட்ட தொகை பணத்தை மாற்றல் (transfer) செய்யுமாறும் அறிவிக்கலாம்.

ஏனைய முக்கியமாக கவனிக்கவேண்டிய விடயங்கள்

1. நான் மெய்யாகவே கடன்பெற வேண்டுமா? இக்குறிப்பிட்ட பொருளை வாங்குவதற்காக நான் சேமித்து எதிர்காலத்தில் பணத்தை செலுத்தி வாங்குதல் சிறந்ததா? ஒவ்வொரு கடனும் ஓர் கிரயத்துடனேயே வருகின்றது. கடனுக்கான விளைவுறு வட்டி வீதம் (effective interest rate) எப்போதும் வருடாந்த வைப்பு வட்டி வீதத்திலும் பார்க்க அதிகமாகக் காணப்படும். விளைவுறு வட்டி வீதமானது வருடாந்த விளைவுறு வீதம் (Annual Effective Rate = AER) என்றழைக்கப்படும்.

2. ஆரம்பக் கொடுப்பனவு (down payment) எவ்வளவாகக் காணப்படும்? ஆரம்பக் கொடுப்பனவுகள் நீங்கள் கடன்பெற வேண்டிய தொகையினை சிறியதாக்கும். கொள்வனவுக்காக அதிகளவு பணத்தினை முற்கொடுப்பனவாக செலுத்தும்போது அதிகளவு பணத்தினை நீங்கள் கடன் இருக்கும் காலப்பகுதியில் சேமிக்கலாம்.

**3.** கடன் பெறுவதற்கான நோக்கம் - இது ஆக்கவளமுடைய தேவைக்காகவா? அதாவது மேற்கொள்ளப்பட்ட முதலீடானது எனக்கு வருமானத்தினை உருவாக்கும் ஆற்றலைக் கொண்டுள்ளதா? இதன் மூலம் கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கான கிரயத்தினை உள்ளீர்க்க முடியுமா? கடனைப் பெறுவதன் மூலம் மேற்கொண்ட முதலீட்டிலிருந்து பணத்தினை சேமிப்பதற்கு அல்லது போதியளவு வருமானத்தினை உருவாக்குவதற்கான ஆற்றல் என்னிடம் உள்ளதா?

**4.** கடன் கொடுப்பவரினால் வேண்டப்படும் பிணை அல்லது ஈடு (security or collateral) (உங்களுக்கு சொந்தமான ஏதேனும்) அல்லது உத்தரவாதம் என்ன? நீங்கள் பெற்றுக்கொண்ட கடனைத் திருப்பிச் செலுத்தத் தவறினால், கடன் கொடுத்தவருக்கு நீங்கள் கொடுத்த ஈட்டுச்சொத்தினை சொந்தமாக்கிக்கொள்வதற்கான சட்டரீதியான உரிமை உண்டு அல்லது உத்தரவாதமளித்தவரை நீங்கள் பெற்றுக்கொண்ட கடனைத் திருப்பிச் செலுத்துமாறு கேட்கும் உரிமை உண்டு. பிணையாக அல்லது ஈடாக சொத்து எதனையும் பெற்றுக்கொள்ளாத கடன் கொடுநர்கள், அதிக வட்டியினை கடனுக்கு அறவிடுவார்கள். ஏனெனில், பிணைச் சொத்து ஏதுமின்றி கடன் வழங்குவது இடர்நேர்கை மிக்கதாகும். உங்களிடமிருந்து பிணைச் சொத்து எதனையும் கேட்காமல் எவரேனும் உங்களுக்கு கடன் வழங்க முன்வருவார்களாயின், கடனின் கிரயம் உட்பட அனைத்து நியதிகள் மற்றும் நிபந்தனைகளை நன்கு அறிந்திருங்கள்.

**5.** கடனுக்காக என்னிடமிருந்து அறவிடப்படும் மொத்த கிரயம் மற்றும் விளைவுறு வட்டி வீதம் என்ன? விளைவுறு வட்டி வீதமானது கடனின் காலப்பகுதி அல்லது கடனுக்கு அடிக்கடி திருப்பிச் செலுத்தவேண்டிய வட்டி மற்றும் தவணைப்பணம் (installment) ஆகியவற்றின் காலம் என்பவற்றில் தங்கியுள்ளது. பொதுவாக, இது மாதாந்தமாக காணப்படுகின்றது ஆனால் பிணைச்சொத்தின்றி வழங்கப்படும் நுண் நிதியளித்தல் கடனுக்கு வாரந்தம் அல்லது நாளாந்தமாக காணப்படலாம்.

**6.** வட்டி கணிப்பீடுகள் - நிலையானது அல்லது மாற்றமடையக்கூடியது, சமமான அல்லது குறைவடையும்? வட்டி எவ்வாறு கணிப்பிடப்படும்? கடனுக்கான காலப்பகுதி முழுவதும் ஒவே விதமாகக் காணப்படும் நிலையான வட்டி என்னிடமிருந்து அறவிடப்படுமா அல்லது கடனுக்கான காலப்பகுதியில் சந்தை வட்டிவீதங்களில் காணப்படும் அதிகரிப்பின் பயனாக காலாகாலம் அதிகரிக்கக்கூடிய மாற்றமடையும் வட்டி வீதம் அறவிடப்படுமா? நிலையான வட்டி வீதமானது மாற்றமடையும் வட்டி வீதத்திலும் பார்க்க அதிகமாக காணப்பட்டாலும், இது உங்களது எதிர்கால கொடுப்பனவுகளை துல்லியமாக கணிப்பிடுவதற்கு வசதியளிக்கின்றது. மாற்றமடையும் வட்டி வீதங்கள், சந்தை வட்டி வீதங்கள் உயர்வடையுமாயின், கடன் கொடுநரின் விருப்பத்திற்கேற்ப எதிர்காலத்தில் உங்களை உயர்வான மாதாந்த கொடுப்பனவினை செலுத்துமாறு பணிக்கும். வட்டியானது சமமான அல்லது குறைவடையும் அடிப்படையில் கணிப்பிடப்படலாம். 15 சதவீத குறைவடையும் வட்டியினைக் கொண்ட கடனானது 15 சதவீத சமனான வட்டியினைக் கொண்ட கடனிலும் பார்க்க குறைந்த கிரயத்தினைக் கொண்டிருக்கும். இது ஏனெனில், குறைவடையும் வட்டி வீதத்தில் நீங்கள் மெய்யாகவே கடன் கொடுநருக்கு செலுத்தவேண்டிய தொகையில் மாத்திரமே வட்டியினைச் செலுத்துவீர்கள். சமனான வட்டி வீதத்தையுடைய கடனில் கடன் தொகையானது முழுவதுமாகத் திருப்பிச் செலுத்தப்படும்வரை ஆரம்பக் கடன் தொகையில் வட்டியினைச் செலுத்துவீர்கள்.

**7.** மேலதிகமாக அறவிடப்படும் ஏனைய கட்டணங்கள் என்ன? உதாரணமாக, சில கடன்களுக்கு முன்இறுதிக் கட்டணங்கள் (front-end fees), முத்திரைத் தீர்வை, முன்பாகவே மீள்செலுத்தல் கட்டணங்கள், கடன் செயலாக்கல் கட்டணங்கள் என்பனவாகும். இக்கட்டணங்கள் பேச்சுவார்த்தைக்குட்பட்டவை மற்றும் சில நிதியியல் நிறுவனங்கள் வாடிக்கையாளர்களைக் கவர்வதற்காக இக்கட்டணங்களை அறவிடுவதில்லை. எனவே, நீங்கள் கடன் கொடுக்கல் வாங்கல் பங்காளியினைப் பற்றிய தீர்மானம் மேற்கொள்வதற்கு முன்னர் ஏனைய

நிதியியல் நிறுவனங்களையும் விசாரித்துப் பாருங்கள். இந்த போட்டித்தன்மை வாய்ந்த சந்தையில் நீங்கள் சிறந்த வாணிபத்திற்காக சற்று சிரமப்பட்டால் நீங்கள் நன்மையடையலாம்.

**8.** நீங்கள் ஓர் தவணைப்பணத்தை செலுத்துவதற்கு தவறினால் அறவிடப்படும் தண்டனை வட்டி மற்றும் அபராதம் என்ன?

**9.** கடன் ஒன்றை பெற்றுக்கொள்வதிலுள்ள வரித் தாக்கம் என்ன? தற்போது, அனைத்து வைப்பு வட்டியிலும் 5 சதவீத வரி அறவிடப்படுகின்றது. ஆனால் ஏதேனும் கடனுக்கு, தனிப்பட்ட நபர்களினால் பெறப்படும் வீட்டு கடன் உள்ளடங்களாக, எவ்வித வரிச் சலுகையும் வழங்கப்படுவதில்லை. வணிக இலாபங்களைப் பொறுத்தவரையில் வட்டி செலுத்தப்பட்டதன் பின்னர் உள்ள இலாபத்திற்கே வரி அறவிடப்படும். எனவே வணிகமொன்றிற்கு கடனை பெற்றுக்கொள்வது நன்மையானதாகும்.

கடன் ஒன்றினைப் பெற்றுக்கொள்வதற்கான தீர்மானத்தினை மேற்கொள்ளும்போது, மாதாந்தக் கொடுப்பனவு தொகையினை உங்களது மாதாந்த பாதீட்டுடன் சேர்த்துக்கொள்ளுங்கள். புதிய கொள்வனவிற்கான தொகையினை உள்ளிடும்போது மேற்குறிப்பிட்ட வழிகாட்டிகளை கருத்திற்கொள்ளுங்கள். கொள்வனவிற்கான கொடுப்பனவின் தொகையானது பரிந்துரைகளிலும் பார்க்க மிகையாகின், இது உங்களுக்கு பணத்தை சேமிப்பதற்கு இடமளிக்காது அல்லது உங்களது மாதாந்த செலவினங்கள் மாதாந்த வருமானத்திலும் பார்க்க அதிகமாக காணப்படுவதனை விளைவிக்கலாம். நீங்கள் அதிகளவு பணத்தினை சேமிக்கும் வரை உங்களது கொள்வனவினை பிற்போடலாம். கட்டுப்படியாகக்கூடிய மற்றும் நிகரான பொருளை கண்டுபிடியுங்கள் அல்லது ஏனைய கடன்களை முழுவதுமாக திருப்பிச் செலுத்திவிடுங்கள்.

**வருடாந்த விளைவுறு வீதமானது பின்வருமாறு கணிப்பிடப்படுகின்றது:**

**$AER=[(1+r/n)^n -1]$**

**n =** வருடத்திற்கு எத்தனை முறை வட்டி செலுத்தப்படுகின்றது

**r =** பெயரளவு வட்டி வீதம்

வருடாந்த விளைவுறு வட்டியானது கடன் பெறுபவருக்கு கடனுக்கான மெய்யான கிரயத்தினைப் பற்றிய கருத்தினை வழங்குவதுடன், இது ஒரு வருடத்தின் பின்னர் முதிர்வடையும் ஓர் நிலையான வைப்பிற்கு கிடைக்கும் வருடாந்த வட்டி வீதத்துடன் ஒப்பிடக்கூடியதாகும்.

உதாரணமாக, பெயரளவில் 15% வட்டி மாதாந்தம் செலுத்தப்படுமாயின், அது வருடாந்த விளைவுறு வட்டி வீதமான 16.075% க்குச் சமனாகும். காணப்படும்.

**$[(1+0.15/12)^{12} -1] = 16.075\%$.**



நீங்கள் கடன் பற்றி தீர்மானம் மேற்கொள்வதற்கு முன்னர், மேற்குறிப்பிடப்பட்ட அவசியமானவற்றிற்கு போதுமான நேரம் செலுத்தாவிட்டால், நீங்கள் உங்களை விடுவித்துக்கொள்வதற்கு முடியாதளவு கடன் பொறிக்குள் சிக்கிக் கொள்வீர்கள். சரியான கேள்விகளை கடன் வழங்கும் உத்தியோகத்தரிடம் மற்றும் நிதியியல் நிறுவனத்திடம் கேட்பது நீங்கள் சாமர்த்தியமானவர் என்றும் உங்களை ஏமாற்ற இயலாது என்றும் காண்பிக்கும். இல்லாவிடின், நிதியியல் நிறுவனமானது உங்களது நிதியியல் அறியாமையில் பயன்பெறுவதற்கு முயற்சிக்கும். எந்த சூழலிலும் இவ்வாறு நடைபெறுவதற்கு இடமளியாதீர்கள். கொடைமுனைவு கடிதத்தில் கடன் சம்பந்தமான அனைத்து நியதிகளையும் தெளிவாகக் குறிப்பிட்டு பெற்றுக்கொண்டீர்களாயின் இதனை நீங்கள் ஏனைய நிதியியல் நிறுவனங்களினால் வழங்கும் கடன்களுடன் ஒப்பிட்டுக்கொள்ளலாம். இது உங்களுக்குச் சார்பாக சரியான தீர்மானத்தினை மேற்கொள்வதற்கு அவசியமான போதுமான தகவல்களை உங்களுக்கு வழங்கும்.

# வன்மம் மிக்க கடன் கொடுநர்களிடமிருந்து (loan sharks) உங்களை பாதுகாப்பது எப்படி?

வன்மம் மிக்க கடன் கொடுநர்களையிட்டு உசாராயிருங்கள். கடன் பத்திரங்களை வாசித்து புரிந்துகொள்வதனை ஊக்குவிக்காத இலகு கடன் கொடுநர்களை இயலுமானவரை தவிர்த்துக்கொள்ளுங்கள். அவர்கள் உங்களில் பிரயோசனம் அடைவதற்கு முயற்சிக்கலாம். எப்போதும் அனைத்து கடன் பத்திரங்களையும் வாசிக்கவேண்டும் என நிர்ப்பந்திப்பதுடன் நீங்கள் கையொப்பமிடுவதற்கு முன்னர் கடனுடன் தொடர்புபட்ட அனைத்து நிபந்தனைகளைப் புரிந்துகொள்வதற்காக போதிய விளக்கங்களைக் கேளுங்கள். இவ்வாறு கேட்பது உங்களது உரிமையாகும் என்பதுடன் நீங்கள் கடனைப் பெறுவதற்கு இணங்குவதற்கு முன்னர் அவசியமான அனைத்து தகவல்களையும் வழங்கவேண்டிய கடப்பாடு கடன் கொடுநருக்கு உண்டு. எதிர்காலத்தில் அருவருப்பான எதிர்பார அதிர்ச்சிகளைத் தவிர்ப்பதற்காக நீங்களும் கடன் கொடுநரும் தகவல்களை வெளிப்படுத்துவதில் நேர்மையானவர்களாக இருத்தல் வேண்டும். எந்நேரமும் மிக சிறிய எழுத்துக்களில் அச்சிடப்பட்டவற்றையும் மறுதலிப்புகளையும் கவனமாக வாசித்தறிந்து ஏன் இந்த உட்பிரிவுகள் காணப்படுகின்றன என்று நிதியியல் நிறுவனத்திடம் வினா எழுப்பவும்.

அனேகமான கடன் கொடுநர்கள் கீழ்காணும் விதிமுறைகளைப் பயன்படுத்தி காலாகால தவணைக் கொடுப்பனவினை கணிப்பிடுவார்கள். கடன் தவணைப் பணமும் வட்டி வீதமும் வருடாந்தம், மாதாந்தம், மற்றும் வாராந்தம் அடிப்படையில் குறிப்பிடப்படும்போது அதிக வேறுபாடுகள் காணப்படலாம்.

**காலாகால தவணைக் கொடுப்பனவு கணிப்பீடு**

$$P \,.\, [\frac{r(1+r)^n}{(1+r)^n-1}]$$

**P = கடனாகப் பெற்றுக்கொண்ட முதல் (சைைஉ‌யிட யஅழரவெ)**

**r = காலாகால வட்டி ( வட்டிவீதமானது வருடாந்தமாகக் காணப்படின், அதனை தவணைக் கொடுப்பனவு எண்ணிக்கையினால் வகுத்தல் வேண்டும் )**

**n = ஒரு வருடத்தில் காணப்படும் தவணைக்கொடுப்பனவு எண்ணிக்கைகள்**

**உதாரணமாக, ரூபா 10,000 கடனுக்கான காலாகால கொடுப்பனவு 12 மாத காலப்பகுதியில் 15% வருடாந்த வட்டியில் (மாதாந்தம் 1.25 சதவீதமாகக் காணப்படும்)**



**வருடாந்த வட்டி வீதம்**

வருடாந்தம் 15 சதவீத வட்டியில் நீங்கள் ஒரு வருடத்திற்கு ரூபா 10,000 இனை கடனாகப் பெற்றீர்களாயின், நீங்கள் மாதாந்தத் தவணைக் கொடுப்பனவாக ரூபா 902.58 இனை செலுத்துவீர்கள். ஒரு வருடத்திற்கு உங்கள் கடனுக்கான மொத்தக் கொடுப்பனவானது ரூபா 10,831 உடன் ஏதேனும் கட்டணங்கள் இருப்பின் அவையும் சேர்ந்தான மொத்தமாகும். நீங்கள் மொத்த வட்டியாக ரூபா 831 இனையும் கடனாகப் பெற்றுக்கொண்ட ரூபா 10,000 இனையும் செலுத்துவீர்கள். விளைவுறு வட்டி வீதமானது 16.1% ஆகக் காணப்படுகின்றது.

**மாதாந்த வட்டி வீதம்**

நீங்கள் ரூபா 10,000 இனை 12 மாத காலப்பகுதிக்கு மாதாந்தம் 5 சதவீத வட்டிக்கு கடன் ஒன்றைப் பெற்றீர்களாயின், நீங்கள் மாதாந்த தவணைக் கொடுப்பனவாக ரூபா 1,128.25 இனை, அதாவது

$$-10,000 \,.\, [\frac{0.05(1+0.05)^{12}}{(1+0.05)^{12}-1}]$$

இனை செலுத்துவீர்கள். உங்களது கடனுக்கான மொத்தக் கொடுப்பனவானது ரூபா 13,539.05 உடன் ஏதேனும் கட்டணங்கள் இருப்பின் அவையும் சேர்ந்தான மொத்தமாகும். நீங்கள் மொத்த வட்டியாக ரூபா 3,539.05 இனையும் கடனாகப் பெற்றுக்கொண்ட ரூபா 10,000 இனையும் செலுத்துவீர்கள். விளைவுறு வட்டி வீதமானது 79.6% ஆகக் காணப்படுகின்றது.

**வாராந்த வட்டி வீதம்**

நீங்கள் ரூபா 10,000 இனை 52 வாரங்களுக்கு வாராந்தம் 2 சதவீத வட்டிக்கு கடன் ஒன்றைப் பெற்றீர்களாயின், நீங்கள் வாராந்த தவணைக் கொடுப்பனவாக ரூபா 311.09 இனை, அதாவது $-10{,}000 . [\frac{0.02(1+0.02)^{52}}{(1+0.02)^{52}-1}]$ இனை செலுத்துவீர்கள். உங்களது கடனுக்கான மொத்தக் கொடுப்பனவானது ரூபா 16,176.72 உடன் ஏதேனும் கட்டணங்கள் இருப்பின் அவையும் சேர்ந்தான மொத்தமாகும். நீங்கள் மொத்த வட்டியாக ரூபா 6,176.72 இனையும் கடனாகப் பெற்றுக்கொண்ட ரூபா 10,000 இனையும் செலுத்துவீர்கள். விளைவுறு வட்டி வீதமானது 180.0% ஆகக் காணப்படுகின்றது.



# கடனுக்குள் உள் நுழைவது இலகுவானது ஆனால் அதிலிருந்து வெளியே வருவது சிரமமானது



நீங்கள் பணத்தை கடனாகப் பெற்றால், எவ்வாறு அந்தக் கடன் பணத்தை நீங்கள் பயன்படுத்துவீர்கள் என்பதனையும் அதனை எவ்வாறு திருப்பிச் செலுத்துவீர்கள் என்பதனைப் பற்றியும் கவனமாகத் திட்டமிடுங்கள். எப்பொழுதும் கடனாகப் பெறும் பணத்தை எந்த நோக்கத்திற்காக கடனைப் பெற்றீர்களோ, அந்த நோக்கத்திற்காக மாத்திரம் பயன்படுத்துங்கள். உங்களது கடனுக்கான மொத்த கிரயத்தினை குறைத்தாலன்றி, இன்னுமோர் கடனைத் திருப்பிச் செலுத்துவதற்காக புதிய கடன் ஒன்றைப் பெறுவதனை தவிர்க்கவும். தற்போது நிலுவையிலுள்ள கடனைத் திருப்பிச் செலுத்துவதற்காக மேலதிக கடனைப் பெற்றுக்கொள்வது உங்களை கடன் பொறிக்குள் தள்ளிவிடுவதுடன் அதலிருந்து விடுபடுவது மிகவும் கடினமாகக் காணப்படும்.

உங்களது கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கு உங்களது பணம் உங்களுக்காக தொழிற்படச் செய்தல் வேண்டும். பெறுமதி உயர்வடையக்கூடிய ஒரு துண்டு காணியினை வாங்குதல் போன்ற ஆக்கவளமுடைய முதலீடுகளுக்காக கடன் பெறுங்கள். மாற்றாக இந்தக் கடன் பணத்தைக் கொண்டு ஏதேனும் ஒன்றை வளருங்கள் அல்லது உங்களது வணிக வாய்ப்புகளை விரிவுபடுத்துங்கள். கடனைத் திருப்பிச் செலுத்திவிட்டு பின்னர் தேவையாயின் அதிகளவு கடனைப் பெற்றுக்கொள்ளுங்கள். கடனை மிகவும் புத்திசாலித்தனமாக பயன்படுத்துங்கள். கடனை பெற்றுக்கொள்வதற்கு அவசரப்படவேண்டாம். ஆடம்பரங்களுக்காக அல்லது பெறுமதி குறைவடையக்கூடியவைக்காக (உதாரணமாக வெளிநாட்டு பிரயாணம், வீட்டு இலத்திரணியல் உபகரணங்கள், விலை உயர்ந்த ஆடைகள் முதலியன) கடன் பெறுவதற்கு முன்னர் இரண்டு முறை சிந்தியுங்கள். நுகர்விற்காக கடன் பெறுவது ஆக்கவளமற்றதாகும்.

ஒப்பந்தத்தில் குறிப்பிட்டுள்ளவாறு உரிய நேரத்திற்கு உங்களால் திருப்பிச் செலுத்தமுடியாது போய்விடலாம் என நீங்கள் எண்ணுவீர்களாயின், உங்களது கடன்கொடுநருக்கு முன்கூட்டியே அறிவித்து உங்களது கடனைத் திருப்பிச் செலுத்தும் நிபந்தனைகள் குறித்து பேச்சுவார்த்தை நடத்திக்கொள்ளுங்கள். காசாக்க முடியாத காசோலையினை (உங்களது கணக்கில் போதியளவு பணமில்லாதபோது காசோலையொன்றினை வழங்குவது குற்றச் செயலாகும்) செலுத்தி நேரத்தை பிற்போட முயற்சிக்காதீர்கள். பொய்யான அல்லது தவறாக இட்டுச்செல்லும் தகவல்களை வழங்க வேண்டாம்.

**“கடனின் மொத்தச் செலவைக் குறைக்கும் வரை, வேறொரு கடனை அடைப்பதற்காக கடன் வாங்குவதைத் தவிர்க்கவும். ஏற்கனவே உள்ள கடனைச் செலுத்துவதற்கு அதிகமாகக் கடன் வாங்குவது, கடன் பொறியில் உங்களை ஆழமாக்கும்.”**


CFA Society Sri Lanka
CSE COLOMBO STOCK EXCHANGE Creating Wealth and Value

ஏனையோா் கடன் பெறுகிறாா்கள் என்பதற்காக நீங்கள் கடன் பெறவேண்டாம். உங்களைச் சுற்றியுள்ள ஏனையோா் கடன் பெறுகின்றாா்கள் என்பதற்காக நீங்கள் கடன் பெறுதல் விவேகமான செயலல்ல. உங்களுக்கு மெய்யாகவே கடன் தேவைதானா என்பதனை வினவிக்கொள்ளுங்கள். அனேகமாக, கடன் பெறுவதிலும் பாா்க்க சேமித்தல் சிறந்தது. கடைசி கட்ட முயற்சியாக மாத்திரமே கடனைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

உயா்ந்த வட்டியினைக் கொண்ட கடனட்டை நிலுவையானது கொடுப்பனவினை மேற்கொண்டதன் பின்னா் மிகவும் குறைவடைவதனை எப்போது நீங்கள் இறுதியாக கண்டீா்கள்? உயா் வட்டி கடனுக்குள் பிரவேசிக்கும்போது நீங்கள் தவிா்க்கமுடியாத தொடா்வட்டி விசைக்கு எதிராக தற்போது போராடுகின்றீா்கள். ஓரிரவில் எவரும் மெய்யான செல்வ வளத்தினை அடையமுடியாது. அதேபோன்று ஓரிரவில் எவரும் முறிவடைந்தவராக முடியாது. இந்த விதிக்கான விதிவிலக்கானது நீங்கள் காலப்போக்கில் எங்கிருக்க வேண்டுமோ அந்த நிலைமைக்கு பின்னடைவைக் கொடுக்கும். இதன் காரணமாகவே அனேகமான நேரங்களில் சீட்டிழுப்பு வெற்றியாளா்கள் பல வருடங்களின் பின்னா் முறிவடைந்தவா்களாகக் காணப்படுகின்றாா்கள். நீங்கள் வாழும் பழக்கமானது உங்களது செல்வத்தினை தீா்மானிக்கும்.

> உங்களது செலவழிப்புப் பழக்கமானது வட்டிக்கு எதிராக போராடுமாயின், உங்கள் ஆயுள் முழுவதும் இப்போராட்டத்தினை மேற்கொள்ளவேண்டியிருக்கும்.



# உங்களது கடனட்டைகளை புத்திசாலித்தனமாக பயன்படுத்துங்கள்

ஓர் கடன் அட்டையினைப் பெற்றுக்கொள்வது மிகவும் இலகுவானது, ஆனால் அதனை சமாளிப்பது இலகுவானதல்ல. கடன் அட்டையினைப் பயன்படுத்தல் என்பது பணத்தை கடனாகப் பெறுவதாகும். நீங்கள் பெற்ற கடனை திருப்பிச் செலுத்துதல் வேண்டும். கடன் அட்டைகளைப் பயன்படுத்தும்போது பின்வரும் நிதியியல் ஒழுக்கங்களை பேணுதல் மிகவும் முக்கியமானதாகும். ஒவ்வொரு மாதமும் செலுத்த வேண்டிய தினத்தில் நிலுவையிலுள்ள மொத்த தொகையினை ஒவ்வொரு கடன் அட்டைக்கும் செலுத்துதல் வேண்டும். ஒவ்வொரு மாதமும் உங்களால் முழுவதுமாக செலுத்தக்கூடிய தொகைக்கு அதிகமாக செலவழிக்க வேண்டாம். ஒவ்வொரு மாதமும் உங்களது மொத்த நிலுவையினையும் செலுத்தத் தவறினால், உங்களது நிலுவைக்கு வருடாந்தம் 28% வட்டி அல்லது மாதாந்தம் 2.33% வட்டி அட்டுறு செய்யப்படும். அதாவது இது அடுத்துவரும் மாதத்தில் நீங்கள் செலுத்தவேண்டிய மொத்த தொகையுடன் சேர்க்கப்படும். இதன்பின்னர், உங்களது நிலுவையிலுள்ள தொகையானது தொடர்ந்தும் விரைவாக வளர்ச்சியடையும். வட்டியின் மீதான வட்டியின் காரணமாக இது உங்களது கடன் வரையறை (credit limit) வரைக்கும் வளர்ச்சியடையும். மாதாந்தம் 2.3% சதவீதத்திற்கு கடனைப் பெற்று உங்களது நிதியியல் வாழ்க்கையில் எவ்வித முன்னேற்றத்தினையும் அடையமுடியாது என்பதுடன் கடன் பொறிக்குள் இருந்து விடுபடவும் இயலாதிருக்கும். கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கு பல வருடங்கள் செல்லலாம் என்பதுடன் பல தியாகங்களையும் மேற்கொள்ளவேண்டியிருக்கும். கடன் அட்டைக் கடனானது நீங்கள் உங்கள் மீது சுமத்திக்கொள்ளும் ஒன்று என்பதுடன் சிக்கலிலிருந்து வெளியே வருவதிலும் பார்க்க அதிலிருந்து விலகியிருப்பது சுலபமானதாகும்.

**கடன் அட்டையின் மோசமான பயன்பாடானது உங்களை வெகு விரைவாக கடன்பொறிக்குள் சிக்கவைக்கும்.**

கடன் அட்டையின் புத்திசாலித்தனமான பயன்பாடு என்னவெனில் நிதியியல் நிறுவனத்தினால் அனுமதிக்கப்படும் வட்டியற்ற காலப்பகுதியின் மூலம் பயன் பெற்று நிலுவையிலுள்ள தொகையினை மீளச்செலுத்துவதாகும். நீங்கள் கொள்வனவு செய்யவேண்டிய நேரத்தில் உங்களுக்கு அவசியமான பணம் இல்லாதிருக்கும்போது இவை 3 வாரக் காலப்பகுதியினை மீளச்செலுத்துவதற்கு வழங்குகின்றன. அனேகமானோர் இந்த அடிப்படை கோட்பாட்டினை புரிந்துகொள்வதில்லை.

செலுத்தவேண்டிய தினத்தில் நிலுவையிலுள்ள மொத்த தொகையினையும் செலுத்துமாறு ஓர் நிலையாணையினை வங்கிக்கு வழங்கியிருப்பீர்களாயின், உங்களது கடன் அட்டையின் மூலம் நீங்கள் எதனையும் இழக்கமாட்டீர்கள்.

அதேபோன்று வங்கியும் எதனையும் உழைக்காது. இந்த இடத்திலாவது வங்கி இழப்பாளராகவும் நீங்கள் வெற்றியாளராகவும் காணப்படுவீர்கள். உங்களது கடன் அட்டை மூலமான கொள்வனவு மேற்கொள்ளப்பட்ட தினத்திற்கும் இது உங்களது கணக்குக் கூற்றில் பட்டியல்படுத்தப்பட்டு மீளச் செலுத்துவதற்காக வழங்கப்பட்ட தினத்திற்கும் இடையேயான காலப்பகுதி 3 வாரங்களுக்கும் அதிகமானதாகக் காணப்படலாம். இது வட்டியற்ற கடனாகும்.

2017 ஏப்ரல் வரையில் செயலில் உள்ள மொத்த கடனட்டைகளின் எண்ணிக்கை 1.97 மில்லியனாக இருந்த வேளையில், வர்த்தக வங்கிகளுக்கு கடனட்டைதாரர்கள் 138.19

பில்லியன் ரூபாய் வழங்க வேண்டியுள்ளது. அண்ணளவாக, இலங்கையில் உள்ள 20இல் ஒருவர் கடனட்டை ஒன்றை வைத்திருப்பதாக இந்த எண்ணிக்கைகள் விளக்குகின்றன.

கடன் அட்டைக் கடனைத் தவிர்ப்பதற்கான முக்கிய கருவியாக காணப்படுவது உங்களால் தாங்கக்கூடியளவுக்கு மாத்திரமே அதனை பயன்படுத்துவதாகும். உங்களது வருமானத்திலும் பார்க்க அதிகமான வாழ்க்கை முறை தேவைக்கு கடன் அட்டையினை பயன்படுத்தத் தொடங்கியவுடன், நீங்கள் கடன் அட்டை கடனுக்குள் உட்புகும் இடர்நேர்கைக்கு முகங்கொடுப்பீர்கள். எவ்வளவு அதிகமான கடன் அட்டைகள் உங்களிடம் இருக்கின்றதோ, உங்களது தலைக்கு மேலாக கடனாளியாவது மிகவும் இலகுவானதாகும். பல கடன் அட்டை உரிமையாளர்கள் இரண்டு அல்லது மூன்று வெவ்வேறு கடன் அட்டைகளை வைத்துள்ளதுடன் ஆகக்கூடிய செலவழித்தல் வரையறையினை ஒரு அட்டை அடைந்தவுடன் இரண்டாவது அல்லது மூன்றாவது கடன் அட்டையினைப் பயன்படுத்தப்படுகின்றார்கள்.

நிதியியல் நிறுவனங்கள், கழிவிறக்கம் செய்யப்பட்ட விலைகளில் பல்வேறு பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதாக கவர்ச்சிகரமான விளம்பரங்களின் மூலம் நீங்கள் அவர்களின் பணத்தைக் கொண்டு வாழ்க்கையினை அனுபவிக்க வேண்டும் என உங்களை நம்பவைப்பதில் கைதேர்ந்தவையாகும். உங்களை கடன் பெறுவதற்கு இணங்கவைப்பதற்காக இந்நிறுவனங்கள் 12 முதல் 60 மாதங்கள் வரையான காலப்பகுதியில் எவ்வித வட்டியுமற்ற தவணைக் கொடுப்பனவுகளையும் உங்களுக்கு முன்வைக்கலாம். எவ்வாறாயினும், நீங்கள் அனுபவிக்கும் இத்தகைய வாழ்க்கை முறையானது சொற்ப காலத்திற்கு மாத்திரமே இருக்கும். இவ்வஞ்சகப் புகழ்ச்சியானது ஆடம்பரங்கள் உங்களது அவசியமான தேவைகளாக மாறும் எனக்கூறுவதுடன் இதன் மூலம் உங்களது வயது வந்த வாழ்க்கை முழுவதும் போட்டிமயமான வாழ்க்கைப் பொறிக்குள் சிக்கும் நிலைக்கு தள்ளப்படுவீர்கள். இந்த ஆடம்பரங்களை அனுபவிப்பதற்காக சம்பளத்திலிருந்து சம்பளம்வரையான வாழ்க்கைக்குள் தள்ளப்பட்டு நீண்ட காலத்தில் இதற்குச் செலுத்தும் விலையானது பாரதூரமானதாகும்.

சிலர் கழுத்துவரை கடனில் மூழ்கி தற்கொலையும் செய்துள்ளார்கள். இளம் சந்ததியினரிடம் காணப்படும் உயர்ந்த கடனுக்கான முக்கிய காரணம் நுகர்வுக் கடனாகும். இங்கு இவர்கள் தங்களது உழைப்பிற்கும் மேலாக செலவுசெய்து இறுதியாக தங்களது நிதியியல் எதிர்காலத்தை பாழாக்கிக்கொள்கின்றார்கள். நீங்கள் உங்களது அயலாருடன் போட்டியிடுவதனை அல்லது சமூக அந்தஸ்தினை பேணுவதனை தீவிரமாக மறுதலிக்கலாம், ஆனால் உங்களையும் அறியாமல் நாம் வாழும் நுகர்வுக் கலாச்சாரத்தில் இது இடம்பெறுகின்றது. மெய்யாகவே வேண்டப்படுவது என்னவெனில் ஆடம்பரமற்ற வாழ்க்கைமுறை மற்றும் கடுமையான நிதியியல் ஒழுக்கத்துடன் உங்களது வசதிக்கேற்ற வாழ்க்கையினை வாழ்வதாகும். நீங்கள் உங்கள் பணத்தை முக்கியமானவற்றிற்கு மற்றும் உங்களுக்கு அர்த்தமுள்ள விடயங்களுக்கு மாத்திரம் செலவழிப்பதுடன் உங்கள் வாழ்க்கை முறையினை எளிமையாக்குங்கள். உங்களுக்கு தேவையானதை மாத்திரம் நுகர்வுக் கடனை பயன்படுத்தாது கொள்வனவு செய்யுங்கள். அதாவது நடைமுறையில் நீங்கள் ஏதாவது பொருளை வாங்குவதற்கு முன்னர் இக்கொள்வனவு அவசியமானதா என நன்றாக யோசிப்பதுடன் பொருட்களை வாங்குவதற்கு பொறுமையாயிருங்கள்.

**“கழிவுடன் விளம்பரம் செய்யப்படும் பொருட்களையிட்டு அவதானமாயிருங்கள். அதாவது ஏதேனும் ஒரு பொருள் அதன் வழமையான விலையிலும் பார்க்க கழிவுடன் விற்கப்படுகின்றது என்பதற்காக அப்பொருளை வாங்கவேண்டாம். உண்மையிலேயே அது உங்களுக்கு அவசியமானால் மாத்திரமே அதனை வாங்குங்கள்.”**

அத்துடன் அந்த விலையினை செலுத்துவதற்கு இயலுமையாகவும் இருத்தல் வேண்டும். ரூபா 60,000 க்கு விற்கப்படும் ஒரு தொலைக்காட்சிப் பெட்டி தற்போது 50 சதவீத கழிவுடன் ரூபா 30,000 க்கு விற்கப்படும் சமயம் அதனை நீங்கள் கொள்வனவு செய்தால் நீங்கள் ரூபா 30,000 இனை மிச்சம் பிடித்துள்ளீர்கள் என நினைக்க

வேண்டாம். இதற்கு மாறாக, நீங்கள் என்ன செய்துள்ளீர்கள் என்றால் உங்களிடம் உள்ள மட்டுப்படுத்தப்பட்ட பணத்தில் ரூபா 30,000 இனை செலவுசெய்துள்ளீர்கள். அதேபோன்று, கடன் அட்டை உரிமையாளர்களுக்கு 50 சதவீத கழிவுடன் உல்லாச ஹோட்டல்களில் தங்குவதற்கு வசதியளிக்கப்படுகின்றது. இதன் மூலம் மெய்யாகவே உங்களுக்கு தேவையற்ற விடுமுறைக்கு அல்லது கட்டுப்படியாகாத ஒன்றிற்கு ஆடம்பரமாக செலவு செய்வதற்கு நீங்கள் தூண்டப்படுகின்றீர்கள்.

வட்டியற்ற கடன் அட்டை தவணைக் கொடுப்பனவுகளை பயன்படுத்தும்போது ஒரு மாத தவணைப்பணத்தையேனும் செலுத்தத் தவறுவதன் நிமித்தம் ஏற்படும் விளைவுகளை குறித்து அவதானமாக இருங்கள். கொடுப்பனவினை செலுத்தத் தவறும் பட்சத்தில் நிதியியல் நிறுவனம் பலமான தாமதக் கட்டணத்தை அறவிடுவதுடன், நீங்கள் ஒரு பகுதி கடனை செலுத்தியிருந்தாலும், நிலுவையிலுள்ள மொத்த தொகைக்கும் மாதாந்தம் 2.3% வட்டியினையும் அறவிடும். வரையறைக்கு மேற்பட்ட கட்டணம் போன்ற பல்வேறு கட்டணங்கள் உங்களது மொத்த கிரயத்தினை அதிகரிக்கும்.

எந்நேரமும் உங்களது கடன் அட்டையினை உங்களுடன் எடுத்துச் செல்ல வேண்டாம். கடன் அட்டை ஒன்றை வைத்திருப்பது உங்களிடம் இல்லாத பணத்திற்கு இலகுவான அணுக்கத்தை வழங்கும். கடன் அட்டையினை வீட்டில் விட்டுவிட்டு வந்திருந்தால் உங்களுக்கு மெய்யாகவே தேவைப்படாத பொருளை வாங்குவது குறித்து இருமுறை சிந்திப்பீர்கள்.

உங்களது சொத்துக்கள் உங்களது செலவினத்திற்கும் மேலான வருமானத்தினை உருவாக்குமானால், மாதாந்த கடன் அட்டை நிலுவையினை முழுவதுமாக செலுத்தக்கூடிய வசதி காணப்படுமானால், உங்களது பாதீட்டிற்கேற்ப செலவு செய்யக்கூடிய ஒழுக்கம் காணப்படுமானால் நீங்கள் கடன் அட்டைகளை வைத்திருக்கலாம். அப்போது நீங்கள் உங்களது வாழ்க்கைமுறைக்கு தக்கவாறு கடன் அட்டை வழங்குநர்களினால் வழங்கப்படும் கவர்ச்சிகரமான பருவகால சிறப்பு விற்பனைகள் மற்றும் வெகுமதிகளை அனுபவிக்கலாம்.

பற்று அட்டைகள் (debit cards) மற்றும் நடமாடும் பணப்பைகளைக் (mobile wallets) கொண்டு நீங்கள் ஓர் பொருளினை வாங்கும்போது உங்கள் வங்கிக் கணக்கில் பற்று வைக்கப்படும். இது பணத்தை கொண்டு திரிவது மற்றும் வங்கி அல்லது யுவுஆ இயந்திரத்திற்கு அடிக்கடி பணம் எடுப்பது என்பதனை தவிர்க்கும் மிகவும் வசதியான வழிமுறையாகும். பற்று அட்டைகள் மற்றும் நடமாடும் பணப்பைகள் களவிலிருந்து ஒருவிதத்தில் பாதுகாப்பினை வழங்குகின்றன. உயர் பெறுமதிமிக்க கொள்வனவுகளை மேற்கொள்வதற்காக அதிகளவு பணத்தினை எடுத்துச் செல்ல வேண்டியதில்லை. அத்துடன் உங்களது கணக்கில் அல்லது நடமாடும் பணப்பையிலுள்ள நிதியினை மாத்திரமே நீங்கள் பயன்படுத்தமுடியும் என்பதுடன் கடன்படுவதன் பிரதிகூலங்களை தவிர்க்கின்றது.

# 05 பணம் எவ்வாறு தொழிற்படுகின்றது?

## நிதியியல் வெற்றிக்கான இரகசியம்

நிதியியல் வெற்றிக்கான இரகசியம் நீங்கள் உங்களது வருமானத்திற்கேற்ப வாழ்கின்றீர்களா என்பதில் தங்கியுள்ளது. நீங்கள் தொழில்புரியும் காலப்பகுதியில் கிரமமான முறையில் நீங்கள் சேமிக்கும் பணத்தொகையும் விவேகமாக மேற்கொள்ளும் முதலீடும் முக்கியமானதாகும். நீங்கள் ஒழுங்காக பாதீட்டினை தயாரித்து உங்களது வருமானத்திற்கேற்ப வாழ்ந்தால் நீங்கள் சாதகமான காசுப்பாய்ச்சலினை காண்பீர்கள். இது உங்களால் பொறுப்பேற்கக்கூடியவற்றை மாத்திரமே தீர்மானிப்பதற்கு வழிவகுக்கும். இல்லாவிடின் நீங்கள் மிகவும் உயரச் சென்று கீழே சருக்கிவிடுவீர்கள். நீங்கள் செலவழிப்பதிலும் பார்க்க அதிகளவு வருமானத்தினை உழைப்பீர்களாயின், நீங்கள் பின்னர் வசதியாக வாழ்வதற்கு அவசியமான செல்வத்தை கட்டியெழுப்புவதற்கான அனைத்தையும் கொண்டுள்ளீர்கள். நீங்கள் நிதியியல் ரீதியில் வெற்றியீட்டுவீர்களா என்பதனைத் தீர்மானிக்கும் முக்கிய காரணியாகக் காணப்படுவது என்னவெனில் உங்களது செலவுகளை கட்டுப்படுத்துதல் அல்லது வருமானத்திற்கேற்ப செலவழித்தல் என்பவையாகும்.

நீங்கள் எவ்வாறு உங்களது செல்வத்தை கட்டியெழுப்புதல் என்பது, உங்களது தற்போதைய வாழ்க்கைமுறை தேவைகள் என்ன என அறிந்துகொள்வதிலும் எதிர்காலத்தில் வளர்ச்சியடைவதற்காக செலவுகளை மேற்கொள்வதற்கு முன்னர் ஓர் நிலையான தொகையினை சேமிப்பதிலும் தங்கியுள்ளது. இது உங்களது முதலீட்டுக் குறிக்கோள்களதும் உங்களால் பொறுப்பேற்கக்கூடிய இடர்நேர்கையினதும் செயற்பாடாகும். அதாவது, நீங்கள் உங்களது வருமானத்திற்கேற்ப வாழ்கின்றீர்களா என்பதனை இது குறிப்பிடுகின்றது. (நீங்கள் விரும்புவற்றை வாங்காமால், உங்களது வருமான மட்டத்தில் பொறுப்பேற்கக்கூடிய மற்றும் உங்களுக்கு அவசியமானவற்றை வாங்குதல் என்பதாகும்). ஓர் பலமொழி நினைவிற்கு வருகின்றது. □ஓர் புத்திசாலி மனிதன் எதிர்காலத்திற்காக சேமிப்பான் ஆனால் ஒரு முட்டாள் கிடைக்கும் அனைத்தையும் செலவழிப்பான்□. நீங்கள் எவ்வளவு செல்வந்தராக இருந்தாலும், உங்களது செலவினங்களை கண்காணிக்க வேண்டும் என்பதுடன் உங்களது வருமானத்துடன் ஒப்பிடும்போது எவ்வளவு பணத்தை செலவிடுகின்றீர்கள் என்ற கருத்து

### உங்களது நிதியியல் தெரிவுகளின் பலாபலன்களும் வெகுமதிகளும்

அதிகரித்துவரும் விலைஉயர்ந்த வாழ்க்கை முறை ↑

**கடன் வாழ்க்கை முறை**
- அழுத்தம்
- அதிருப்தியடைதல்
- அடிமைத்தனம்
- நித்தியரையற்ற இரவுகள்

கடன்

**உங்களது வருமானத்திற்கேற்ற வாழ்க்கை**

வருமானம்

- மன அமைதி
- நிதியியல் சுதந்திரம்
- பாதுகாப்பு
- எதிர்கால ஆசீர்வாதம்

இருத்தல் வேண்டும். நீங்கள் மாதாந்தம் ரூபா 200,000 இனை உழைக்கும் ஓர் நிறைவேற்று அதிகாரியாயிருந்தாலும் சரி அல்லது மாதாந்தம் ரூபா 35,000 இனை உழைக்கும் ஓர் ஓட்டுநராயிருந்தாலும் சரி நீங்கள் உழைப்பதிலும் பார்க்க அதிகமாக செலவழித்தால் நீங்கள் நிச்சயம் சிரமத்திற்குள்ளாவீர்கள்.

அளவுக்கதிகமான கடனானது உங்களது குறிக்கோள்களை அடைவதனை மிகவும் கடினமானதாக்கும். மாதாந்த கடன் கடப்பாடுகளை கொண்டுள்ளீர்கள் என்றால் அக்கடன்களுக்கு திருப்பிச்செலுத்துவதற்கு அவசியமான பணத்தை வேறேதேனும் தேவைக்கு, உங்களது செல்வத்தை வளர்ச்சியடையச் செய்யும் காரியத்திற்கு பயன்படுத்து முடியாது. இதனை தீர்மானிக்கும் காரணியாகக் காணப்படுவது என்னவெனில், உங்களது யோசனைகள் கடந்த காலத்திலா, நிகழ் காலத்திலா அல்லது எதிர் காலத்திலா வாழ்கின்றது என்பதைப் பொறுத்ததாகும். இது உங்களது நிதியியல் நடத்தையில் ஓர் வித்தியாசத்தினை ஏற்படுத்தும். கடந்த காலத்தில் வாழும் மக்கள் மிகவும் கவனமாயிருப்பார்கள் என்பதுடன் கடனுக்கான கொடுப்பனவினை மேற்கொள்வதற்கு தவறமாட்டார்கள். நிகழ் காலத்தில் வாழும் மக்கள் அக்கணத்திற்கு மாத்திரம் அதிக கவனஞ்செலுத்துவதுடன் அவர்களது நிதியியல் சூழலை மாற்றுவதில் குறைவான அக்கறையினையே கொண்டிருப்பார்கள். எதிர்காலத்தில் வாழும் மக்கள் தங்களால் எதிர்காலத்தினை ஆரூடம் செய்யமுடியும் என நினைப்பார்கள். இது அவர்களை அதிகளவு கடனைப் பெற்றுக்கொள்ள அல்லது தவறான முதலீடுகளை மேற்கொள்வதற்கு வழிவகுக்கலாம். மேற்குறிப்பிட்ட எந்த நேரக் கண்ணோட்டமும் ஓர் நிறைவான காட்சியல்ல, வாழ்க்கையில் காணப்படும் ஏனையவற்றைப்போல, ஒவ்வொரு கண்ணோட்டமும் நன்மை தீமைகளைக் கொண்டிருக்கும். ஆனால் இவை மூன்றிற்கும் இடையே ஓர் சமனானதை மேற்கொள்வதே அனுகூலமான தெரிவாகும். நிகழ்கால ஆசைகளுக்கும் எதிர்கால குறிக்கோள்களுக்கும் இடையே ஓர் சமநிலையினை உருவாக்குதல் என்பது தற்போதைக்கும் மற்றும் எதிர்காலத்திலும் மகிழ்ச்சியினை வழங்குவதனை உறுதிசெய்யும்.

தங்களது கட்டுப்பாட்டிற்கும் அப்பால் விடயங்கள் சென்றுள்ளது என்பதனை மக்கள் உணரும்போது சில சமயங்களில் என்னிடம் உதவியினை நாடியுள்ளார்கள். இவர்கள் அனைவரிடமும் ஒரு விடயம் பொதுவாகக் காணப்படுகின்றது. அது வயதுமல்ல, தொழிலுமல்ல அல்லது வாழ்க்கைமுறை தெரிவுகளுமல்ல. இவர்கள் அனைவரும் பகிர்ந்து கொள்ளும் விசேடகுணம் என்னவெனில் இவர்கள் மகிழ்ச்சியற்று காணப்படுகின்றார்கள். இங்குதான் "தற்போது வாங்கு, பிறகு செலுத்து" எனும் உடனடி திருப்தி மனப்பான்மையிலிருந்து யாரும் ஒழிந்துகொள்ள இயலாதுள்ளமை காணப்படுகின்றது. உங்களது செலவழித்தல் தீர்மானங்களுக்கு ஓர் விலை செலுத்தல் வேண்டும் என்பதுடன் அந்த விலையானது மிகவும் உயர்ந்ததாகலாம். தொழில்புரியும்போது தங்களது வருமானத்திற்கும் மேலாக வாழ்வதற்கு தெரிவுசெய்யும் மக்கள் தங்களது பணிஓய்வுக் காலத்தில் மிக அதிக விலையினை செலுத்தவேண்டியிருக்கும். அவர்களது ஊதாரித்தனமான செலவழிக்கும் முறைகளின் காரணமாக அவர்களது பணிஓய்வுக் காலத்தில் மிகவும் அவசியமாகத் தேவைப்படும் பணம் இல்லாது போகின்றது.



தொழில்புரியும் காலப்பகுதியில், உங்களது பக்கத்தில் போதியளவு நேரமும் வளமும் இருக்கும் சமயத்தில், சாமார்த்தியமான நிதியியல் திட்டமிடலைக் கைவிடுதல் என்பது நீங்கள் அருகிய சேமிப்புடன் உங்கள் பணிஓய்வினை எதிர்கொள்கின்றீர்கள் எனும் யதார்த்தத்திற்கு முகங்கொடுக்கின்றீர்கள். ஓய்வெடுக்கவேண்டிய காலமானது சடுதியாக நம்பிக்கையற்று காணப்படுகின்றது. எதிரில் காணப்படும் பணிஓய்வுறும் சில தசாப்தங்களை மிகக் குறைவான பணத்துடன் முகங்கொடுக்கவேண்டியிருக்கும்.

# உங்களது சேமிப்பு உங்களுக்காக தொழிற்படச் செய்யுங்கள

பணத்தை உருவாக்குவதற்கு இரண்டு வழிகள் உள்ளன. ஒரு வழி பணத்துக்காகத் தொழில்புரிவது, இதனையே நாம் அனைவரும் செய்கின்றோம். மற்றுமொரு வழி சேமித்தல் மற்றும் முதலீடு செய்வதன் மூலம் பணத்தை உங்களுக்காகத் தொழிற்புரியமாறு செய்தல், இது நாம் அனைவரும் புறக்கணிக்கும் ஒன்றாகும். பணம் மரத்தில் காய்ப்பதில்லை, ஆனால் நீங்கள் புத்திசாலித்தனமாக சேமித்து முதலீடு செய்யும்போது அது ஓர் நிலையான வளர்ச்சியினை வழங்கும். உங்களது பணத்தை சேமித்து முதலீடு செய்வதற்கு நீங்கள் ஓர் மேதையாக இருக்கவேண்டியதில்லை. உங்களுக்கு சில அடிப்படைகள் தெரிந்திருப்பதுடன் உங்களது நிதியைப் பற்றி கவனமாயிருக்கவேண்டும் என்ற தீர்மானமும் மாத்திரமே அவசியமாகும்.

உங்களது பணம் தொழிற்படும்போது, அது ஓர் நிலையான வருமானத்தினை உழைக்கும். உதாரணமாக, ஒரு கடன்பெறுநர் உங்களது பணத்தை ஓர் காலப்பகுதிக்கு பயன்படுத்துவதற்கு உங்களுக்கு பணம் செலுத்தவேண்டும். நீங்கள் உங்களது பணத்தினை திரும்பப்பெறும்போது உங்களது பணத்துடன் சேர்த்து "வட்டியினையும்" பெற்றுக்கொள்வீர்கள். அல்லது, 'பங்கிலாபங்களை' வழங்கும் ஓர் கம்பனியின் பங்குகளை நீங்கள் கொள்வனவு செய்தால், அக்கம்பனியானது அதன் உழைப்பில் ஒரு பங்கினை கிரமமான அடிப்படையில் செலுத்தும். உங்களைப் போன்று உங்களது பணமும் ஓர் 'வருமானத்தினை' வழங்கலாம். நீங்களும் உங்களது பணமும் சேர்ந்து தொழிற்படும்போது நீங்கள் அதிகளவு பணத்தினை உருவாக்கலாம். அதிகரிக்கும் பணவீக்கத்தின் காரணமாக நீங்கள் மேலதிக ஊதியத்தினை கேட்பது போன்று உங்களது பணத்தினை பயன்படுத்தும் கடன்பெறுநர்களிடம் போதுமானளவு வருவாயினை அல்லது ஊதியத்தினை கேட்பதற்கு உங்களுக்கு சகல உரிமையும் உண்டு. இது நீங்கள் பொறுப்பேற்கும் இடர்நேர்கையினைப் பொறுத்ததாகும்.

இரண்டாவது வழி என்னவெனில், காலப்பகுதியில் பெறுமதி அதிகரிக்கும் என நீங்கள் எண்ணும் ஏதேனும் ஒன்றின் உரிமையாளராக வருதலாகும். உங்களுக்கு உங்களது பணம் தேவைப்படும்போது, நீங்கள் அதனை விற்கலாம். அதாவது இன்னுமொருவர் அதற்கு அதிக விலையினைக் கொடுப்பார் எனும் அடிப்படையிலாகும். உதாரணமாக, நீங்கள் ஒரு துண்டு காணியினை கொள்வனவு செய்கின்றீர்கள் என எடுத்துக்கொள்வோம். அப்பிரதேசத்தில் புதிய பாதைகள், வீடுகள் போன்ற அபிவிருத்திகள் ஏற்பட்டால் அதன் பெறுமதி அதிகரிக்கும் என எண்ணுகின்றீர்கள். நீங்கள் அக்காணியினை ஐந்து, பத்து அல்லது இருபது வருடங்களில் இன்னுமொருவருக்கு விற்று நீங்கள் செலுத்திய தொகையிலும் பார்க்க அதிக விலையினை பெற்றுக்கொள்ளலாம் என்று எதிர்பார்க்கின்றீர்கள். சில சமயங்களில், உங்களது பணமானது ஒரே நேரத்தில் இவ்விரண்டினையும் செய்யலாம் - ஓர் நிலையான வருமானத்தினை உழைத்தல் மற்றும் பெறுமதி உயர்வடைதல் என்பனவாகும். வாடகை வருமானத்தினை உருவாக்கும் மற்றும் அதேசமயம் பெறுமதியும் அதிகரிக்கும் ஓர் சொத்தினை கொள்வனவு செய்தல்.



**"பணம் சம்பாதிக்க இரண்டு வழிகள் உள்ளன: ஒரு வழி பணத்திற்காக வேலை செய்வது, அதைத்தான் நாம் அனைவரும் செய்கிறோம். மற்றுமொரு வழி, நாம் அனைவரும் செய்வதை புறக்கணித்து, சேமிப்பதன் மூலமும் முதலீடு செய்வதன் மூலமும் உங்களுக்கான பணத்தைப் பெறுவது."**

# சேமிப்பதற்கும் முதலீடு செய்வதற்கும் இடையேயுள்ள வித்தியாசம்




## சேமித்தல்

சேமிப்பு என்பது எதிர்காலப் பயன்பாட்டிற்காக உங்களது தற்போதைய உழைப்பில் ஒரு பகுதியினை வேறுபடுத்தி வைக்கும் பழக்கமாகும். நீங்கள் தற்போதைய செலவினத்தை தியாகம் செய்து ஓர் நல்ல எதிர்காலத்திற்காக சேமித்தல் வேண்டும். நீங்கள் கிரமமாக ஓர் நீண்டகாலத்திற்கு சேமிக்கும்போது உங்களது பணம் 'வளர்ச்சி' அடையும்.

சுகயீனம், விபத்துக்கள், வேலையில்லாமை, களவு, வறட்சி, மரணங்கள், உங்களது உடைமைகளை நாசம் செய்யும் அல்லது பயிர்களை அழிக்கும் வெள்ளம் போன்ற எதிர்பாராத சிக்கல்களை சந்திப்பதற்கு சேமிப்பானது மிகவும் துணைமிக்கதாகும். இத்தகைய சூழ்நிலைகளில், உங்களது சேமிப்பானது நீங்கள் மீளெழுவதற்கு துணைபுரியலாம். அவசரத் தேவைகளுக்காக நீங்கள் பணம் வைத்திருப்பதனை உறுதிசெய்து கொள்ளுங்கள். நீங்கள் எப்போதாவது அவசரத்தேவை நிதியின் ஒரு பகுதியினை பயன்படுத்தவேண்டியேற்பட்டால், உங்களால் இயலுமானவரை வெகுவிரைவில் மீண்டும் அந்நிதியினை அதே நிலைக்கு கொண்டுவாருங்கள். உங்களது இரண்டு மாத வருமானத்தினையொத்த காசு ஒதுக்கமானது சேமிப்பில் இருக்குமானால் இந்த எதிர்பாரா சந்தர்பங்கனை சந்திப்பதற்கு உதவும். பாதுகாப்பினை வழங்குவதற்கும் மேலாக, இக்காசு ஒதுக்கமானது நீங்கள் கடன்படுவதற்கான சாத்தியத்தினை குறைக்கும்.

## உங்களது சேமிப்பினை பாதுகாப்பாக வைத்தல

இடர்நேர்கையினை பொறுப்பேற்பதற்கு தயக்கமுடையவராக இருந்து நீங்கள் உங்களது படுக்கையின் கீழ் பணத்தை வைத்திருந்தால் அல்லது ஒரு பானையினுள் போட்டு சமையலறையில் புதைத்து வைத்திருந்தால், உங்களது பணம் களவாடப்பட்டிருக்கலாம், பூச்சிகளால் அரிக்கப்பட்டிருக்கலாம் அல்லது அதன் பெறுமதியனை இழந்திருக்கலாம்.

நீங்கள் எங்கு சேமித்தாலும், உங்களது பணம் பாதுகாப்பாக இருப்பதனை உறுதிசெய்யுங்கள். பொதுவாக, நீங்கள் பாதுகாப்பு என்று கருதும் இடங்கள் மற்றும் எந்நேரமும் உங்களது பணத்தினை எடுக்கக்கூடிய வசதியினை அளிக்கும் இடங்களில் உங்களது சேமிப்பினை மேற்கொள்கின்றீர்கள். அனேகமான மக்கள் மிகவும் நம்பிக்கையான, இலங்கை மத்திய வங்கியினால் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிகளில் அல்லது முறைமைப்படுத்தப்படும் நிதிக் கம்பனிகளில் காணப்படும் சேமிப்புக் கணக்குகளில் தங்களது சேமிப்பினை வைத்திருக்கின்றார்கள். இவற்றில் எந்த ஒரு நிறுவனமும் 100 சதவீத பாதுகாப்பினை கொண்டிருப்பதில்லை. ஏனெனில், நிறுவனம் வங்கி முறிவடைந்தால் (bankrupt) உங்களுக்கு உங்களது பணத்தின் ஒரு பகுதியே திரும்பக் கிடைக்கும். (இலங்கை மத்திய வங்கியின் வைப்புக் காப்புறுதித் திட்டத்தின் கீழ் உரிமமளிக்கப்பட்ட ஓர் நிதியியல் நிறுவனத்தின் வைப்பாளர் ஒருவருக்கு செலுத்தப்படக்கூடிய ஆகக் குறைந்த இழப்பீட்டுத் தொகையானது ரூபா 600,000 க்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது). அதுவும் மிகவும் தாமதமாகியே வழங்கப்படும். மேலும், உடனடியாக கிடைப்பதற்கான ஓர் ஈடுகட்டல் (trade – off) காணப்படுகின்றது. உங்களது பணம் உங்களுக்காக தொழிற்படும்போது அதற்கு குறைந்த வேதனமே வழங்கப்படுகின்றது. உங்களது சேமிப்பினை பார்த்துக்கொள்வதற்காக உங்கள் பகுதியில் எவ்வித முயற்சியும் மேற்கொள்ளப்படுவதில்லை. சேமிப்புக் கணக்குகளில் உள்ள பணத்தின் பெறுமதியானது காலப்பகுதியில் பணவீக்கத்தின் காரணமாக குறைவடைகின்றது. 1980 இல் உள்ள ரூபா 1,000 ஆனது இன்று மெய்யளவில் ரூபா 89 பெறும். அதாவது, நீங்கள் 1980 இல் ரூபா 1,000 செலுத்தி வாங்கக்கூடிய உணவுப்பொருட்களின் பொதியினை இன்று கொள்வனவு செய்வதற்கு ரூபா 10,240 தேவைப்படுகின்றது.

எனவே, பின்வரும் காரணங்களின் நிமித்தும் நீங்கள் 'பாதுகாப்பானது' எனக் கருதுவது பாதுகாப்பற்றுக் காணப்படுகின்றது. பணவீக்கத்தின் காரணமாக காலப்போக்கில் கொள்வனவு சக்தியினைக் குறைக்கும் நாசூக்கான நட்டம் மற்றும் தவறுதல் இடர்நேர்கை என்பவற்றாலாகும். ஓர் நீண்ட காலத்திற்கு உங்களது சேமிப்பு அனைத்தையும் சேமிப்புக் கணக்கில் வைத்திருந்தால், அவை உழைக்கும் வட்டிவீதமானது பணவீக்கத்திற்கு ஈடுகொடுக்க முடியாமல் கணிசமானளவு கொள்வனவு சக்தியினை இழக்கவேண்டிய நிலை ஏற்படும்.

> தேசிய சேமிப்பு வங்கியின் ஒரு சேமிப்புக் கணக்கில் நீங்கள் ரூபா 1,000 பணத்தை 1980 இல் முதலீடு செய்து அது சராசரி சேமிப்பு வட்டிவீதமாக 9.67% இனை 20 வருடங்களுக்கு உழைத்திருக்குமாயின் இருபது வருடங்களின் பின்னர் உங்களது சேமிப்புக் கணக்கின் மீதி ரூபா 6,335 ஆகக் காணப்படும். இது ஏற்கனவே பணவீக்கம் பற்றி மேலே காட்டிய உதாரணத்தோடு ஒப்பிடுகையில் ரூபா 3,905 (10,240 – 6,335) கொள்வனவு சக்தியினை இழந்திருக்கும்.
>
> இது ஒரு இறாத்தல் பாணை வாங்குவதற்கு போதுமான சேமிப்பினை மேற்கொள்வது போன்றதாகும். 20 வருடங்களின் பின்னர் நீங்கள் உங்களது பணத்தை 20 வருட காலப்பகுதியில் திரட்டப்பட்ட வட்டியுடன் சேர்த்து மீள எடுக்கும்போது உங்களது பணம் ½ இறாத்தல் பாணையே வாங்கக்கூடியதாக இருப்பதனை அவதானிப்பீர்கள்.

இதன் காரணமாகவே உங்களது பணத்தின் ஒரு பகுதியினை அதிக வருவாயினை உழைப்பதற்காக நீண்டகாலப் பகுதிக்கு, மூன்று வருடங்கள் அல்லது அதற்கு மேற்பட்ட காலப்பகுதிக்கு, முதலீடு செய்தல் வேண்டும். மிகவும் சாமர்த்தியமான முதலீட்டாளர்கள் எதிர்பாராமல் ஏற்படக்கூடிய செலவினங்களை சந்திப்பதற்கு போதுமான பணத்தினை மாத்திரமே சேமிப்புக் கணக்குகளில் வைத்திருப்பார்கள்.

## முதலிடுதல்

முதலீடு என்பது முதலீட்டாளருக்கு, பின்வருவனவற்றிற்கு வெகுமதியளிக்கக்கூடிய, எதிர்காலத்தில் வருவாயினை உருவாக்குவதற்காக பணத்தினை நீண்டகாலத்திற்கு வைத்திருக்கும் தற்போதைய கடப்பாடாகும். (1) பணம் வைத்திருக்கப்படவேண்டிய காலப்பகுதி. (2) எதிர்பார்க்கப்பட்ட பணவீக்க சதவீதம். (3) இடர்நேர்கை – எதிர்காலம் பற்றிய நிச்சயமற்றதன்மை. முதலீடு செய்தல் என்பது உங்களது பணத்தினை வளரச் செய்வதாகும். ஓர் முதலீடானது கட்புலனாகக்கூடிய சொத்துக்களாயிருக்கலாம் (கால்நடைகள், தங்கம் மற்றும் சொத்து, மற்றும் உங்களுக்குச் சொந்தமான வணிகம் போன்றவை) அல்லது கட்புலனற்ற சொத்துக்களாயிருக்கலாம் (தொகுதிக்கடன் பத்திரங்கள், நம்பிக்கை அலகுகள் மற்றும் ஏனைய வணிகங்களின் பங்குகள் போன்றவை).

முதலிடுதல் என்பது நன்னம்பிக்கைக்குரிய ஓர் நடவடிக்கையாகும். அது எதிர்காலத்தில் உங்களது வாழ்க்கைமுறையினை பாதுகாப்பதற்கு அதிகளவு வருவாயினைப் பெற்றுக்கொள்வதற்காக இன்று உங்களது பணத்தினை அனுபவிப்பதனை கைவிடுவதாகும். நீங்கள் 'முதலீடு' செய்யும்போது சேமிப்பதிலும் பார்க்க குறுங்காலத்தில் உங்களது பணத்தை இழப்பதற்கான அதிக வாய்ப்பு காணப்படுகின்றது. நிலையான வைப்புகள், நம்பிக்கை அலகுகள், அரசாங்க திறைசேரி உண்டியல்கள் மற்றும் முறிகள் மற்றும் கம்பனி தொகுதிக்கடன்கள் மற்றும் பங்குகளில் நீங்கள் முதலீடு செய்யும் பணமானது பெறுமதியில் அதிகரிக்கலாம் அல்லது வீழ்ச்சியடையலாம். நீங்கள் முதலீடு செய்த 'முதலினை' இழக்கலாம். ஆனால் உங்களுக்கு அதிக பணத்தை உழைக்கக்கூடிய வாய்ப்பும் காணப்படுகின்றது. நிச்சயமாக வலியின்றி எதனையும் பெறமுடியாது. முதலீடு செய்வதற்கு முன்னர் உங்களது பக்கத்தில் அதனுடன் தொடர்புடைய இடர்நேர்கைகளை கவனமாக இனங்காண்பதற்கு அதிக முயற்சியும் கடின உழைப்பும் தேவைப்படுகின்றது.

தேசிய சேமிப்பு வங்கியில் சேமிக்கப்பட்ட ரூபா 1,000 ஆனது 20 வருடங்களின் பின்னர் வட்டியுடன் சேர்த்து ரூபா 6,335 ஆகக் காணப்படும். இடர்நேர்கையினை பொறுப்பேற்க விரும்பாத முதலீட்டாளர் ஒருவர் தவறுதல்

இடர்நேர்கையற்ற அரசாங்க திறைசேரி உண்டியலில் முதலீடு செய்திருந்தால், 20 வருடங்களின் பின்னர் அவரது முதலீடானது ரூபா 16,520 ஆக உயர்வடைந்திருக்கும். இது தேசிய சேமிப்பு வங்கியிலும் பார்க்க ரூபா 10,185 அதிக வருமானத்தையும், பணவீக்கத்திலும் பார்க்க ரூபா 6,280 இனை அதிகமாகவும் வழங்கியிருக்கும் அதேபோன்று, அதேபோல, சவால் எடுக்கும் முதலீட்டாளர் 1,000 பங்குகளில் முதலீடு செய்தால், 2006ல் 'ரூ.36ல் இருந்து 2022ல் 'ரூ.302.70க்கு பங்கின் விலை நகர்ந்தால், மொத்த வருமானம் 'ரூ.288,829 ஆக இருக்கும். இது சவால் எடுப்பதற்கும் சரியான தேர்வுத் தெரிவுக்கும் அணிக்கு 'ரூ.372,000க்கு மேல் ஒதுக்க முடிந்தது.. வெறுமனே சில நல்ல பங்குகளை வாங்கி வைத்திருக்கும் மூலோபாயத்தினை கடைப்பிடிப்பதானது உங்களது எதிர்கால வாழ்க்கைமுறையில் பாரிய வித்தியாசத்தினை ஏற்படுத்தலாம்.

**முதலீடு என்பது நீண்ட காலத்திற்கு பணத்தின் தற்போதைய அர்ப்பணிப்பாகும், இது எதிர்கால வருவாயை உருவாக்குவதற்கு முதலீட்டாளருக்கு வெகுமதி அளிக்கும்**

**(1) நிதிகள் உறுதிசெய்யப்பட்ட காலத்திற்கு,**

**(2) எதிர்பார்க்கப்படும் பணவீக்க விகிதம்,**

**(3) ஆபத்துகள் - இது எதிர்காலத்தின் நிச்சயமற்ற தன்மை.**




CFA Society Sri Lanka
CSE COLOMBO STOCK EXCHANGE
Creating Wealth and Value

# தொடர்வட்டி (Compounding Interest) உங்களது உற்ற நண்பனாவான்

பணவீக்கத்துடன் சமர்செய்வதற்கான பாரிய ஆயுதங்கள்:

1. தொடர்வட்டி
2. நீங்கள் பணிஓய்வு பெறுவதற்கு முன்னர் உங்களது சொத்துக்களை வளர்வதற்காக அனுமதிக்கும் காலம்
3. பணவீக்கத்திலும் பார்க்க அதிகமான உங்களது உழைப்பின் பகுதி

எதிர்காலப் பெறுமதி கணிப்பீடு

$$PMT \, . [\frac{(1+r)^n - 1}{r}]$$

**PMT =** மாதாந்தக் கொடுப்பனவு

**r =** மாதாந்த வட்டி (வருடாந்த வட்டியாயின், அது 12ஆல் வகுக்கப்படும்)

**n =** மாதங்களின் எண்ணிக்கை

உதாரணமாக, 30 வருடங்களுக்கு, மாதாந்தக் கொடுப்பனவு ரூபா 287 (360 மாதங்கள்) 12% வருடாந்த வட்டியாயின், மாதாந்த வட்டி – மாதத்திற்கு 1 சதவீதம்

$$= -287.[\frac{(1+0.01)^{360}}{0.01}]$$ = **Rs. 1,003,054.71.**



நீங்கள் வெறுமனே மாதாந்தம் ரூபா 287 இனை 12% வட்டிக்கு (மாதாந்தத் தொடர்வட்டி) 30 வருடங்களுக்கு சேமித்தால், நீங்கள் ஓர் மில்லியனராக வந்திருப்பீர்கள் (ரூபா 1,003,054). நீங்கள் மொத்தமாக ரூபா 103,320 இனை (287 ஒ 360 மாதங்கள்) சேமித்திருந்தாலும் எஞ்சிய ரூபா 899,734 வட்டியின் மேலான வட்டியாகும். 30 வருட காலப்பகுதியில் ஒரு முதலீட்டினால் உருவாக்கப்பட்ட விளைவு வீதத்தில் 4 சதவீத வித்தியாசத்தின் விளைவின் காரணமாக உங்களது இறுதி செல்வமானது 2 ½ மடங்காக அதிகரித்திருக்கும். அதாவது நீங்கள் 16% வருடாந்த வட்டியினை மாதாந்த தொடர் வட்டியாக முதலீடு செய்யும்போது ஏற்படுவதாகும்.

## 72 எனும் விதியினைப் பற்றி அறிந்துகொள்ளுங்கள்.

72 இனை வட்டி வீதத்தினால் வகுத்தால் வரும் எண்ணானது உங்களது முதலீடு இரட்டிப்பாவதற்கு எடுக்கும் வருடங்களின் எண்ணிக்கையினை குறிப்பிடும். நீங்கள் உங்கள் பணத்திற்கு 6%வட்டியினை உழைத்தால், உங்களது ஆரம்ப முதலீடு இரட்டிப்பாவதற்கு 12 வருடங்கள் (72/6) செல்லும். நீங்கள் 12% வட்டியினை உழைத்தால், உங்களது ஆரம்ப முதலீட்டின் பெறுமதியானது இரட்டிப்பாவதற்கு 6 வருடங்களே செல்லும். இதில் முக்கியமானது என்னவெனில், நீங்கள் எவ்வளவு மெய் வருமானத்தை (வட்டிவீதத்திலிருந்து பணவீக்க சதவீதத்தை கழித்ததன் பின்னர்) உருவாக்குகின்றீர்கள் என்பதாகும். எவ்வளவு உயர்ந்த மெய் வருமானத்தை (பணவீக்கத்திலும் பார்க்க அதிக வருவாய்) உங்களது முதலீட்டிலிருந்து நீங்கள் பெற்றுக்கொள்கின்றீர்களோ, அவ்வளவு செல்வந்தராக நீங்கள் வருவீர்கள்.

உங்களை இடர்நேர்கையிலிருந்து பாதுகாக்கும் அதேவேளை, உங்களது முதலீடுகளில் உயர்ந்த சாத்தியப்படக்கூடிய மெய் வருமானத்தினைப் பெற்றுக்கொள்வதன் முக்கியத்துவம் உங்களுக்கு தெளிவாக இருக்கும். நீங்கள் முதலீடு செய்த வங்கி அல்லது கம்பனி தவறினால், நீங்கள் உங்களது பணம் அனைத்தையும் இழந்துவிடுவீர்கள். இதன் காரணமாகவே பன்முகப்படுத்தலும் தவறுதல் இடர்நேர்கைளைப் பற்றி அறிந்துகொள்வதும் மிகவும் முக்கியத்துவம் பெறுகின்றன.

இலங்கையர்கள் இப்போதாவது சேமிப்பிலிருந்து முதலீடு நோக்கி நகர்ந்து அவர்களது நிதியியல் தலையெழுத்தினை பொறுப்பேற்றல் வேண்டும். பங்குச் சந்தையினையும் முறிகள் சந்தையினையும் வசதிமிக்கவர்கள் தங்களது பொழுதுபோக்காக, சந்தையினை ஓர் சூதாட்டக்களமாக கருதிய காலம் பின்சென்றுவிட்டது. முதலீடு செய்வது என்பது வினைத்திட்பமுடைய வணிகமாகும், ஏனைய நிதியியல் குறிக்கோள்கள் அல்லது பணிஓய்விற்கு தேவையான பணத்தினை திரட்டுவதற்கு மிகவும் அவசியமான ஒன்றாகும்.

தொடர்வட்டி என்பது அதன் மையமாக பழமைவாத அல்லது பாதுகாப்பான முதலீட்டினைக் கொண்டதாகும். ஊக வாணிபம் மற்றும் போக்குடைய பங்குகளை விரட்டும் ஒருவர் தொடர்வட்டியின் சக்தியினை அறியமாட்டார். உங்களது முதலானது மேலும் கீழும் பலமாக நகரும்போது, மிகவும் விரைவாக வளர்ச்சியடைந்து பின்னர் உங்கள் வருவாய் அனைத்தையும் அகற்றக்கூடியளவிற்கு வீழ்ச்சியடையும்போது தொடர்வட்டியின் சக்தியினை அவர் எவ்வாறு அறிவார்?

**“முதலீடு என்பது ஒரு தீவிரமான வணிகமாகும், ஓய்வூதியம் அல்லது பிற நிதி இலக்குகளுக்கு அவசியமான பணத்தைக் குவிப்பதற்கான அவசியம்.”**




CFA Society Sri Lanka
CSE COLOMBO STOCK EXCHANGE
Creating Wealth and Value

# சில முதலீடுகள் நம்புவதற்கு கடினமாயுள்ளன

உண்மை என நம்புவதற்கு கடினமாயுள்ள முதலீடுகள் குறித்து கவனமாயிருங்கள், ஏனெனில் அவை உங்களுக்கு பரிபூரண நட்டத்தினை ஏற்படுத்தலாம். பிரமிட் திட்டங்கள் (நீங்கள் அதிகளவு அங்கத்தவர்களை திட்டத்திற்கு அறிமுகப்படுத்தினால் உங்களுக்கு கொடுப்பனவினை வழங்குவதாக உறுதியளித்தல்) போன்ற 'விரைவில் பணக்காரனாகும் திட்டங்கள்' குறித்து அவதானமாயிருங்கள். தொலைக்காட்சி விளம்பரங்கள், பத்திரிகை விளம்பரங்கள் மற்றும் பல்வேறு முதலீட்டுத் தெரிவுகள் மற்றும் நிதியியல் சேவைகளை வழங்குவதாக விற்பனையாளர்கள் உங்களைத் தேடி வருதல் போன்றன. தீவினைக்கஞ்சாதவர்கள் இடர்நேர்கை பற்றிய உங்களது அறியாமையினை பயன்படுத்தி உங்களது பேராசைக்கு தீனி போடுவதற்காக வழங்கப்படும் வருவாய் குறித்து அதிகமாக கதைப்பார்கள். இடர்நேர்கை குறித்து தெளிவுபடுத்துவதற்கு உங்களுக்கு ஓர் சுயாதீனமான மூன்றாம் நபர் அவசியம். விற்பனைக் கதையினை நம்பிவிடவேண்டாம். 'உங்களது முதலீடு உத்தரவாதமானது, உங்களது பணத்தை இழப்பதற்கான எவ்வித வழியும் இல்லை' எனும் பதத்தினை நீங்கள் அடிக்கடி கேட்பீர்கள்.

தவறினை மேற்கொள்ளவேண்டாம். கடன் பெறுபவரே உங்களுக்கு உத்தரவாதம் வழங்க முடியாது. ஏனெனில், கடன் பெறுபவர் சட்டப்படி கடனைச் செலுத்தவேண்டிய தினத்தில் கடனை திருப்பிச் செலுத்த வேண்டும். நிதியியல் ரீதியாக திடமான மூன்றாம் நபர் ஒருவர் மாத்திரமே உத்தரவாதத்தினை வழங்கலாம். கடன் பெற்றவர் தவறினால் உத்தரவாதம் வழங்கியவர் அக்கடனை மீள்செலுத்துவதற்கு முன்வருவார். ஒரு கடன் அல்லது முதலீடானது உத்தரவாதமளிக்கப்பட்டிருந்தால், மூன்றாம் நபரினால் வழங்கப்பட்ட உத்தரவாதமானது நிபந்தனையற்றதாகவும், முறிக்கமுடியாததாகவும் அனைத்து சூழ்நிலைகளிலும் வலியுறுத்தக்கூடியதாகவும் இருத்தல் வேண்டும்.

அதாவது உத்தரவாதமளித்தவர், கடன்பெற்றவர் தவறுமிடத்து உத்தரவாதத்தினை மதிப்பளிக்காமலிருப்பதற்கான ஒரு வழியினை மேற்கொள்ள முடியாதிருத்தல் வேண்டும். உயர் அழுத்தம் மிக்க விற்பனை சூழ்ச்சிகளுக்கு அடிபணியாதிருங்கள். வழங்கப்படும் முதலீட்டுக் கருவி குறித்து நன்றாக விசாரித்தறிவதுடன் அதனுள் புதைந்துள்ள இடர்நேர்கை குறித்தும், முதலீடு செய்வதற்கு முன்னர் அறிந்துகொள்ளுங்கள். நல்லெண்ணமுடைய கடன் பெறுபவர்கள் சுயாதீன பகுப்பாய்வாளரது ஆய்வு அறிக்கைகள் மற்றும் கடன் தரப்படுத்தல்கள் முதலியவற்றை உங்களுக்கு மகிழ்ச்சியுடன் வழங்குவதுடன் ஓர் தகவலறிந்த தீர்மானத்தை மேற்கொள்வதற்கு போதுமான காலத்தையும் வழங்குவார்கள். மிகவும் முக்கியமாக, நீங்கள் உரிமமளிக்கப்பட்ட, முறைமைப்படுத்தப்படும் நிதியியல் நிறுவனங்களில் மாத்திரமே முதலீடு செய்தல் வேண்டும். முன்மொழிவுகள் எவ்வளவு கவர்ச்சிகரமாக இருந்தாலும், அந்நிறுவனம் உரிமமளிக்கப்படாத, முறைமைப்படுத்தப்படாத நிறுவனமாயிருந்தால் நீங்கள் உங்களது சொந்த இடர்நேர்கையில் முதலிடுகின்றீர்கள். மேலும், பிரசித்திபெற்ற நிறுவனங்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவதாகக் கூறிக்கொள்ளும் நபர்கள் குறித்தும் மிகவும் சந்தேகமாயிருங்கள், ஏனெனில் இவர்கள் உங்கள் பணத்தைப் பெற்றுக்கொண்டு போலியான சான்றிதழ்களை வழங்குவார்கள்.

முதலீடு செய்ததன் பின்னர், இம்முதலீடானது உங்களது குறிக்கோள்களை சந்திப்பதற்கு போதுமான வருமானத்தை உழைக்கின்றது மற்றும் அவை உங்களால் பொறுப்பேற்கக்கூடிய இடர்நேர்கை மட்டத்திற்குள் காணப்படுகின்றது என்பவற்றை உறுதிப்படுத்துவதற்காக நீங்கள் தொடர்ச்சியாக உங்களது முதலீடுகளை கண்காணித்தல் வேண்டும்.

சந்தைகள் மற்றும் வட்டி வீதங்கள் மற்றும் பங்குச் சந்தையினை இயக்கும் போக்குகள் பற்றி கற்றுக்கொள்வதற்கும் உங்களை ஈடுபடுத்துவதற்காகவும் உங்களது முதலீடுகள் குறித்து கருத்தாயிருங்கள்.



# கடன் தரப்படுத்தல் குறித்து புரிந்துகொள்ளுங்கள்

கடன் தரப்படுத்தல் என்பது, ஓர் நிறுவனமானது தாம் பொறுப்பேற்ற வட்டி மற்றும் முதல் கொடுப்பனவினை உரியகாலத்தில் செலுத்தக்கூடிய ஆற்றலைக் கொண்டுள்ளது என்பதைப் பற்றி கவனமாக உருவாக்கப்பட்ட சுயாதீன அபிப்பிராயத்தினை பிரதிபலிப்பதாகும் (அதாவது தவறுதல் இடர்நேர்கை – ளுநகயரடவ சளைம). தவறுதல் இடர்நேர்கை என்பது, உரிய காலத்தில் கடன்பெற்றவர் வட்டி மற்றும் முதல் கொடுப்பனவினை முழுவதுமாக சந்திப்பதற்கான ஆற்றலின்றி அல்லது விருப்பமின்றி காணப்படுவார் என்ற இடர்நேர்கையாகும்.




பொதுமக்களின் நன்மை கருதி கடன் தரப்படுத்தல் முகவரது அபிப்பிராயமானது செய்தி ஊடகங்களில் பிரசுரிக்கப்படும். கடன் தரப்படுத்தல்கள் நட்டத்திற்கு எதிரான உத்தரவாதமல்ல. அத்துடன் அவை பிணையங்களை கொள்வனவு செய்வதற்கு, விற்பனை செய்வதற்கு அல்லது வைத்திருப்பதற்கான பரிந்துரைகளும் அல்ல. பிணையங்களது கொள்வனவு, விற்பனை மற்றும் வைத்திருத்தல் என்பன பல்வேறு சந்தை மற்றும் முதலீட்டாளர் குறித்த ஆராய்வு போன்றவற்றின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுகின்றன. இவை தவறுதல் இடர்நேர்கையின் சார்பு அளவீடுகள் பற்றிய எளிமையான அபிப்பிராயங்களாகும். இலங்கையில் பொது மக்களிடமிருந்து நிதியினை பரிந்து கேட்கும் அனைத்து வங்கிகள் மற்றும் நிதிக் கம்பனிகளுக்கு கடன் தரப்படுத்தல்கள் கட்டாயமானதாகும். வைப்பினைத் திரட்டும் எந்த நிதியியல் நிறுவனத்தினதும் கடன் தரப்படுத்தலை கோருவதற்கான உரிமை உங்களுக்கு உண்டு. கடன் தரப்படுத்தல் அற்ற எந்தவொரு நிதியியல் நிறுவனத்திலும் முதலீடு செய்யாதீர்கள்.

**“இயல்புநிலை ஆபத்து என்பது கடனாளியால் வட்டி மற்றும் கொள்கைகளை முழுமையாகவும் சரியான நேரத்திலும் செலுத்த முடியாமல் போகும் அல்லது விரும்பாமல் இருக்கும் அபாயம் ஆகும்.”**

> தரப்படுத்தலானது, ஏனைய அனைத்து தரப்படுத்தப்பட்ட கருவிகளுடன் ஒப்பிடுகையில் ஒரு குறித்த கடன்பெற்றவர் அல்லது ஓர் வழங்கலுக்கான இடர்நேர்கையினை அளவிடுவதற்காக சார்புடைய தரவரிசியினை வழங்குகின்றது. அளவுகோலின் உச்சத்தில் காணப்படும் யுயுயு(டமய) தரப்படுத்தலானது வழங்குனர் தவறக்கூடும் என்ற இடர்நேர்கை மிகவும் குறைவானது என்பதனை குறிப்பிடுகின்றது. இதிலிருந்து கீழே செல்லச் செல்ல தவறுதல் இடர்நேர்கையானது அதிகரிக்கின்றது. அதிக கீழ் மட்டத்திலான தரப்படுத்தல் வரம்பில் தவறுவதற்கான சாத்தியமானது மிகவும் அதிகமாகக் காணப்படுகின்றது.

அட்டவணை 1 நீண்டகால முறிகள் தரப்படுத்தல் அளவுகோலினையும் உள்ளூர் நாணயக் கண்ணோட்டத்திலிருந்தான அவற்றின் பொருள் விளக்கத்தினையும் காண்பிக்கின்றது. தரப்படுத்தலுக்கும் மேலாக, கடன் தரப்படுத்தல் முகவர்களினால் ஓர் விரிவான கடன் பகுத்தாய்வு அறிக்கையும் பிரசுரிக்கப்படுகின்றது.

நிலையான வருமானப் பிணையங்களில் முதலீடு செய்யும் அனேகமான முதலீட்டாளர்கள் தங்களது முதலீட்டின் தவறுதல் இடர்நேர்கையினை அல்லது தங்களது முதலீட்டினை முழுவதுமாக அல்லது பகுதியளவில் இழக்கக்கூடிய இடர்நேர்கையினை பற்றி மதிப்பிடுவதற்கான வழிவகையினைக் கொண்டிருப்பதில்லை. இதற்கும் மேலாக, அவர்களுக்குக் கிடைக்கக்கூடிய

பல சாத்தியப்படக்கூடிய முதலீட்டு வருமான வாய்ப்புகளை ஒப்பிடுவதற்கான வழிவகைகளையும் கொண்டிருப்பதில்லை.

இடர்நேர்கையற்ற அரசாங்க முறிகள் தவிர்ந்த ஏனைய முதலீட்டுக் கருவிகளில் ஒருவர் முதலீடு செய்யும்போது அங்கு தவறுதல் இடர்நேர்கைக்கான ஒரு மூலகம் காணப்படுகின்றது. தவறுதல் இடர்நேர்கையானது நிறுவனம் அதன் கடப்பாட்டினை மதிப்பதற்கு தவறுவதன் காரணமாக ஏற்படுகின்றது. இது வங்கிச் சேமிப்புக் கணக்குகள் மற்றும் நிலையான வைப்புகள், கூட்டாண்மை முறிகள் அல்லது தொகுதிக்கடன்கள், காப்புறுதிக் கோருதல்கள் மற்றும் நிதிக் கம்பனி வைப்புகளில் காணப்படுகின்றது.

ஒருவர் வங்கி அல்லது நிதிக் கம்பனி வைப்பில், கூட்டாண்மை முறியில் அல்லது தொகுதிக்கடனில், ஓர் காப்புறுதி ஆவணத்தில் முதலீடு செய்வதாயிருப்பினும் சரி முதலீட்டாளர்கள் பின்வருவனவற்றினை தீர்மானிப்பதற்காக கடன் தரப்படுத்தல்களை பயன்படுத்தல் வேண்டும். அம்முதலீட்டின் இடர்நேர்கையானது ஒருவரது சொந்த இடர்நேர்கை பொறுப்பேற்றல் மட்டத்தினை சந்திக்கின்றதா, பொறுப்பேற்கும் இடர்நேர்கைக்கு போதுமானளவு வருவாய் வழங்கப்படுகின்றதா என்பவற்றை தீர்மானிப்பதற்காகும். மேற்குறிப்பிட்ட முதலீடுகளை நீங்கள் மேற்கொள்ளும்போது, தரப்படுத்தல் (இலவசமாகக் கிடைக்கக்கூடியது) போன்ற எளிமையான கருவியினை பயன்படுத்தி இடர்நேர்கையினை நிச்சயப்படுத்திக்கொள்ள தவறினால் நீங்கள் ஓர் பாரிய தவறினை மேற்கொள்கின்றீர்கள்.

தரப்படுத்தலை அறிந்துகொள்ளாத முதலீட்டாளர்கள் தங்களது முதலீட்டுத் தீர்மானங்களை ஒரு நிறுவனத்தின் புகழ் / மதிப்பு போன்றவற்றின் அடிப்படையில் மேற்கொள்ளவேண்டியிருக்கும். இலங்கையிலுள்ள அனேகமான முதலீட்டாளர்கள் முதலிடுவதில் உள்ளடக்கப்பட்டுள்ள இடர்நேர்கை குறித்து ஓர் தெளிவற்ற எண்ணத்தை மாத்திரமே கொண்டுள்ளார்கள். ஏனெனில், அவர்கள் ஓர் முழுமையான முதலீட்டு மதிப்பீட்டினை பொறுப்பேற்பதில்லை. தாங்கள் முதலீடு செய்த நிறுவனம் வங்கிமுறிவடைந்தால் அரசாங்கம் தங்களைக் காப்பாற்ற முன்வரும் என்று தொடர்ந்தும் நம்பிக்கொண்டிருக்கின்றார்கள்.

அனேகமானோர் வருவாயில் மாத்திரமே கவனஞ்செலுத்துகின்றார்கள், தவறுதல் இடர்நேர்கையானது அரிதாகவே கவனத்திலெடுக்கப்படுகின்றது. இலங்கையில், வங்கிகள் இதுவரைக்கும் தவறவில்லை, ஆனால் பல நிதிக் கம்பனிகள் தவறி, வைப்பாளர்கள் அவர்களது பணத்தை இழந்துள்ளார்கள்.



**"ஒருவர் வங்கி, நிதி நிறுவன டெபாசிட், கார்ப்பரேட் பத்திரம், கடன் பத்திரம் அல்லது காப்பீட்டுக் கொள்கையில் முதலீடு செய்தாலும், முதலீட்டாளர்கள் கடன் மதிப்பீடுகளைப் பயன்படுத்தி, அந்த முதலீட்டின் அபாயம் ஒருவரின் சொந்த இடர்-சகிப்புத்தன்மை அளவைச் சந்திக்கிறதா மற்றும் வழங்கப்படும் வருமானம் போதுமானதா என்பதைத் தீர்மானிக்கலாம். ஒருவர் எடுக்கும் ஆபத்து."**

| அட்டவணை 1 - இலங்கையின் கடன் தரப்படுத்தல் அளவீடுகள் | |
|---|---|
| தரப்படுத்தல் | பொருள் விளக்கம் |
| பொருள் விளக்கம் | |
| AAA (ika) | அதிஉயர்ந்த கடன் தரம். 'AAA' தரப்படுத்தலானது கடன் இடர்நேர்கை இடம்பெறும் என்ற ஆகக் குறைந்த எதிர்பார்ப்பினை குறிக்கின்றது. இவை நிதியியல் கடப்பாடுகளை நேரகாலத்திற்கு செலுத்தக்கூடிய விதிவிலக்கான, திடமான, கொள்திறனை கொண்டிருக்கும்போது மாத்திரமே குறிக்கப்படுகின்றன. இக்கொள்திறனானது எதிர்நோக்கக்கூடிய நிகழ்வுகளின் நிமித்தம் மோசமாக பாதிப்படையும் என்பது மிகவும் அரிதாகும். |
| AA+ (ika)<br>AA (ika)<br>AA- (ika) | மிகவும் உயர்ந்த கடன் தரம். 'AA' தரப்படுத்தலானது கடன் இடர்நேர்கை இடம்பெறும் என்ற மிகவும் குறைந்த எதிர்பார்ப்பினை குறிக்கின்றது. இவை நிதியியல் கடப்பாடுகளை நேரகாலத்திற்கு செலுத்தக்கூடிய மிகவும் திடமான கொள்திறனை குறிக்கின்றன. இக்கொள்திறனானது எதிர்நோக்கக்கூடிய நிகழ்வுகளின் நிமித்தம் குறிப்பிடத்தக்களவு பாதிக்கக்கூடியதல்ல. |
| A+ (ika)<br>A (ika)<br>A- (ika) | உயர்ந்த கடன் தரம். 'A' தரப்படுத்தலானது கடன் இடர்நேர்கை இடம்பெறும் என்ற குறைந்த எதிர்பார்ப்பினை குறிக்கின்றது. இவை நிதியியல் கடப்பாடுகளை நேரகாலத்திற்கு செலுத்தக்கூடிய திடமான கொள்திறனை குறிக்கின்றன. இக்கொள்திறனானது, இருந்தபோதிலும், பொருளாதார நிலைமைகளில் ஏற்படும் மாற்றங்களுக்கு மேற்குறிப்பிட்ட உயர்ந்த தரப்படுத்தல்களிலும் பார்க்க அதிகம் பாதிக்கக்கூடியவையாகும். |
| BBB+ (ika)<br>BBB (ika)<br>BBB- (ika) | நல்ல கடன் தரம். 'BBB' தரப்படுத்தலானது தற்போது கடன் இடர்நேர்கை இடம்பெறும் என்ற குறைந்த எதிர்பார்ப்பினை குறிக்கின்றது. நிதியியல் கடப்பாடுகளை நேரகாலத்திற்கு செலுத்தக்கூடிய கொள்திறனானது போதுமானது, ஆனால் பொருளாதார நிலைமைகளில் ஏற்படக்கூடிய மோசமான மாற்றங்கள் இக்கொள்திறனை பெரும்பாலும் பாதிக்கலாம். இதுவே ஆகக்குறைந்த முதலீட்டுத் தரமுடைய வகையாகும். |
| BB+ (ika)<br>BB (ika)<br>BB- (ika) | ஊகம். 'BB' தரப்படுத்தலானது கடன் இடர்நேர்கை உருவாகக்கூடிய சாத்தியம் உண்டு என்று குறிப்பதுடன், முக்கியமாக காலப்போக்கில் மோசமான பொருளாதார மாற்றங்களின் விளைவாக நிகழலாம். எவ்வாறாயினும், நிதியியல் கடப்பாடுகளை சந்திப்பதனை அனுமதிப்பதற்காக வணிக மற்றும் நிதியியல் மாற்றுவழிகள் காணப்படலாம். இவ்வகையினுள் தரப்படுத்தப்பட்ட பிணையங்கள் முதலீட்டுத் தரம் வாய்ந்தவை அல்ல. |
| B+ (ika)<br>B (ika)<br>B- (ika) | உயர்ந்த ஊகம். 'B' தரப்படுத்தலானது குறிப்பிடத்தக்களவு கடன் இடர்நேர்கை உள்ளது என்பதை குறிக்கின்றது. ஆனால் ஓர் வரையரைக்குட்பட்ட பாதுகாப்பு காணப்படுகின்றது. நிதியியல் கடப்பாடுகள் தற்போது சந்திக்கப்படுகின்றன. எவ்வாறாயினும், தொடர்ச்சியாக கொடுப்பனவுகளை செலுத்துவதற்கான கொள்திறனானது நிலைத்திருக்கக்கூடிய, சாதகமான வணிக மற்றும் பொருளாதார சூழலைப் பொறுத்ததாகும். |
| CCC (ika)<br>CC (ika)<br>C (ika) | உயர்ந்த தவறுதல் இடர்நேர்கை. தவறுதல் மெய்யாகவே சாத்தியப்படக்கூடியதாகும். நிதியியல் கடப்பாடுகளைச் சந்திப்பதற்கான கொள்திறனானது நிலைத்திருக்கக்கூடிய, சாதகமான வணிக மற்றும் பொருளாதார சூழலில் மாத்திரமே தங்கியுள்ளது. ஓர் 'CC' தரமானது ஏதோ ஒரு வகையான தவறுதல் நிகழக்கூடும் என்பதனை குறிப்பிடுகின்றது. 'C' தரமானது உடனடியாக தவறுதல் இடம்பெறலாம் என்பதனை குறிப்பிடுகின்றது. |
| DDD (ika)<br>DD (ika)<br>D (ika) | தவறுதல். பிணையங்கள் அதிக ஊகத்தையுடையவை மற்றும் அவற்றின் பெறுமதியானது, கடப்பாடுடையவர் கலைக்கப்படும்போது அல்லது மறுசீரமைக்கப்படும்போது ஏற்படக்கூடிய மீளெழுச்சி பெறுமதியினை விஞ்சாது. 'DDD' தரமானது தொடர்புடைய ஏதேனும் பிணையங்களில் நிலுவையிலுள்ள தொகையினை மீட்பதற்கு உயர்ந்த சாத்தியப்பாட்டினை குறிக்கின்றது. 'DD' தரமானது அத்தகைய நிலுவைகளில் 50% முதல் 90% வரையான மீட்டலை எதிர்பார்ப்பதனை குறிப்பதுடன் 'D' தரமானது சாத்தியப்படக்கூடிய ஆகக்குறைந்த மீட்டலை குறிப்பிடுகின்றது, அதாவது 50% ற்கு குறைந்தது. |

# முதலீடு செய்வதன் இடர்நேர்கைகள் பற்றி அறிந்திருங்கள்

ஒவ்வொரு முதலீடும் ஓர் இடர்நேர்கையுடன் வருகின்றது. இடர்நேர்கை என்பது முதலீட்டின் மெய்யான வருவாயானது எதிர்பார்த்ததிலும் பார்க்க வேறுபடலாம் என்ற சாத்தியப்பாடாகும். இது ஆரம்ப முதலீட்டின் ஒரு பகுதியினை அல்லது அனைத்தையும் இழக்கலாம் எனும் சாத்தியப்பாட்டினை உள்ளடக்குகின்றது. நிலையான வைப்புகள் மற்றும் தொகுதிக்கடன்கள் போன்ற நிலையான வட்டியினை வழங்கும் கருவிகளில் உங்களுக்கு தவறுதல் இடர்நேர்கை மற்றும் வாங்கும் திறன் இடர்நேர்கை காணப்படுகின்றது. (வாங்கும் திறன் இடர்நேர்கை என்பது பணவீக்கத்திலும் பார்க்க உங்களது வருவாயானது குறைவாகக் காணப்படும்போது எழுகின்றது. இங்கு முதலீடானது முதிர்வடையும்போது கிடைக்கும் பணத்தைக்கொண்டு நீங்கள் முன்னர் வாங்கக்கூடிய அதேயளவு பொருட்களை வாங்கமுடியாது என்பதாகும்). பங்குகள், நம்பிக்கை அலகுகள் மற்றும் தங்கம் என்பவற்றில் சந்தை இடர்நேர்கை அல்லது மாற்றமடையும் தன்மை காணப்படுகின்றது. (மாற்றமடையும் தன்மை என்பது முதலீட்டாளர்களது நடத்தை மற்றும் உணர்ச்சிப்பாங்கு மற்றும் ஏனைய காரணிகளின் நிமித்தம் நாளாந்தம் விலைகளில் ஏற்படக்கூடிய ஏற்ற இறக்கத்தை குறிப்பிடுகின்றது) ஆதன முதலீடுகள் திரவத்தன்மை இடர்நேர்கையினைக் கொண்டவையாகும், இவற்றை நீங்கள் விரைவாக பணமாக மாற்ற இயலாதிருக்கலாம். உங்களால் பொறுப்பேற்கக்கூடிய இடர்நேர்கை குறித்து நீங்கள் அறிந்திருப்பது முக்கியமானதாகும். உங்களது முதலீடுகளுக்காக நீங்கள் அவதிப்பட விரும்பும் மன உளைச்சலின் அளவை இது குறிப்பிடுகின்றது. நீங்கள் ஓர் தொழில்சார் முதலீட்டு ஆலோசகருடன் கதைப்பீர்களாயின், அவர் வருவாயினைப் பற்றிக் கதைப்பதற்கு முன்னர் முதலீட்டில் காணப்படும் அனைத்து இடர்நேர்கை குறித்து ஓர் பொதுவான கருத்தினை வழங்குவார். நெறிமுறையற்ற ஆலோசகர்கள் இதற்கு எதிர்மறையாக செயற்படுவார்கள்.




**"ஒவ்வொரு முதலீடும் ஆபத்துடன் வருகிறது. அபாயம் என்பது முதலீட்டின் உண்மையான வருமானம் எதிர்பார்த்ததை விட வித்தியாசமாக இருக்கும், மேலும் அசல் முதலீட்டில் சில அல்லது அனைத்தையும் இழக்கும் வாய்ப்பையும் உள்ளடக்கியது."**

# மூலதனச் சந்தையில் முதலீடு செய்தல்

## முதலீட்டின் வகைகள்

அரசாங்கம், நிதியியல் நிறுவனங்கள் மற்றும் கம்பனிகள் கடன் பெறுவதற்காக அல்லது கடனின் மூலம் பணத்தை திரட்டுவதற்காக முறிகளை பயன்படுத்துகின்றன. இவை இலங்கையில் தொகுதிக்கடன் பத்திரங்கள் (Debentures) என்றழைக்கப்படுகின்றன. நிறுவன மற்றும் தனிநபர் முதலீட்டாளர்கள் இவற்றில் வட்டியினை வருவாயாகப் பெறுவதற்காக முதலீடு (பணத்தை கடனுக்கு வழங்குகின்றார்கள்) செய்கின்றார்கள். இங்கு கடன்பெற்றுக்கொண்ட முதலானது ஓர் குறிப்பிட்ட பின்னொரு தினத்தில் திருப்பிச் செலுத்துவதற்கான ஓர் ஒப்பந்தம் காணப்படுகின்றது. கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் (கொ.ப.ப.) தொகுதிக்கடன்களை கொள்வனவு மற்றும் விற்பனை செய்துகொள்ளலாம். காலப்போக்கில் இவற்றின் பெறுமதியானது உயர்வடையலாம் அல்லது வீழ்ச்சியடையலாம்.




ஓர் பங்கானது ஓர் நிறுவனத்தின் உரித்துவத்தில் ஓர் பகுதியினை பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. நீங்கள் ஒரு கம்பனியில் பங்குகளை வைத்திருந்தால், கம்பனி உழைக்கும் இலாபத்திலிருந்து நீங்கள் பங்கிலாபத்தைப் பெற்றுக்கொள்ளலாம். பங்கின் விலையானது காலப்போக்கில் மாற்றமடையலாம். பங்கொன்றின் விலையானது அதிகரித்தால், நீங்கள் அதனைக் கொள்வனவு செய்த விலையிலும் பார்க்க அதிக பெறுமதியினைக் கொண்டிருக்கும். விலையானது வீழ்ச்சியடைந்தால், நீங்கள் கொள்வனவு செய்வதற்கு செலுத்திய விலையிலும் பார்க்க குறைவான பெறுமதியினைக் கொண்டிருக்கும். பங்கொன்றின் விலையானது குறிப்பிட்ட கம்பனியின் செயற்திறன், கம்பனி செயற்படும் துறையின் இயக்காற்றல்கள் மற்றும் பொதுவான பொருளாதார நிலைமைகள் என்பவற்றில் தங்கியுள்ளது.



## முதலிடுவது எப்படி?

இடர்நேர்கையினைக் குறைப்பதற்கும் உங்களது முதலீட்டின் வருவாயினை பெருக்குவதற்கும் பின்வருவன முக்கியமானதாகும்.

## உங்களது நிதியியல் எதிர்காலத்திற்கு ஓர் மூலோபாயத்தினை வைத்திருங்கள்

நன்கு திட்டமிடப்பட்ட முதலீட்டு மூலோபாயமானது அனைத்து வேறுபாட்டினையும் ஏற்படுத்தலாம். ஓர் மூலோபாயமின்றி இருக்கும்போது உணர்ச்சி வசத்துடன் செயற்படக்கூடிய போக்கு காணப்படுகின்றது. உதாரணமாக, பங்குச் சந்தையில் ஏற்படும் செங்குத்தான வீழ்ச்சியினைத் தொடர்ந்து ஏற்படும் பதட்டமான விற்பனை. பல முதலீட்டாளர்கள் பயன்படுத்தும் ஓர் கருவியாக முதலீட்டுக் கொள்கைக் கூற்று (Investment Policy Statement) காணப்படுகின்றது. இது முதலீட்டுக் குறிக்கோள்களையும் கட்டுப்பாடுகளையும் விளக்குகின்றது. அதாவது, வருவாய் தேவைப்பாடுகள், இடர்நேர்கை சகிப்புத்தன்மை, கட்டுப்பாடுகள் (முதலீட்டுக் கால எல்லை, திரவத்தன்மை தேவைப்பாடுகள், சட்டங்கள், ஒழுங்குவிதிக் கட்டுப்பாடுகள், வரியிடுதல் மற்றும் வாடிக்கையாளரின் தனித்துவமான விருப்பத் தேர்வுகள் மற்றும் சூழல்கள் ) போன்றனவாகும். ஓர் தொழில்சார் முதலீட்டு ஆலோசகர் வாடிக்கையாளரின் தேவைகளை புரிந்துகொள்ள முயற்சிப்பதுடன் ஓர் முதலீட்டுக் கொள்கைக் கூற்றினை வரைந்து, முதலீடுகளை முகாமைப்படுத்தும் அனைத்து தரப்பினரதும் பொறுப்புக்களை ஆவணப்படுத்துவார். உங்களது முதலீட்டுக் குறிக்கோள்கள் மற்றும் இடர்நேர்கை சகிப்புத்தன்மை ஆகியவற்றின் அடிப்படையில், முதலீட்டுக் கொள்கைக் கூற்றானது உங்களுக்கு பொருத்தமான சொத்து ஒதுக்கத்தினை உங்களது முதலீட்டினை முகாமைப்படுத்தும் முதலீட்டு ஆலோசகருக்கு பரிந்துரைக்கும். வாடிக்கையாளரது குறிக்கோள்கள், கட்டுப்பாடுகள் அல்லது சூழல்கள் மாற்றமடைவதற்கேற்ப முதலீட்டுக் கொள்கைக் கூற்றானது கிரமமாக மீளாய்வு செய்யப்படும் மற்றும் புதுப்பிக்கப்படும்.



## இடர்நேர்கைகளைக் குறைப்பதற்காக உங்களது முதலீடுகளை பன்முகப்படுத்துங்கள்

பல்வேறுபட்ட சொத்து வகைகள் பல்வேறுபட்ட மட்டத்திலான இடர்நேர்கை மற்றும் வருவாய் பண்புகளைக் கொண்டுள்ளன. காலப்போக்கில் இவை ஒரே சந்தை நிலைமையின் கீழ் வித்தியாசமாக செயலாற்றும். எனவே, ஒரு சொத்து வகுப்பின் சாத்தியமான செயற்திறனானது இன்னுமோர் சொத்து வகுப்பின் எதிர்மறையான செயற்திறனை ஈடுசெய்யும். எனவே, முதலீட்டாளர்கள் பல சொத்து வகுப்புகளிலும் ஒரு சொத்து வகுப்பினுள்ளும் பன்முகப்படுத்துதல் வேண்டும்.




## உங்களது முதலீட்டுத் தேக்கத்தை தவறாமல் மீளாய்வு செய்யுங்கள்

உங்களுக்கு தேவையான பன்முகப்படுத்தலை முதலீட்டுத்தேக்கம் வழங்குவதனை உறுதிப்படுத்துவதற்காக உங்களது முதலீட்டுத் தேக்கத்தை தவறாமல் மீளாய்வு செய்யுங்கள். உங்களது முதலீட்டுத் தேக்கத்தின் வருவாயினை, அளவை மட்டக்குறிக்கெதிராக (டீநெஉாஅயசம) கண்காணிப்பதற்காக அதனை மீள்மதிப்பீடு செய்யுங்கள்.




CFA Society Sri Lanka
CSE COLOMBO STOCK EXCHANGE
Creating Wealth and Value

# மூலதனச் சந்தையில் முதலீடு செய்வதன் அனுகூலங்கள்

**1. மூலதன மதிப்பேற்றம்** - பங்குகள் மற்றும் தொகுதிக்கடன் பத்திரங்கள் போன்ற பட்டியலிடப்பட்ட பிணையங்களில் அல்லது நம்பிக்கை அலகுகளில் மேற்கொள்ளப்படும் முதலீடுகள், சேமிப்புக் கணக்குகள் மற்றும் நிலையான வைப்புகள் போன்றவற்றிலும் பார்க்க அதிக நீண்டகால வருவாயினை வழங்கலாம். இவை மூலதன இலாபங்கள் மற்றும் பங்கிலாபங்கள் போன்ற உருவத்தில் வரலாம். நீண்டகாலப் பகுதியில் பிணையங்களது விலைகள் பணவீக்கத்தினை விஞ்சும் போக்கினை காண்பிக்கும்.

| காலம் | வருடங்களின் எண்ணிக்கை | ஒரு வருடத்திற்கான சராசரி வருவாய் (%) | ஒரு வருட திறைசேரி உண்டியலின் சராசரி விளைவு (%) | பங்குகளிலுள்ள இடர்நேர்கை வட்டம் |
|---|---|---|---|---|
| 1985 – 2012 | 28 | 26.59 | 14.29 | 12.30 |
| 2002 – 2012 | 11 | 32.98 | 11.56 | 21.42 |
| 2009 – 2012 | 4 | 53.53 | 11.33 | 42.20 |

**2. திரவத்தன்மை மற்றும் நெகிழ்வுத்தன்மை** - பங்குகள் மற்றும் தொகுதிக்கடன் பத்திரங்களை சந்தையில் காணப்படும் தற்போதைய விலைகளில், கணிசமானளவு நேரம் மற்றும் குறைவான கொடுக்கல் வாங்கல் கட்டணத்துடன் இலகுவாக விற்பனை செய்துகொள்ளலாம். பல்வேறுபட்ட மட்டத்திலான வருமானத்தைக்கொண்ட முதலீட்டாளர்களுக்கு கட்டுப்படியாகத்தக்க விதத்தில் பிணையங்கள் அலகுகளாகவும் குவியலாகவும் வர்த்தகம் செய்யப்படுகின்றன.

**3. பன்முகப்படுத்தல்** - பங்குப் பரிவர்த்தனைகளில் பட்டியலிடப்பட்டுள்ள பிணையங்களின் பல்வகை மற்றும் பரப்பெல்லை என்பன முதலீட்டாளர்கள் தங்களது முதலீடுகளை பன்முகப்படுத்தவதற்கான வாய்ப்பினை வழங்குகின்றன. ஒரு குறிப்பிட்ட கம்பனியின் இடர்நேர்கைக்கு தங்களது வெளிப்படுத்தலை (நஒழிழளரசந) குறைத்துக் கொள்வதற்கும் தங்களது முதலீட்டினை பரவலான பிணையங்களிலிருந்து தெரிவு செய்துகொள்வதற்குமான வாய்ப்பினை வழங்குகின்றது. இந்த அனுகூலமானது நம்பிக்கை அலகுகளிலிருந்து மெய்யாகவே கிடைக்கக்கூடியதாயிருக்கின்றது. இவை பலரிடமிருந்து திரட்டிய பணத்தினை விசேட தொழில்சார் நிபுணத்துவத்தினை பயன்படுத்தி முதலீடு செய்கின்றன. இது ஓர் தனிநபர் முதலீட்டாளரது ஆற்றலுக்கு அப்பாற்பட்டதாகும்.

**4. பிணைஈடு** - கடன் கொடுக்கும் நிறுவனங்களிலிருந்து கடன்கள் போன்ற பணமளிப்புகளைப் பெற்றுக்கொள்வதற்கு பிணையங்களை ஈட்டாகப் பயன்படுத்திக்கொள்ளலாம்.



நீண்டகாலத்திற்கு ஓர் திடமான மூலோபாயத்தில் நிலைத்திருக்கும் முதலீட்டாளர்கள் முன்னோக்கி வந்துள்ளார்கள் என்பதனை வரலாறு நிரூபிக்கின்றது. பல குறுங்கால நெருக்கடிகள் இருந்தபோதிலும், பங்குச் சந்தைகள் வரலாற்று ரீதியாக மீட்டெழுந்துள்ளன. இவை நீண்டகால, நிலைபேறுடைய கம்பனிகளது இலாப வளர்ச்சியின் மூலம் இயக்கப்படுகின்றன.

# முதலீடுகளை மேற்கொள்ளும்போது தொழில்சார் ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளுங்கள்

முதலீடு செய்யும்போது பின்வரும் பண்புகளைக் கொண்ட ஓர் முதலீட்டு நிபுணரிடமிருந்து தொழில்சார் ஆலோசனையை நாடுங்கள். தரகுக்கூலியினால் ஊக்கமளிக்கப்படாதவர், நிரூபிக்கப்பட்ட சாதனைகளை உடையவர், உயர் மட்டத்திலான ஆற்றலுடையவர். அத்துடன் உலகளாவிய ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட நிருவகமொன்றினால் கடுமையாக வலியுறுத்தப்படும் தொழில்சார் நடத்தைக்கான நியமங்கள் மற்றும் கடுமையான அற நெறி நியதிகளுக்கு கட்டுப்பட்டவராயும் இருத்தல் வேண்டும். உங்களது வாழ்நாள் சேமிப்பினை மிருதுவாக கதைக்கும் விற்பனையாளரிடம் ஒப்படைக்க வேண்டாம். அதேபோன்று, உங்களது பணத்தை நேரடியாக ஓர் ஆலோசகரிடம் ஒப்படைக்கவும் வேண்டாம். இதற்குப் பதிலாக, ஓர் பிரபல்யமான பாரிய வங்கியினைப் போன்ற காப்போனைப் (Custodian) பயன்படுத்துங்கள். ஆலோசகர் நேரடியாக உங்களது வைப்புகளை அல்லது திரும்பப் பெறுதல்களை கையாளுகை செய்யாததன் காரணமாக இது மோசடிக்கான வாய்ப்பினைக் குறைக்கும்.

ஓர் முதலீட்டு ஆலோசகரை நீங்கள் தெரிவு செய்வதற்கு முன்னர் அவரைப் பற்றி நன்கு விசாரித்து அறிந்துகொள்ளுங்கள். உரிமமளிக்கப்பட்ட தொழில்சார் முதலீட்டு ஆலோசகர்களது பட்டியலொன்றினை பெறுவதற்கு இ.பி.ப.ஆ. உடன் நீங்கள் தொடர்புகொள்ளலாம் அல்லது முதலிடுவதில் வெற்றி கண்ட ஓர் சகாவிடம் கதையுங்கள். எவ்வாறாயினும், கண்ணை மூடிக்கொண்டு எந்த நிபுணரையும் நம்பவேண்டாம். அவர் தரகுக்கூலியினைப் பெற்றுக்கொள்வதற்காக அவரது சொந்த முதலீட்டுக் கருவிகளை உங்களுக்கு விற்க முயலலாம். பல்வகையான கருத்துக்களைப் பெற்றுக்கொள்ள முயலுங்கள் மற்றும் உங்களது சொந்த அறிவுபூர்வமான தீர்மானத்தை நம்புங்கள். ஓர் முதலீட்டாளர் என்ற வகையில் உங்களது முதலீடுகளை கட்டியெழுப்புவதற்கு உதவுவதற்காக, நீங்கள் மேற்கொள்ளவேண்டிய ஒரேயொரு மிகவும் முக்கியமான தீர்மானம் என்னவெனில் ஓர் முதலீட்டு ஆலோசனை வழங்கும் நிறுவனத்தை (பங்குத்தரகர், நிதி முகாமையாளர் அல்லது ஆதன முகாமையாளர் என விவரிக்கப்படுகின்றது) தெரிவு செய்வதாகும். நீங்கள் ஓர் கற்றுக்குட்டியாகவோ அல்லது பல வருடங்களாக முதலீடு செய்தவராகவோ இருப்பது ஒரு பொருட்டல்ல. கேள்விகளை கேட்பதற்கு எப்போதும் தாமதம் என்று ஒன்றில்லை. நீங்கள் நம்பிக்கை வைக்கக்கூடிய மற்றும் நல்லெண்ணமுடைய ஓர் முதலீட்டு ஆலோசகருடன் நீங்கள் சிரமப்பட்டு உழைத்த பணத்தை முதலீடு செய்வதற்கு முன்னர் நீங்கள் சில வினாக்களை கேட்டல் வேண்டும்.



**“முதலீடு செய்யும் போது, ஒரு முதலீட்டு நிபுணரிடம் தொழில்முறை ஆலோசனையைப் பெறவும், அவர் முன்-முன் கமிஷ னில் ஊக்கமளிக்கவில்லை, நிஷரூபிக்கப்பட்ட சாதனைப் பதிவு, உயர் மட்டத் திறன் மற்றும் கடுமையான நெறிமுறைகள் மற்றும் தொழில்முறை நடத்தைத் தரங்களுக்குக் கட்டுப்பட்டவர். உலகளாவிய அங்கீகாரம் பெற்ற நிறுவனத்தால் செயல்படுத்தப்படுகிறது.”**

1. முதலீட்டு நிறுவனம் தேவையான உரிமத்தினை வைத்துள்ளதா மற்றும் அவர்களால் வாடிக்கையாளர் சான்றாதாரத்தினை வழங்கமுடியுமா? இதற்கான முதலாவது படி கொ.ப.ப. உடன் அல்லது இ.பி.ப.ஆ. உடன் சோதனை செய்துகொள்வதாகும். இரண்டாவதாக, அந்நிறுவனத்தின் நடைமுறையிலுள்ள வாடிக்கையாளர்கள் சிலருடன் உரையாடுங்கள்.

2. முதலீட்டினைப் பற்றிய ஓர் தெளிவான புரிந்துணர்வினை முதலீட்டு ஆலோசனை நிறுவனம் வழங்குகின்றதா? இடர்நேர்கைகள் பற்றிய ஓர் சிறந்த கருத்தினை பெற்றுக்கொள்வதற்காக நீங்கள் எதிரில் வழங்கப்பட்டுள்ள வினாக்களை கேட்கலாம்.

3. முதலீட்டு ஆலோசனை நிறுவனம் பின்வருவனவற்றினை கருத்திற்கொண்டு முதலீடுகளை முகாமைப்படுத்துகின்றதா? விவேகத்துடன், அடிப்படைகளை கருத்திற்கொண்டு, வாடிக்கையாளர்களது இடர்நேர்கை சகிப்புத்தன்மை மட்டங்களுடன் இசைவுள்ள வருமானத்தினை வழங்கும் குறிக்கோளுடன் முகாமைப்படுத்துகின்றதா?
   - அ. எவ்வாறு இந்த முதலீடு பணத்தை உருவாக்கும்? விசேடமாக, பெறுமதி அதிகரிப்பதற்கு இந்த முதலீட்டிற்கு என்ன சம்பவிக்க வேண்டும்?
   - ஆ. நான் சமநிலை அடைவதற்கு இந்த முதலீடு பெறுமதியளவில் எவ்வளவு அதிகரிக்க வேண்டும்?
   - இ. எனக்கு பணம் அவசரமாக தேவைப்பட்டால் அதனை எவ்வளவு சுலபமாக விற்க முடியும்?

4. முதலீட்டு நிறுவனம் பின்வருவனவற்றை பேணுகின்றதா? இணக்கப்பாடு மற்றும் இடர்நேர்கை முகாமைத்துவ முறைமைகள், தகவல் பாதுகாப்பு மற்றும் வாடிக்கையாளர் தகவல்களை பாதுகாப்பதற்கான கட்டுப்பாடுகள்.

5. அந்நிறுவனத்திலிருந்து எந்த ஒரு நபராவது ஏதேனும் அரசாங்க முறைமைப்படுத்துபவரினால் நெறிமுறையற்ற மற்றும் ஒழுங்கில்லாத நடத்தைக்காக ஒழுக்காற்று நடவடிக்கைக்கு உட்பட்டாரா அல்லது நம்பிக்கை கடப்பாடுகளை மீறியமைக்காக ஒரு வாடிக்கையாளரினால் அவருக்கெதிராக வழக்கு தொடரப்பட்டதா?

# 06 சொத்து முகாமைத்துவம்

சொத்து முகாமைத்துவம் என்பது ஓர் முதலீட்டாளரை ஓர் முதலீட்டுத் தேக்கத்திற்கு (ஐளெநளவஅநவெ ீழசவகழடழை) பொருத்துதல் பற்றியதாகும். இது பங்குகளை தெரிவுசெய்தல் அல்லது புத்திசாலித்தனமாக முதலீடு செய்தல் அல்ல. பன்முகப்படுத்தப்பட்ட ஓர் முதலீட்டுத் தேக்கத்திலும் பார்க்க ஓர் செறிவான முதலீட்டுத் தேக்கம் பாரிய நட்ட இடர்நேர்கையினை சந்திக்கின்றது. சொத்து முகாமைத்துவம் என்பது உங்களைப் பற்றி புரிந்துகொள்வதிலிருந்து ஆரம்பித்து, சந்தைகளைப் பற்றி புரிந்துகொண்டு உங்களது முதலீட்டுத் தேக்கத்தில் மூலதனப் பாதுகாப்பிற்கும் எதிர்கால வளர்ச்சிக்கும் இடையிலான சமநிலையினை கண்டறிவதற்கு முனைகின்றது. சொத்துக்களை முகாமை செய்தல் என்பது விரைவாக செல்வந்தவராவதோ அல்லது பங்குச் சந்தையில் ஊகத்தில் ஈடுபடுவதோ அல்ல. சொத்து முகாமைத்துவம் என்பது சுபீட்சத்திற்காக நன்கு ஆலோசனை செய்யப்பட்ட பயணமாகும். மக்கள் செல்வந்தராக வளரும்போது அச்செல்வத்தை முகாமைப்படுத்தும் மற்றும் தக்கவைக்கும் செய்பணி மிகவும் சிக்கலாகின்றது.



**“செறிவூட்டப்பட்ட போர்ட்/போலியோ, நன்கு பன்முகப்படுத்தப்பட்ட ஒன்றை விட அதிக இழப்பை எதிர்கொள்கிறது.”**

## சொத்து ஒதுக்கம் மற்றும் முதலீட்டுத்தேக்க பன்முகப்படுத்தல்

முதலீடு செய்யும்போது ஓர் தனிநபர் முதலீட்டாளர் எப்போதும் ஓர் முதலீட்டுத்தேக்க அணுகுமுறையினை கடைப்பிடித்தல் வேண்டும். அதாவது குறிப்பிட்ட தனிநபரின் சூழ்நிலைகளுக்கு பொருத்தமான முழுமையான முதலீட்டுத் தேக்கத்தின் முதலீட்டுச் சிறப்பியல்புகளுக்கு பங்களிக்கக்கூடிய தனிப்பட்ட சொத்து வகையினையும் பிணையங்களையும் மதிப்பிடுதல் வேண்டும். முதலீட்டுத்தேக்க பன்முகப்படுத்தலானது முதலீட்டாளர்களுக்கு துணைபுரிவதுடன் அழிவுண்டாக்குகின்ற முதலீட்டு விளைவுகளை தவிர்க்கின்றது. பல பணிஓய்வுபெற்ற முதலீட்டாளர்கள் தங்களது பணத்தில் பெரும்பகுதியினை இலங்கையிலுள்ள ஓர் குறிப்பிட்ட நிதிக் கம்பனியில் முதலீடு செய்து அக்கம்பனி கடன் தீர்க்க வகையற்றவரானது நன்கு தெரிந்த ஓர் விடயமாகும். பணிஓய்வு பெற்ற இம்முதலீட்டாளர்கள் நிதியியல் ரீதியாக நாசப்படுத்தப்பட்டு, அவர்களது மருத்துவ செலவுகளையும் சந்திக்க இயலாது இறந்து போனார்கள். இதிலிருந்து கற்றுக்கொள்வது என்னவென்றால் 'ஒரே கூடையில் அனைத்து முட்டைகளையும் போடாதீர்கள;' அதாவது ஓர் பன்முகப்படுத்தப்பட்ட முதலீட்டு அணுகுமுறையினை எடுத்தல் வேண்டும். இதன் மூலம் உங்களது முதலீட்டிலிருந்து எதிர்பார்க்கும் வருவாயினை அநாவசியமாக குறைத்துக்கொள்ளாது உங்களது செல்வத்துடன் தொடர்புபட்ட இடர்நேர்கையினை குறைத்துக்கொள்ள முடியும்.

அனேகமான வறிய மக்கள் தங்கத்தில் முதலீடு செய்து, எப்போதாவது பணம் தேவைப்படும்போது அவற்றை அடகு வைக்கின்றார்கள். அதேபோன்று செல்வந்தர்கள் காணி, வீடுகள் மற்றும் அடுக்குமாடி குடியிருப்பு மனைகளில் முதலீடு செய்கின்றார்கள். இவர்கள் அனைவரும் இவற்றின் பெறுமதி அதிகரிக்கும் என்று தவறாக அனுமானிக்கின்றார்கள்.

இங்கு தான் பன்முகப்படுத்தப்பட்ட சொத்து வகைகளைக் கொண்ட முதலீட்டுத் தேக்கமும் மற்றும் ஒவ்வொரு சொத்து

வகையினுள்ளும் மேலதிக பன்முகப்படுத்தலும் இடர்நேர்கைகளை முகாமைப்படுத்துவதற்கு துணைபுரியும். இது குழப்பமான நேரங்களில் முதலீட்டில் நிலைத்திருக்க உதவுவதுடன் ஒரு சில சொத்துக்களுக்கு மற்றுமான அதிக வெளிப்பாட்டு அபாயத்தினையும் விவேகமற்ற அளவு முதலீட்டு இடர்நேர்கையினை எடுப்பதனையும் தவிர்ப்பதற்கும் துணைபுரிகின்றது.

> உலகத்தில் எண்ணற்ற தடவைகளில் தங்கம் மற்றும் சொத்து மனை ஆகியவற்றின் விலைகள் முறிவடைந்துள்ளன. சுகயீனம் போன்ற அவசர தேவைகளுக்காக பணம் தேவைப்படும்போது அத்தகைய சொத்துக்கள் அவற்றை வாங்கிய ஆரம்ப விலையிலும் பார்க்க மிகக் குறைந்த விலைக்கு விற்கவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

ஓர் தனிநபர் முதலீட்டாளருக்கான முதலீட்டுத்தேக்க தெரிவுகள் பல்வேறுபட்ட சொத்து வகைகளையும் உள்ளடக்கலாம். உதாரணமாக, இவை நிலையான வருமானத்தை வழங்கும் முதலீட்டுக் கருவிகளான அரசாங்கத் திறைசேரி உண்டியல்கள் மற்றும் முறிகள், பட்டியலிடப்பட்ட கம்பனிக் கடன் பத்திரங்கள், உள்ளூர் மற்றும் வெளிநாட்டு பட்டியலிடப்பட்ட பங்குகள் மற்றும் காசு மற்றும் காசுக்குச் சமனான முதலீடுகளையும் உள்ளடக்கும். மேற்குறிப்பிட்ட அனைத்து சொத்து வகையும் திரவத்தன்மையினைக் கொண்டன அல்லது மிகவும் இலகுவாக பணமாக மாற்றக்கூடியவையாகும். பங்குகளிலும் இரண்டு வகைகள் காணப்படுகின்றன. அவை வளர்ச்சியினை வழங்கக்கூடிய பங்குகள் மற்றும் வருமானத்தினை வழங்கக்கூடிய பங்குகளாகும். வருமானப் பங்குகள் இடர்நேர்கை குறைந்தவை ஏனெனில் அவை ஓர் நிலையான வருமான ஊற்றினை வழங்குகின்றன. அதாவது பங்குச் சந்தை வீழ்ச்சியடைந்துள்ளபோதும் பங்கிலாபங்களை வழங்குதல். உங்களது முதலீட்டுத் தேக்கத்தில் நீங்கள் ஓரளவு திரவத்தன்மையினையும் வைத்திருத்தல் வேண்டும். வழக்கமாக 3 முதல் 6 மாதங்களுக்கு உங்களது செலவுகளுக்கு சமனான தொகையினை பணச்சந்தை முதலீடுகளில் அல்லது விரைவாக பணமாக்கக்கூடிய சேமிப்புக் கருவிகளில் வைத்திருத்தல் வேண்டும். இதற்கும் மேலாக, உங்களது முதலீட்டுத்தேக்கமானது குறைவான திரவத்தன்மையுடைய சொத்து மனைகள் (சுநயட நுளவயவந), தங்கம் போன்ற விலைமதிப்பற்ற உலோகங்கள், கலைப்பொருட்கள் மற்றும் பல்வேறு மாற்று முதலீடுகள் (உதாரணமாக தனிப்பட்ட உரித்துவம் - ீசளையவந நுஙரவைல) போன்றவற்றை உள்ளடக்கலாம்.

ஒரு தொழில்சார் முதலீட்டு ஆலோசகர் பின்வருவனவற்றினை அடிப்படையாகக்கொண்டு ஓர் குறிஇலக்கான சொத்து ஒதுக்கீட்டினைக் கொண்ட முதலீட்டுத்தேக்கத்தினை கட்டியெழுப்புவார். இவை பொருளாதார மற்றும் மூலதனச் சந்தை எதிர்பார்ப்புகள், பிணையங்கள் பகுப்பாய்வு மற்றும் முதலீட்டுக் கொள்கைக் கூற்றில் குறிப்பிட்டுள்ள வாடிக்கையாளரது குறிக்கோள்கள் மற்றும் கட்டுப்பாடுகள் என்பனவாகும். சொத்து ஒதுக்கமானது ஓர் கலை என்பதுடன் ஓர் விஞ்ஞானமும் ஆகும். இது ஒழுங்கான இடர்நேர்கை மற்றும் வெகுமதிக் கலவைக்கு தேவையான பல்வேறு கலவைக்கூறுகளை சமநிலைப்படுத்தும் இரசாயனக் கலவையாகும். பல்வேறுபட்ட சொத்து வகைகளுக்கிடையேயான இடர்நேர்கை மற்றும் வருவாய் சிறப்பியல்புகளும் இந்த சொத்து வகைகளுக்கிடையேயான ஒட்டுறவுமே மிகவும் முக்கியமானதாகும். உதாரணமாக, வட்டி வீதங்கள் உயர்வடையும்போது பங்கு (மற்றும் ஆதன) சந்தைகள் வீழ்ச்சியடையும். வட்டி வீதங்கள் குறைவடையும்போது இதற்கு எதிர்நிலையானது இடம்பெறும்.இங்கு முதலீட்டு ஆலோசகர் எதனை அடைவதற்கு முயற்சிக்கின்றார் என்றால், முன்னறிந்து கூறமுடியாத எதிர்காலத்திற்கு எதிராக, குறிப்பிட்ட வாடிக்கையாளரது செல்வத்தை பாதுகாப்பதற்காக மிகவும் பொருத்தமான விரிவாக பன்முகப்படுத்தப்பட்ட முதலீட்டுத்தேக்கத்தினை உருவாக்குவதாகும்.



# இடர்நேர்கை முகாமைத்துவம்

இடர்நேர்கை முகாமைத்துவம் என்பது முதலீட்டுத்தேக்கத்தினை உருவாக்கும் செயல்முறையின் ஓர் முக்கியமான அங்கமாகும். ஏதேனும் தனியான ஒரு பிணையத்தின் அல்லது சொத்து வகுப்பின் இடர்நேர்கை அல்ல முக்கியமானது. முதலீட்டுத்தேக்கத்தில் உள்ள அனைத்து சொத்து வகுப்பும் எவ்வாறு செயற்படுகின்றது என்பதே முக்கியமானதாகும். ஓர் முதலீட்டினை மதிப்பிடுவதற்கு அதன் செயற்திறனை பாதிக்கக்கூடிய வெவ்வேறு இடர்நேர்கைகளை கருத்திற்கொள்ளல் வேண்டும்.



சந்தை இடர்நேர்கை பரந்த அம்சங்களை கருத்திற்கொள்கின்றது. நீங்கள் பங்குகளில் முதலீடு செய்தால், நாட்டின் ஒட்டுமொத்த பொருளாதார மற்றும் அரசியல் நிலைமைகள் அல்லது மசகெண்ணெய் விலை, யுத்தம் போன்ற உலக நிகழ்வுகளும் உங்களது முதலீட்டின் பெறுமதியில் ஏற்ற தாழ்வினை ஏற்படுத்தும் என்பதனை நீங்கள் ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும். சந்தை இடர்நேர்கையானது தனிப்பட்ட கம்பனிகளில், முறிகளில் மேற்கொள்ளும் முதலீடுகள் மற்றும் மாற்று முதலீடுகள் என்பவற்றுக்கும் பொருந்தும். உங்களது முதலீட்டின் தரமானது ஒரே மாதிரியாகக் காணப்பட்டாலும் சந்தை வீழ்ச்சியானது உங்களது முதலீட்டின் செயற்திறனுக்கு இடையூறினை விளைவிக்கும். முதலீடுகள் போக்குகளையும் பின்தொடரும். உதாரணமாக, சொத்து மனை ஓர் 'நல்ல' முதலீடாகத் தோன்றலாம். அதிகளவு மக்களை சொத்து மனைகளை வாங்குமாறு ஊக்குவிக்கலாம், இதன் காரணமாக இவற்றின் விலைகள் சில காலத்திற்கு உயர்வடையலாம். முதலீட்டாளர்களது உணர்ச்சிக் கருத்தானது சொத்து மனைகள் மிகை விலை உயர்வடைந்துள்ளன என்ற நம்பிக்கைக்கு மாற்றமடையும்போது, உங்களது மனையின் கட்டமைப்பில் எவ்வித மாற்றமும் இல்லாதிருந்தாலும் உங்களது சொத்து மனையின் பெறுமதியானது வீழ்ச்சியடையலாம்.

**"முக்கியமானது எந்த ஒரு பாதுகாப்பு அல்லது சொத்து வகுப்பின் ஆபத்து அல்ல, மாறாக அனைத்து சொத்து வகுப்புகளும் போர்ட்/போலியோவில் எவ்வாறு செயல்படுகின்றன என்பதுதான்."**



தவறுதல் இடர்நேர்கை பற்றி இதற்கு முன்னர் விளக்கமளிக்கப்பட்டது. இது உள்ளார்ந்த முதலீட்டின் தரம் தொடர்பானதாகும். இது பங்குகள் மற்றும் முறிகளூடாக தனி ஒரு கம்பனியில் முதலீடு செய்யும்போது வெளிப்படையாகின்றது. கம்பனி அல்லது ஓர் நிதி நிறுவனம் தவறாக முகாமைப்படுத்தப்பட்டு கடன் தீர்க்க வகையற்றவரானால் உங்களுக்கு உறுதியளிக்கப்பட்ட வட்டியும் நீங்கள் முதலீடு செய்த முதலும் கிடைக்காமல் போகக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

திரவத்தன்மை இடர்நேர்கை என்பது முன்னர் விளக்கியவாறு, எவ்வளவு விரைவாக உங்களது முதலீட்டினை பணமாக மாற்றலாம் மற்றும் இவ்வாறு மாற்றும்போது எவ்வித நட்டமும் ஏற்படாது மாற்றக்கூடியதாயிருத்தல் வேண்டும்.

காலப்போக்கில் காணப்படும் பணவீக்கத்தின் காரணமாக ரூபாயின் வாங்கும் திறனில் ஏற்படும் வீழ்ச்சியே பணவீக்க இடர்நேர்கை (Inflation Risk) எனப்படுகின்றது. பாதுகாப்பினை வழங்கும் முதலீடுகளிலிருந்து கிடைக்கும் குறைந்த வருவாய் பணவீக்கத்துடன் ஈடுகட்ட முடியாது.




சந்தையில் வட்டி வீதம் மாற்றடையும்போது வட்டி வீத இடர்நேர்கை எழுகின்றது. இது நிலையான வருமானப் பிணையங்களின் முதலினையும் அழித்துவிடலாம். உதாரணமாக, குறைந்த வட்டி வருவாயினை வழங்கும் கடன் பிணையத்தில் நீங்கள் முதலீடு செய்துள்ளீர்கள் என்று எடுத்துக்கொள்வோம். சந்தையில் தற்போது வட்டி வீதங்கள் உயர்வடைகின்றன. இக்கடன் பிணையத்தினை நீங்கள் தற்போது, அதன் முதிர்வுக்கு முன்னர் விற்பனை செய்தால் நீங்கள் ஓர் மூலதன நட்டத்தினை பொறுப்பேற்பீர்கள். மறுதலையாக, நீங்கள் உயர்ந்த வட்டியினை வழங்கும் கடன் பிணையத்தில் முதலீடு செய்திருக்கும்போது சந்தையில் தற்போது வட்டி வீதம் வீழ்ச்சியடைந்தால் நீங்கள் உங்கள் முதலீட்டினை அதன் முதிர்விற்கு முன்னர் விற்பனை செய்து மூலதன இலாபத்தை அனுபவிக்கலாம்.

# 07 எதிர்பாரா நிகழ்விற்கு தயாராயிருங்கள்

## ஏன் காப்புறுதி செய்தல் வேண்டும்?

நீங்கள் காப்புறுதி செய்யும்போது எதிர்பாரா நிகழ்வுகளினால் ஏற்படும் நிதியியல் இடர்நேர்கையில் சிலவற்றை காப்பிடக்கூடியதாயிருக்கின்றது. நாம் பணத்தினை செலுத்தி எதிர்பாரா நட்டம் ஏதேனும் ஏற்பட்டால், எங்களை அல்லது மற்றவர்களை நிதியியல் ரீதியில் பாதுகாக்கக்கூடிய ஓர் வழியாகக் காப்புறுதி காணப்படுகின்றது. இது நிதியில் விளைவுகளை இன்னுமொருவருக்கு – பொதுவாக ஓர் காப்புறுதிக் கம்பனிக்கு, மாற்றல் செய்வதன் மூலம் நிச்சயமற்ற தன்மையினை நீக்குகின்றது. காப்புறுதி நிறுவனமானது விபத்து, தீ. திருட்டு, சுகயீனம் அல்லது இறப்பு போன்றவற்றினால் ஏற்படும் இழப்பினை, உடன்பட்ட ஒரு தொகை பணத்தினை (இது காப்புறுதி தவணைத்தொகை – Insurance premium என்றழைக்கப்படும்) முன்னதாகவே செலுத்துவதனுடாக, ஈடுசெய்கின்றது. இந்த நட்டஈட்டினை மூன்றாம் நபர் ஒருவருக்கும் மேற்கொள்ளலாம். (உதாரணமாக நீங்கள் வாகனம் செலுத்தும்போது யாரையேனும் மோதினால்). உங்களிடம் ஆயுட் காப்புறுதி இருந்து நீங்கள் இறந்தால், உங்களது ஆயுள் காப்புறுதி செய்யப்பட்ட தொகையானது உங்களது குடும்பத்தாருக்குச் செலுத்தப்படும். உங்களது வாகனம் அல்லது மோட்டார் சைக்கிளுக்கு கட்டாயமாக காப்புறுதிப் பாதுகாப்பு (Insurance cover) இருத்தல் வேண்டும். நீங்கள் ஓர் குறிப்பிட்ட நிகழ்வு இடம்பெறுவதற்கு முன்னர் காப்புறுதியினை வாங்கினால் மாத்திரமே காப்புறுதிப் பாதுகாப்பு கிடைக்கும். காப்புறுதி கொள்கை அல்லது ஒப்பந்தம் (Insurance Policy) என்பது எந்த சூழ்நிலையில் மற்றும் நிலைமைகளில் காப்புறுதி நிறுவனம் உங்களுக்கு கொடுப்பனவினை செலுத்தும் என்பதனை விளக்கும் ஒப்பந்தம் அல்லது சட்டரீதியான ஆவணமாகும். ஓர் குறிப்பிட்ட காப்புறுதி கொள்கையின் ஏற்பாடுகளினால் நட்டமானது பாதுகாக்கப்பட்டிருந்தால் மாத்திரமே உங்களுக்கு பணம் செலுத்தப்படும்.

உங்களால் தயாராகவிருக்கமுடியாத இடர்நேர்கைகளிலிருந்து காப்புறுதி பாதுகாக்கின்றது. எனவே இதற்கு நீங்கள் பாரிய தொகை பணத்தை சேமிக்க வேண்டிய அவசியமில்லை. காப்புறுதியாளர்களால் அவர்கள் சந்திக்கக்கூடிய நட்டங்களை எதிர்வுகூறலாம். அவர்களுக்கு மிகநுட்பமாக தெரியாது, ஆனால் அனுபவமும் புள்ளிவிபர தரவுகளும் அவர்களுக்கு ஓர் நல்ல கருத்தினை வழங்கும். ஒரு குறிப்பிட்ட வருடத்தில் ஓர் சிறிய விகிதமான காப்புறுதி கொள்கையாளர்கள் மாத்திரமே மெய்யாக நட்டத்தினால் அவதிப்படுவார்கள். ஓர் காப்புறுதி நிறுவனமானது ஒரே விதமான இடர்நேர்கைக்கு வெளிப்பாடுடைய மக்கள் அனைவரையும் ஒன்று திரட்டுவதன் மூலம் பாதுகாப்பினை வழங்குகின்றது. ஒவ்வொரு நபரிடமிருந்தும் ஒரு தொகை பணத்தை, தவணைத்தொகை, வசூலிப்பதன் மூலம் காப்புறுதியாளர் காப்புறுதித் திரட்டு (Insurance Pool) என்றழைக்கப்படும் ஓர் நிதியத்தினை திரட்டுவார். இதிலிருந்து நட்டங்கள் ஈடுசெய்யப்படும்.




**"நீங்கள் காப்பீடு பெறும்போது, எதிர்பாராத நிகழ்வுகளின் சில நிதி அபாயங்களை நீக்கிவிடுவீர்கள்."**

# காப்புறுதியின் வகைகள்



**ஆயட் காப்புறுதி** என்பது ஓர் காப்புறுதி நிறுவனத்திற்கும் ஓர் தனி நபருக்கும் இடையேயான உடன்படிக்கையாகும். நீங்கள் இறந்தால் காப்புறுதி நிறுவனம் உங்களது குடும்பத்தினருக்கு அல்லது அமர்த்தப்பட்ட மற்றைய பயனாளிக்கு (beneficiary) ஒரு குறிப்பிட்ட தொகை பணத்தை செலுத்துவதாக வாக்குறுதி அளிக்கும்.

**சுகாதார காப்பீடானது** காப்புறுதிக் கொள்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள சில குறிப்பிட்ட மருத்துவ செலவுகளை ஈடுசெய்யும். எந்த மருத்துவ நிலைமைகள் மற்றும் சேவைகளுக்கு காப்பீடு வழங்கப்படும் மற்றும் எந்தளவு தொகைக்கு காப்பீடு வழங்கப்படும் என்பதனை நீங்கள் நன்கு புரிந்துகொள்ளல் அவசியமாகும். அனேகமான காப்புறுதிக் கொள்கைகள் அவை எவற்றை காப்பீடு செய்யாது என்பதனை மிக அழுத்தமாக குறிப்பிடும். எனவே நீங்கள் உங்களது காப்புறுதியாளரிடம் கலந்துரையாடி பின்வருவனவற்றை தெரிந்துகொள்ளுதல் மிகவும் முக்கியமானதாகும். எந்த மருத்துவ செலவுகளுக்கு காப்பீடு வழங்கப்படும் மற்றும் அதனுடன் இணைந்த நிபந்தனைகள் என்ன என்பதனை நுண்ணியமாக அறிந்துகொள்ளவேண்டும். இது உங்களது மருத்துவக் கோரல்கள் காப்புறுதி நிறுவனத்தினால் செலுத்தப்படுவதனை உறுதி செய்வதற்கும் காப்புறுதி நிறுவனம் அதன் பொறுப்பினைத் துறக்காமல் இருப்பதனை உறுதி செய்வதற்கும் ஆகும்.





**ஆதனக் காப்புறுதி** ஆதனத்திற்கு ஏற்படும் சேதங்களுக்கு பாதுகாப்பினை வழங்குகின்றது. முன்னரே காப்புறுதி செய்யப்பட்ட குறித்த ஆதனத்திற்கு சேதம் ஏற்படுமிடத்து காப்புறுதி செய்த நபருக்கு இழப்பீடு வழங்கப்படும். உதாரணத்திற்கு உங்கள் வீடானது எரிந்து சாம்பலனால் அல்லது வெள்ளத்தினால் சேதமுற்றால். அத்தகைய ஓர் சூழ்நிலையில் காப்புறுதி நிறுவனமானது சேதப்பட்ட ஆதனத்தினை புதுப்பிப்பதற்கு / இழந்த ஆதனத்திற்கு மாற்றீட்டினை செய்வதற்கு உங்களுக்கு இழப்பீட்டினை வழங்கும்.



**பொறுப்புக் காப்புறுதி** என்பது நீங்கள் வேறு யாரேனும் நபரது ஆரோக்கியத்திற்கு அல்லது ஆதனத்திற்கு சேதம் எதனையும் விளைவித்தால் உங்களுக்கு அதற்கான காப்புறுதிப் பாதுகாப்பினை வழங்குகின்றது. இது மற்றைய நபரது நட்டத்தை மற்றுமே காப்பீடு செய்கின்றது. நீங்களும் உங்களது ஆதனமும் பாதுகாப்பற்றுக் காணப்படும். பொறுப்புக் காப்புறுதியானது மற்றைய நபரினது சேதத்திற்கு நீங்கள் பொறுப்பாளியாவதிலிருந்து உங்களை பாதுகாக்கின்றது. உதாரணமாக, உங்களது

கட்டிடமானது நிர்மாணிக்கப்பட்டுக்கொண்டிருக்கும்போது அக்கட்டிடம் தகர்ந்து யாரேனும் ஒரு நபரை காயப்படுத்தினால் இத்தகைய காப்புறுதியானது அந்நபரது மருத்துவ செலவுகளை பொறுப்பேற்கும். இதற்கும் மேலாக, இவ்விபத்து ஏற்பட்டதன் காரணமாக அந்நபரின் உடைமைகள் சேதப்பட்டிருப்பின், காப்புறுதி நிறுவனமானது அதற்கும் இழப்பீட்டினை வழங்கும்.



**உடல் ஊனக் காப்புறுதியானது** ஓர் விபத்தின் விளைவாக நீங்கள் உடல் ஊனமுற்று தொழில் புரிய இயலாதவிடத்து அல்லது நீங்கள் உங்களது தொழிலை இழந்தால் பாதுகாப்பினை வழங்கும். நீங்கள் உடல் ஊனத்திற்கெதிராக காப்புறுதி செய்திருந்தால் காப்புறுதி நிறுவனமானது நீங்கள் இழந்துள்ள உழைப்பிற்கு இழப்பீட்டினை வழங்கும்.




**பிரயாணக் காப்புறுதி** என்பது நீங்கள் பிரயாணம் செய்யும்போது எதிர்பாரா சூழ்நிலைகளில் சுகயீனமுற்றால் அல்லது காயப்பட்டால் மற்றும் உங்களது கட்டுப்பாட்டிற்கு அப்பால் நீங்கள் ஓர் விமானப் பயணத்தினை தவறவிட்டால் அல்லது நீங்கள் உங்களது பயணமூட்டையினை இழந்தால் அவற்றிற்கான பாதுகாப்பினை வழங்குகின்றது.

# காப்புறுதி செய்யும்போது செய்யவேண்டியவைகளும் செய்யத்தகாதவைகளும்

**1.** பின்வருவனவற்றை கருத்திற்கொண்டு சிறந்த காப்புறுதி நிறுவனத்தினை இனங்காணுங்கள். அவர்களது கடன் தரப்படுத்தல்களினால் குறிப்பிடப்பட்டுள்ள அவர்களது கொடுப்பனவிற்குரிய ஆற்றல், நிபந்தனைகள், செயல்முறைகள், உங்களது இழப்பீட்டினை செலுத்துவதற்கு எடுக்கப்படும் நேரம் என்பனவாகும். பல்வேறு காப்புறுதி நிறுவனங்களிலிருந்து, முகவர்களிடமிருந்து, காப்புறுதி தரகர்களிடமிருந்து விலைப்புள்ளிகளைப் (ҧரழவயவழைளெ) பெற்றுக்கொள்ளுங்கள். அத்துடன் காப்புறுதி செய்துள்ள நண்பர்களுடன் கதையுங்கள் அல்லது இலங்கையின் காப்புறுதி முறைமைப்படுத்தல் ஆணைக்குழுவுடன் கதையுங்கள். இவர்களுடன் உங்களது காப்புறுதித் தேவை குறித்து கதையுங்கள். காணப்படும் தெரிவுகளை குறித்து கவனமாக சிந்தியுங்கள். அதன் பின்னர் உங்களது தேவைகளை சந்திக்கும் ஓர் காப்புறுதிக் கொள்கையினை தெரிவு செய்யுங்கள்.

**2.** காப்புறுதி ஒப்பந்த ஆவணங்களுக்கு உங்களைப் பற்றிய சரியான தகவல்களை வழங்குங்கள். நீங்கள் சரியான தகவல்களை வழங்காவிட்டால், காப்புறுதிக் கம்பனியானது உங்களது உரிமை கோரல்களுக்கு (உடயஅ) பணத்தை செலுத்தாது விடலாம்.

**3.** ஒப்பந்தத்தினை கவனமாக வாசியுங்கள். ஏதேனும் புரியாவிடின் அதனை கேட்டறிந்து கொள்ளுங்கள். அதிலுள்ள எல்லா கருத்துக்கள் குறித்தும் நீங்கள் திருப்தியடைந்தால் மாத்திரமே கையொப்பமிடுங்கள் - இது நீங்கள் எடுக்கும் காப்புறுதிக் காப்பீட்டுத் தொகை மற்றும் நீங்கள் செலுத்த வேண்டிய காப்புறுதித் தவணைப்பணம் ஆகியவற்றையும் உள்ளடக்கும்.

**4.** விரைவான மற்றும் நேர்மையான உரிமை கோரல்களை மேற்கொள்ளுங்கள். காப்புறுதிக் கொள்கையினால் காப்பீடு அளிக்கப்பட்டுள்ள ஏதேனும் நட்டத்தினை நீங்கள் அடைந்தால் உடனடியாக உங்களது காப்புறுதி நிறுவனத்திற்கு அறிவியுங்கள். உரிமைக் கோரல்களை மேற்கொள்ளும்போது எந்நேரமும் உண்மையைக் கூறுங்கள். பிழையான தகவல்களை வழங்குவது சட்டப்படி ஓர் குற்றச்செயலாகும். நீங்கள் பொய்யான தகவல்களை வழங்கினால் உங்களது உரிமை கோரலுக்கு பணம் செலுத்தப்படமாட்டாது.

**5.** காப்புறுதி நிறுவனத்திடமிருந்து இழப்பீட்டினைக் கோருவதற்கு முன்னர், களவுகள், விபத்துக்கள் மற்றும் ஏனைய சேதங்கள் குறித்து காவல் துறையினருக்கு அறிவித்தல் வேண்டும். எவ்வாறு விபத்து ஏற்பட்டது மற்றும் எந்த ஆதனம் இழக்கப்பட்டது அல்லது சேதப்பட்டது என்பதனை உறுதிசெய்வதற்கு உங்களிடம் காவல்துறையினரது அறிக்கை இல்லாவிடின் காப்புறுதி நிறுவனம் உங்களுக்கு இழப்பீட்டினை வழங்குவதற்கு மறுக்கலாம். ஏதேனும் உரிமை கோரலுக்கு, எழுத்து மூலமான சான்றினை வைத்திருப்பதனை உறுதிசெய்யுங்கள் ( உதாரணமாக மருத்துவச் செலவுகள் மற்றும் காவல்துறை பதிவு இலக்கம் என்பன). காப்புறுதி நிறுவனம் உங்களது இழப்பீட்டினை கணிப்பதற்கு முக்கியமான தகவல்களை நீங்கள் வழங்குதல் வேண்டும்.

**6.** காப்புறுதி நிறுவனம் நியாயமற்ற விதத்தில் உங்களுக்கு இழப்பீட்டினை செலுத்த மறுத்துள்ளது என்று நீங்கள் கருதினால், அல்லது போதியளவு இழப்பீட்டினை வழங்கவில்லை எனக் கருதினால் நீங்கள் காப்புறுதி நிறுவனத்திற்கு புகார் அளிக்கலாம். உங்களது புகாரினை கருத்திற்கொள்வதற்கு காப்புறுதி நிறுவனம் மறுத்தால் அல்லது காப்புறுதி நிறுவனம் உங்களது புகாரிற்கு நியாயமான விதத்தில் பதிலளிக்கவில்லை எனக் கருதினால் நீங்கள் இலங்கை காப்புறுதி முறைமைப்படுத்தல் ஆணைக்குழுவினை (Insurance Regulatory Commission of Sri Lanka) அல்லது இலங்கை காப்புறுதிக் குறைதீர்ப்பாளரை (Sri Lanka Insurance Ombudsman) அணுகலாம். இந்த சேவைகள் இலவசமாக வழங்கப்படுகின்றன.

# 08 உங்களது பணி ஓய்விற்காக திட்டமிடுதல்

## எதற்காக பணி ஓய்விற்கு திட்டமிடல் வேண்டும்?

ஓய்வுபெறுதல் என்பது நீங்கள் முற்றாக பணியில் ஈடுபடுவதனை நிறுத்துவதுடன் உங்களது மனித மூலதனத்திற்கு கிடைக்கும் வருமானம் நிறைவடைகின்றது – உங்களது சம்பளம், தொழில்சார் அல்லது வணிக வருமானம். பலபேர் முற்றாக தொழிலில் ஈடுபடுவதனை நிறுத்துவது கிடையாது ஏனெனில் அவர்கள் போதுமானளவு முன்பாகவே அவர்களது பணிஓய்விற்கு திட்டமிடுவது கிடையாது. இது அவர்களை வழக்கமான பணிஓய்வுபெறுதல் வயதினை தாண்டியபின்னரும் தொடர்ச்சியாக தொழில்செய்வதற்கு கட்டாயப்படுத்துகின்றது. முறையான தொழிலிலிருந்து ஓய்வுபெறுவதற்கு இலங்கையில் காணப்படும் ஆகக்குறைந்த வயது 60 ஆகும். மக்கள் மனமுவந்து ஓய்வு பெறுகிறார்கள் (ஆகக் குறைந்த ஓய்வுபெறல் வயதிற்கு முன்னர் அவர்கள் பதவி விலகலாம் அல்லது ஓய்வு பெறலாம்) அல்லது வலுக்கட்டாயமாக ஓய்வு பெறுகிறார்கள் (வயதின் காரணமாக ஓய்வு பெறுமாறு கட்டாயப்படுத்தப்படலாம், வேலையிலிருந்து நீக்கப்படலாம் அல்லது சுகயீனம் அல்லது உடல் ஊனம் காரணமாக தொழில்புரிவதனை நிறுத்துவதற்கு ஏற்படலாம்.)



அரச துறையில் நீங்கள் பணியில் அமர்ந்திருந்தால் நீங்கள் பணிஓய்வு பெறும்போது அரசாங்க ஓய்வூதியத்தினை பெறுவதற்கான உரிமை உங்களுக்கு உண்டு. அரச துறையில் பலபேர் அவர்களது ஓய்வூதியத்தினைப் பெறுவதற்கான தகுதியினை அடையும்போது பணிஓய்வு பெறுகின்றார்கள். அரச ஓய்வூதியத்திலுள்ள (பொதுவாக நீங்கள் சேவையாற்றிய வருடங்களின் எண்ணிக்கையினை அடிப்படையாகக்கொண்டு நீங்கள் கடைசியாக உழைத்த மாதாந்த சம்பளத்தின் ஒரு குறிப்பிட்ட சதவீதம் ) சிக்கல் என்னவெனில் இது பணவீக்கத்துடன் அரிதாகவே ஈடுகொடுக்கின்றது. நீங்கள் பணிஓய்வுபெற்று பல வருடங்களின் பின்னர், பல வருடங்களாக உயர்வடைந்துள்ள மருத்துவ செலவினங்கள் மற்றும் வாழ்க்கைச் செலவிற்கு பெருமளவு பணம் தேவைப்படுவதுடன், உங்களுக்குக் கிடைக்கும் அரச ஓய்வூதியமானது செலவுகளைச் சந்திப்பதற்கு போதுமானதாகக் காணப்படாது.

**“பலர் தங்கள் வேலையை முற்றிலுமாக நிறுத்துவதில்லை, ஏனென்றால் அவர்கள் ஓய்வு பெறுவதற்கு முன்கூட்டியே திட்டமிடவில்லை.”**

நீங்கள் தனியார் துறையில் பணியில் அமர்ந்திருந்தால், உங்களது மாதாந்த சம்பளத்திலிருந்து 8% கழிக்கப்பட்டு ஊழியர் சேமலாப நிதியத்திற்கு (ஊ.சே.நி.) அனுப்பிவைக்கப்படும். உங்களது வேலையளிப்பவர் உங்களது சம்பளத்தில் 12% பங்களிப்பினை ஊ.சே.நி. க்கும் 3% பங்களிப்பினை ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கும் (ஊ.ந.நி.) மாதந்தோறும் செலுத்துதல் வேண்டும். உங்களது பணமானது மாதந்தோறும் சேமிக்கப்படுகின்றது என்பதனை உறுதிசெய்வதற்காக ஊ.சே.

நி. மற்றும் ஊ.ந.நி. ஆகியவற்றிலிருந்து உங்களது கணக்குக் கூற்றுக்களை பெற்றுக்கொள்ளுதல் முக்கியமானதாகும். நீங்கள் ஓய்வு வயதினை அடைந்தவுடன் ஊ.சே.நி. க்கு மேற்கொண்ட உங்களது மொத்த பங்களிப்பினையும் அதன் வருவாயினையும் திரும்பப் பெற்றுக்கொள்ளலாம். மேலும் ஊ.ந.நி. இற்கு மேற்கொண்ட உங்களது மொத்த பங்களிப்பினையும் அதன் வருவாயினையும் ஒவ்வொரு ஐந்து வருடத்திற்கொரு முறையும் மீளப் பெற்றுக்கொள்ளலாம். இவ்விரண்டு நிதியங்களினதும் முதலீட்டுக் கொள்கையானது நீண்ட கால சாதகமான மெய் வருமானத்தினை அங்கத்தவர்களுக்கு வழங்குவதில் கவனஞ்செலுத்துகின்றது. அதேசமயம் நிதியத்தின் பாதுகாப்பினையும் மீள்கொடுப்பனவுகள் மற்றும் நிதியத்தின் ஏனைய செலவுகளைச் சந்திப்பதற்கு போதுமான திரவத்தன்மை மட்டம் கிடைக்கக்கூடியதனையும் உறுதிப்படுத்துகின்றது. 2022 இன் இறுதியில் ஊ.சே.நி. இன் முதலீட்டுத் தேக்கத்தின் முதலீடானது 93.2% அரசாங்க பிணையங்களிலும், 3.8% பங்குகளிலும், 0.8% கூட்டாண்மைத் தொகுதிக்கடன்களிலும் எஞ்சிய 1.8% நிலையான வைப்புகளிலும் முதலீடு செய்யப்பட்டுள்ளன. ஊ.சே.நி. இல் உள்ள பிரச்சனை என்னவென்றால், 2017 முதல் 2021 வரையிலான காலப்பகுதியில் குறைந்த வருமானம் அதாவது ஆண்டுக்கு 9-10.5% வழங்கியுள்ளது இதற்கு முன்பு 1980களில் இருந்து சராசரி வருமானம் 11.5% ஆக இருந்தது.

1980 முதல் 2017 வரையான காலப்பகுதியில் காணப்பட்ட வருடாந்த சராசரி பணவீக்க வீதமான 10.4 ©HARAN Graph இனை கருத்திலெடுக்கும்போது நீங்கள் ஊ.சே.நி. இலிருந்து பெற்றுக்கொண்ட மெய்வருமானமானது 1.1% (11.5% இலிருந்து 10.4% கழித்தால் ) என்பதனை உணர்வீர்கள். இது மிகவும் குறைவானதாகும். எனவே, உங்களது தொழில்புரியும் வாழ்க்கையில், உங்களது மாதாந்த சேமிப்பான உங்களது சம்பளத்தின் 23% ஆனது, நீங்கள் பணிஓய்வுபெறும்போது மீளப்பெறும் தொகையானது சௌகரியமான ஓய்வுபெற்ற வாழ்க்கைக்கு போதுமானதாக வளர்ச்சியடையாது.

(எவ்வாறாயினும் நீங்கள் ஊ.ந.நி. இற்கு பங்களிப்பு செய்யும்போது ஆயட் காப்புறுதி மற்றும் மருத்துவ செலவுகள் போன்ற ஏனைய நன்மைகளுக்கும் உரிமையுடையவர்களாகின்றீர்கள், ஆனால் இந்நன்மைகள் நீங்கள் ஊ.ந.நி. இனை மீளப்பெற்றதன் பின்னர் உங்களுக்கு கிடைக்காது).

இலங்கையின் தொழில்புரியும் சனத்தொகையின் கணிசமானளவு சதவீதமானோர் (27% க்கு மேல்) சுய தொழில் புரிபவர்களாகவும் மற்றும் முறைசாரா துறையில் ஈடுபடுபவர்களாகவும் காணப்படுவதுடன் இவர்களுக்கு எவ்வித ஓய்வூதியமோ அல்லது சேமலாப நிதித் திட்டங்களோ காணப்படுவதில்லை. இவர்கள் வயது மற்றும் உடல் ஊனம் ஆகியவற்றால் திறனற்றுப் போகும்போது தம்மை தாமே தற்காத்துக்கொள்ளும் சூழலுக்கு தள்ளப்படுகின்றார்கள். இவர்களுள் பலபேருக்கு தங்களைப் பார்த்துக்கொள்வதற்கு எவ்வித வருமான மூலமும் காணப்படாததுடன் குடும்பத்தாருடைய உதவியில் தங்கியிருக்க வேண்டியுள்ளது. இதன் காரணமாக, இவர்களில் பலபேர் அவர்களது வாழ்க்கையின் அந்திமக் காலத்தில் நம்பிக்கையற்ற எதிர்காலத்திற்கு முகங்கொடுக்க வேண்டியுள்ளது.

எனவே, ஒவ்வொருவரும் அவர்களது பணிஓய்வுபெறல் வாழ்க்கைக்கு திட்டமிடவேண்டியுள்ளது. எவ்வளவு முன்னதாக நீங்கள் ஆரம்பிக்கின்றீர்களோ, உங்களது பணிஓய்வு வாழ்க்கையின் குறிக்கோளினை அடைவதற்கான சாத்தியம் உயர்வாகக் காணப்படும். இது நீங்கள் பணிஓய்வு பெற்றதன் பின்னர், உங்களது ஓய்வூதியம் மற்றும் சேமலாப நிதி முதலீட்டின் வருமானத்திற்கு ஓர் பயன்மிக்க சேர்க்கையாகும். உங்களுக்கு ஓர் ஓய்வூதியம் அல்லது சேமலாப நிதி வருமானம் கிடைக்காவிட்டால், இந்த சேமிப்புகளும் மற்றும் முதலீடுகளும் உங்களது முதுமை வயதில் ஓர் பாதுகாப்பாகக் காணப்படும்.

உங்களது பணிஓய்வு வாழ்க்கையின் போது உங்களையும் உங்களில் தங்கியுள்ளோரையும் பராமரிப்பதற்கு எவ்வளவு வருமானம் தேவைப்படும் என்பதனை நீங்கள் உங்களையே கேட்டறிந்துகொள்வது முக்கியமானதாகும். பணிஓய்வு வாழ்க்கையின்போது உங்களது தேவைகளை சந்திப்பதற்கு, சேமித்தல் மற்றும் விவேகமுடன் முதலீடு செய்தல் ஆகியவற்றின் மூலம் முன்பாகவே திட்டமிடுதல், துணைபுரியும்.

# பணிஓய்வுபெறுதலுக்காக முதலீடு செய்வதிலுள்ள முக்கியமான சவால்கள்

இங்கு மூன்று முக்கியமான விடயங்கள் காணப்படுகின்றன.

1. முதலாவதாக, நீங்கள் பணிஓய்வு பெறும்போது உங்களது பாதுகாப்பிற்கு அவசியமான பணத்தொகையின் அளவு என்ன? அதாவது நீங்கள் உங்களது முதலீட்டிலிருந்து வரும் வருமானத்தில் வாழ்க்கையைக் கொண்டு செல்ல வேண்டியுள்ளது. நான் இங்கு மிகவும் எளிமையான ஓர் "ஆயிரம் ரூபா விதி" என்றழைக்கப்படும் ஓர் விதியினை பயன்படுத்தப் போகின்றேன். ஒருவர் தான் பணிஓய்வுபெற்றதன் பின்னர் 20 வருடங்களுக்கு வாழ்வார் என நினைப்பதுடன் அவருக்கு மாதாந்தம் ரூபா 1,000 தேவைப்படின் அவருக்கு ரூபா 240,000 முதலாகத் தேவைப்படும். (அதாவது 1,000 x 12 x 20) இங்கு பணவீக்கம் புறக்கணிக்கப்பட்டுள்ளது. அவருக்கு மாதாந்தம் ரூபா 100,000 தேவைப்படின் அவருக்கு, பணவீக்கத்தினை கணக்கிலெடுக்காது, முதலாக ரூபா 24 மில்லியன் இருத்தல் வேண்டும். உங்களுக்கு மாதாந்தம் ரூபா 200,000 தேவைப்படின், அத்தகைய முதலீட்டு வருமானத்தினை உருவாக்குவதற்கு நீங்கள் ரூபா 48 மில்லியனை வைத்திருத்தல் வேண்டும்.

2. இரண்டாவதாக, நீங்கள் எவ்வாறு உங்களது ஆரம்ப முதலீட்டினை இழக்காது உங்களது முதலைப் பாதுகாக்கலாம்? ஏனெனில் முதலிடுதல் என்பது இடர்நேர்கைகளை உள்ளடக்கும் அல்லது உங்களது வருவாய் மாறுபடுவதனையும் உள்ளடக்கும். அதாவது, உங்களது முதலீடுகள் நீங்கள் விரும்பும் அல்லது எதிர்பார்த்த விளைவினை கொண்டுவராமல் விடலாம்.

3. மூன்றாவதாக, ஆரம்ப முதலின் பெறுமதியினை வீழ்ச்சியடையச் செய்யும் பணவீக்கத்திலிருந்து உங்களது முதலைப் பாதுகாப்பது எப்படி?

சமீபகாலம் வரை இலங்கையர்கள் உயர்ந்த வட்டி வீதத்தினை அனுபவித்தார்கள். இதன் காரணமாக அவர்கள் உயர்ந்த வட்டியினை செலுத்தும் வங்கி மற்றும் நிதிக் கம்பனி வைப்புகளை பணிஓய்வு காலத்திற்கான பிரதான முதலீட்டு முறையாக கருதுகின்றார்கள். எவ்வாறாயினும், இரண்டு தசாப்தங்களாக இடம்பெற்ற உள்நாட்டுப்போர் நிறைவடைந்ததிலிருந்து வட்டி வீதங்கள் 50%க்கும் மேலாக வீழ்ச்சியடைந்துள்ளதுடன் முன்னோக்கி செல்லும்போது வட்டி வீதங்கள் அனேகமாக குறைவாகவே காணப்படும். எவ்வாறாயினும், தற்போதைய மேக்ரோ பொருளாதார சவால்கள் மற்றும் தொற்றுநோயால் தூண்டப்பட்ட தடைகள் ஆகியவற்றின் தொடக்கத்துடன், வட்டி விகிதங்கள் சுருக்கமான பணவியல் கொள்கையால் உந்துதல் அதிகரிக்கும் போக்கைக் குறிப்பிட்டுள்ளன. வைப்புகளைப் போலல்லாது, முதலீடு செய்யும்போது சந்தையில் ஏற்படும் ஏற்றத்தாழ்வு காரணமாக உங்களது முதலின் பெறுமதி மாற்றடையும் இடர்நேர்கையினை நீங்கள் பொறுப்பேற்றல் வேண்டும். இலங்கையிலுள்ள அனேகமான முதலீட்டாளர்கள் இத்தகைய இடர்நேர்கையுடன் தாங்கள் வாழ இயலாது என எண்ணுகின்றார்கள். எதிர்வரும் காலங்களில் அவர்களால் இந்த இடர்நேர்கையின்றி வாழ இயலாது என்பதை மிகவும் துல்லியமாக கூறலாம். கவனமாக கணிப்பிடப்பட்ட இடர்நேர்கை அளவுடைய ஓர் முதலீட்டுத் தேக்கம் இல்லாவிடின், உங்களது பணிஓய்வுக்கால குறிக்கோளினை அடைவதற்கு உங்களது சேமிப்புகளை பாரியளவில் அதிகரிக்க வேண்டும் அல்லது நீங்கள் இறுதியில் குறைவானதைப் பெற்றுக்கொள்வீர்கள் என்பதனை ஏற்றுக்கொள்ளல் வேண்டும்.

நீங்கள் ஒவ்வொரு வருடமும் ரூபா 1,000 இனை, 6.5©HARAN Graph வருடாந்த வட்டியினை வழங்கும் தேசிய சேமிப்பு வங்கியில் 12 மாத நிலையான வைப்பினில் 25 வருடங்களாக முதலீடு செய்கின்றீர்கள் என எடுத்துக்கொள்வோம். இதன் பிரகாரம் 25 வருடங்களின் இறுதியில் உங்களுக்கு ரூபா 58,888 கிடைக்கும். ஒப்பீட்டளவில், நீங்கள் 60% பங்குகளிலும் 40% முறிகளிலும் முதலீடு செய்துள்ள முதலீட்டுத் தேக்கத்தில் நீங்கள் முதலீடு செய்துள்ளீர்கள் என எடுத்துக்கொள்வோம். இங்கு பங்கு முதலீட்டிற்கு வருடாந்தம் 16% வருவாயும் முறிகளில் வருடாந்தம் 8% வருவாயும் கிடைக்குமானால், 25 வருடங்களின் பின்னர் உங்களுக்கு ரூபா 150,866 கிடைக்கும். இது உங்களது பணிஓய்வுபெறல் சேமிப்பிலும் பார்க்க 2.5 மடங்கு அதிகமானதாகும்.

இலங்கையிலுள்ள அனேகமான முதலீட்டாளர்கள் ஊகிப்பது போல் பங்குச் சந்தைகளில் முதலீடு செய்வதன் ஆபத்து நீங்கள் முதலீடு செய்த முதலினை இழப்பது அல்ல. கொழும்புப் பங்குச் சந்தையானது 2011 இல் 8மூ இழப்பினை சந்தித்தது. மிகவும் பாரதூரமான இடர்நேர்கை என்னவெனில், சந்தை வீழ்ச்சியடையும் காலப்பகுதியில் உங்களது நட்டத்திற்கு எதிர் செயலாற்றலாக பங்குகளை விற்பனை செய்தலாகும். இதன் காரணமாக, சந்தை மீளெழுவதன் நலனை நீங்கள் மறுதலிக்கின்றீர்கள். இங்கு தான் பங்குகளையும் நிலையான வருமானப் பிணையங்களையும் உள்ளடக்கிய சமநிலையான முதலீட்டுத் தேக்கம் துணைக்கு வருகின்றது. இது கொந்தளிப்பான காலப்பகுதியிலும் நீங்கள் முதலீட்டில் தங்கியிருப்பதற்கு உதவுகின்றது. இது பங்குச் சந்தையின் நீண்டகால உயர்ந்த வருவாயினைப் பெறுவதற்கு உதவுவதுடன் விவேகமான அளவு முதலீட்டு இடர்நேர்கையினை எடுக்காமலிருக்கும் அபாயத்தினையும் தவிர்ப்பதற்கு உதவுகின்றது.

**“முதலீட்டு போர்ட்/ போலியோவில் கவனமாக அளவிடப்பட்ட ஆபத்து இல்லாமல், உங்கள் ஓய்வூதிய இலக்கை அடைய உங்கள் சேமிப்பை பெருமளவில் அதிகரிக்க வேண்டும் அல்லது இறுதியில் நீங்கள் குறைவாகவே முடிவடையும் என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும்.”**

# பணிஓய்வுற்ற காலப்பகுதியில் உங்களது சேமிப்பு-களை புத்திசாலித்தனமாக கையாளுங்கள்

அனேகமான மக்கள் தங்களது தொழில் வாழ்க்கையில் பெரும் பகுதியினை தங்களது எதிர்காலத்திற்கு சேமிப்பதற்காக கழிக்கின்றார்கள். இருப்பினும், பல வருடங்களாக கட்டுப்பாட்டுடன் சேமிப்புப் பழக்கத்தை மேற்கொண்டிருந்தாலும் நீங்கள் தொழில்புரிதல் மற்றும் சேமித்தல் என்பதிலிருந்து ஓய்வுபெற்றதன் பின்னர் உங்களது கடின உழைப்பிலிருந்து சேமித்த பணத்திலிருந்து பணிஓய்வுபெறல் மற்றும் செலவழித்தல் என்பதற்கு நிலைமாறுவதற்கு சிரமப்படுவீர்கள். நீங்கள் பணிஓய்வுபெற்றதன் பின்னர் உங்களுக்கு கிடைத்துள்ள ஊ.சே. நி., ஊ.ந.நி. மற்றும் பணிக்கொடை என்பன, உங்களது பணிஓய்வு வாழ்நாள் முழுவதும் நீங்கள் வாழ்வதற்கு போதுமான அளவு வருமானத்தை வழங்கக்கூடிய ஓர் முதலீட்டுத் தேக்கத்தில் புத்திசாலித்தனமாக முதலீடு செய்தல் வேண்டும் என்பதனை நீங்கள் அவசியமாக புரிந்துகொள்ளல் வேண்டும். பணிஓய்வு பெறும்போது கிடைக்கும் இப்பணமானது உங்களால் முன்னர் செய்ய இயலாத விடயங்களில் செலவழித்து இதனை முற்றாக அழித்துவிடுவதற்கல்ல. கிடைக்கும் பணத்திலிருந்து குறுங்கால மனநிறைவிற்காக ஆடம்பரப் பொருட்களிலும் அல்லது அதன் பெரும்பகுதியினை மாதாந்த வருமானத்தை வழங்காத விடயங்களிலும் செலவழித்தல் ஆகாது. இதனையே நிதியியல் ரீதியாக போதுமான அறிவில்லாத இலங்கை மக்கள் செய்கின்றார்கள். தவறினை மேற்கொள்ள வேண்டாம். நீங்கள் இவ்வாறு செலவழித்தால், உங்களது செலவுகளைச் சந்திப்பதற்கு நிலையான வருமானம் இல்லாத போது, உங்களுக்கு செலவழிப்பதற்கு பணம் இன்றி சிரமப்படுவீர்கள்.

யதார்த்தமான செலவழித்தல் திட்டம் ஒன்றினை உருவாக்குங்கள். உங்களது பணிஓய்வுக் காலப்பகுதியில் வாழ்வதற்கு இத்தகைய திட்டம் ஒன்றினை உருவாக்குதல் முக்கியமானதாகும்.

**“உங்கள் செலவினங்களை தேவைகள், இலக்குகள் மற்றும் அபிலாஷைகளில் வைப்பது உங்கள் பணப்புழக்கத்தை நிர்வகிப்பதற்கும் வசதியாக வாழ்வதற்கும் சிறந்த கட்டமைப்பை வழங்க உதவும்.”**

இங்கு நீங்கள் ஒரு சமநிலையினை கடைப்பிடிக்கவேண்டும் - விரைவாக உங்களது சேமிப்பினை தீர்ந்து விடுவதனை நீங்கள் விரும்பமாட்டீர்கள் அதேபோல் உங்களது வாழ்க்கையின் இப்பகுதியினை அனுபவிக்கும் வாய்ப்பினை இழந்துவிடவும் விரும்பமாட்டீர்கள். நீங்கள் எவ்வாறு செலவழிப்பது என்பது பற்றி யதார்த்தமாக இருப்பது முக்கியமானதாகும் ஏனெனில் அதனை நீங்கள் ஒழுங்காகக் கையாளக்கூடியதாக இருத்தல் வேண்டும். உங்களது வாழ்க்கையின் முன்னைய காலப்பகுதியில் நீங்கள் இதனை வரவு செலவு அல்லது பாதீடு எனக் கருதியிருப்பீர்கள். ஆனால் பணிஓய்வுக் காலப்பகுதியில் இதனை செலவு செய்தல் திட்டமாக எண்ணுங்கள்.

உங்களது செலவுகளை தேவைகள், குறிக்கோள்கள் மற்றும் ஆசை என்பற்றுக்கு ஒதுக்குதல் உங்களது காசுக் பாய்ச்சல்களை முகாமைப்படுத்துவதற்கும் சௌகரியாக வாழ்வதற்குமான ஓர் சிறந்த வரம்பினை வழங்குவதற்கு துணைபுரிகின்றது. இதனை செய்வதற்கு, வகைப்படுத்தல் ஓர் முக்கியமான படியாகும். உங்களது வாழ்க்கையின் ஏனைய கட்டங்களில் நீங்கள் செய்வதற்கும் இதற்கும் எவ்வித வித்தியாசமும் கிடையாது. வீட்டுவசதி, அடிப்படைத் தேவை சேவைகள், உணவு மற்றும் சுகாதாரப் பராமரிப்பு போன்ற நாளாந்த வாழ்க்கைச் செலவுகளுக்கு வரவு செலவுத் திட்டமிடல் வேண்டும். அடுத்ததாக, குறிக்கோள்கள் மற்றும் ஆசைகளைக் கருத்திற்கொள்ளுங்கள். இவை பேரப்பிள்ளைகளை பார்க்கச் செல்வது, வெளிநாட்டு பிரயாணங்கள், பொழுது போக்குகள் அல்லது பாரிய கொள்வனவுகள் போன்றவற்றை உள்ளடக்கலாம்.



நீங்கள் தருமதானங்களுக்கு கொடையளிக்கலாம் அல்லது உங்களது குடும்பத்தாருக்கு மரபுரிமைச் செல்வத்தையும் விட்டுச்செல்லலாம். உங்களுக்கு எது மிகவும் முக்கியமானது என்பதற்கேற்ப உங்களது விருப்புகளை முன்னுரிமைப் படுத்தத் தவறாதீர்கள்.

உங்களுக்கு பொருத்தமான ஓர் மீளப்பெறுதல் மூலோபாயத்தினை தீர்மானித்துக்கொள்ளுங்கள். நீங்கள் உங்களது செலவழித்தல் திட்டத்தினை மேற்கொண்டவுடன், உங்களது சொத்துக்களிலிருந்து எவ்வாறு மீள்பெறுகைகளை செய்வது என்பதனை நீங்கள் கண்டுபிடிப்பீர்கள். ஓய்வூதியம், மாதாந்த நிலையான வைப்பு வட்டி, மற்றும் ஆண்டுப்படி போன்றவற்றை உள்ளடக்கிய உத்தரவாதமளிக்கக்கூடிய வருமான உறையினை (டிரஉமநவ ழக பரயசயவெநநன ைஉெழஅந) வைத்துக்கொள்ளுங்கள். இது வீட்டுவசதி, உணவு, அடிப்படைத் தேவை சேவைகள், பிரயாணம், மருத்துவ செலவுகள் மற்றும் காப்புறுதி போன்ற தேவைகளைச் சந்திக்கும். உங்களது நிதியினை இந்த அத்தியாவசியத் தேவைகளுக்கு ஒதுக்குதல் உங்களுக்கு ஓர் நிதியியல் பாதுகாப்பு உணர்வினை வழங்கும். அதாவது நீங்கள் வெளிநாட்டு பிரயாணம் அல்லது அத்தியாவசியமற்ற பொருட்களில் பணத்தை செலவு செய்தாலும் வாழ்க்கையின் அடிப்படைத் தேவைகளை சந்திக்கமுடியும் என்ற உணர்வு காணப்படும்.

உங்களது பணிஓய்வுபெற்ற வாழ்க்கையின் பல்வேறு கட்டங்களில் நீங்கள் மீளப்பெறும் பணத்தின் தொகையானது வேறுபடலாம். உதாரணமாக, பணிஓய்வுகாலத்தின் ஆரம்பப் பகுதியில் நீங்கள் மிகவும் சுறுசுறுப்பாக காணப்படும்போது ஒருவேளை நீங்கள் பிரயாணம் செய்ய விரும்பலாம் அல்லது ஓய்வுநேர நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு விரும்பலாம். அப்போது நீங்கள் அதிகளவு பணத்தை மீளப்பெறுவதற்கு விரும்பலாம். பின்னர், நீங்கள் சுறுசுறுப்பு குறைந்து காணப்படும்போது உங்களது வாழ்க்கை முறையினை சந்திப்பதற்கு சிறிய வருமானம் போதுமானதாகக் காணப்படலாம். நீங்கள் இதற்கு எதிர்மாறாகவும் நடக்கலாம் - ஆரம்ப காலப்பகுதிகளில் உங்களது மீள்பெறுகைகளை சற்று குறைத்து மற்றும் உங்களது வருமானத்திற்கு பிற்சேர்ப்பாக ஓர் பகுதிநேர தொழிலினை செய்யலாம். அப்போது, உங்களது வருமான ஊற்றுக்கள் குறித்து நீங்கள் மிகவும் சௌகரியமடையும்போது படிப்படியாக உங்களது மீள்பெறுகைகளை அதிகரியுங்கள். வயது செல்லச் செல்ல மருத்துவச் செலவுகள் அதிகரிக்கும்போது இது பல பேருக்கு ஓர் சாதுரியமான அணுகுமுறையாகக் காணப்படலாம். நெகிழ்வுத்தன்மையுடைய மீள்பெறுகை மூலோபாயத்தின் அழகு என்னவெனில் உங்களது தனித்தன்மை மற்றும் குறிக்கோள்களுக்கேற்ப நீங்கள் இவற்றை சரிசெய்யலாம்.

எதிர்பாராதது குறித்து விழிப்புடன் இருங்கள். ஓர் செலவழித்தல் திட்டம் மற்றும் மீள்பெறுகைக்கான வியூகத்தினை வகுத்தல் முக்கியமான அதேவேளை எதிர்பாரா நிகழ்வுகளுக்குத் தயாராயிருப்பதும் முக்கியமானதாகும்.

**“உயில் மற்றும் ஒருவேளை தொடர்ந்து புதுப்பிக்கப்படும் ஒரு வாழும் நம்பிக்கை உங்களுக்கு அதிகக் கட்டுப்பாட்டைக் கொடுக்கும், மேலும் உங்கள் பாரம்பரியத்தை நிர்வகிப்பதை சம்பந்தப்பட்டவர்களுக்கு எளிதாக்கும். ஒரு வழக்கறிஞருடன் பணிபுரிவது உயில் அல்லது நம்பிக்கை உங்களுக்கு அர்த்தமுள்ளதா என்பதை தீர்மானிக்க உதவும்.”**

ஆயுள் கால அதிகரிப்பு மற்றும் சுகாதார பராமரிப்புச் செலவுகளது அதிகரிப்புடன், பணிஓய்வுக்கால திட்டமிடலுக்கு மருத்துவ செலவுகளும் முக்கியமானதாகும்.



நீங்கள் 70 வயதினை அடைந்தவுடன், மருத்துவ காப்புறுதி கிடையாது என்பதனை நினைவு கூர்ந்துகொள்ளுங்கள்.

உங்களது மரபுரிமையினை பாதுகாத்துக்கொள்ளுங்கள். உங்களது அனைத்து நிலையான வைப்புகளுக்கும் ஒருவரை நியமிக்கப்பட்டவராக (nominee) வையுங்கள் மற்றும் உங்களது துணையார், மகன் அல்லது மகள் அல்லது ஒரு சகோதரத்துடன் இணைந்து ஒரு கூட்டுக் கணக்கொன்றை வைத்திருங்கள். ஏனெனில் நீங்கள் சடுதியாக இறக்க நேரிட்டால் உங்களது தனிப்பட்ட விழுமியங்களுக்கு ஏற்ப உங்களது செல்வம் பயன்படுத்தப்படுவதனை உறுதிசெய்வதற்காகும். உங்களது ஆதனமானது உங்களுக்கு சொந்தமான அனைத்தையும், அதாவது காசு, முதலீடுகள், ஆயுட் காப்புறுதிக் கொள்கைகள், மற்றும் தனிப்பட்ட சொத்துக்களையும் உள்ளடக்கும் என்பதனை நினைவில் வைத்திருங்கள். ஒருவேளை கிரமமாக புதுப்பிக்கப்பட்ட ஓர் உயிலை மற்றும் ஓர் வாழ்நாள் அறக்கட்டளையினை வைத்திருப்பது உங்களுக்கு அதிக கட்டுப்பாட்டினை வழங்குவதுடன் உங்களது மரபுரிமையினை முகாமைப்படுத்துபவர்களுக்கும் இலகுவாயிருக்கும். ஓர் வழக்கறிஞருடன் கலந்தாலோசித்து உங்களுக்கு ஓர் உயிலா அல்லது அறக்கட்டளையா உகந்தது என்ற தீர்மானத்திற்கு வரலாம். இச்செயல்முறையின் ஓர் அங்கமாக, உங்களது பயனாளர்களை நிச்சயப்படுத்திக்கொள்வதும் ஓர் நல்ல கருத்தாகும். உங்களது கணக்குகளில் காணப்படும் நியமனங்கள் உங்களது உயிலிலுள்ளவற்றை ஒதுக்கி வைக்கலாம். எனவே, உங்களது செல்வத்தை யார் மரவுவழியாக பெறவேண்டும் என நீங்கள் விரும்புகின்றீர்களோ அவர்களை குறிப்பிட்டுக்கொள்ளுங்கள். இதனை நீங்கள் செய்யத் தவறினால், உங்களது சொந்தங்கள் அதிகளவு நேரத்தையும் பணத்தையும் ஓர் மரணசாதன வழக்கிற்கு செலவு செய்யவேண்டி ஏற்படும். இதிலும் பார்க்க மோசமாக, நிதியியல் நிறுவனம் அல்லது அரசாங்கள் உங்களது செல்வத்தை பொறுப்பேற்றுக்கொள்ளும். நிதியியல் நிறுவனங்களில் பில்லியன் கணக்கில் பணம் கோரப்படாது காணப்படுகின்றது.



# 09 முடிவுரை

இப் புத்தகமானது நீங்கள் உங்களது நிதியினை முகாமைப்படுத்துவதில் மிகவும் வெற்றிகரமாக காணப்படுவது பற்றியதாகும். அத்துடன் உங்களது பணத்திலிருந்து மிகவும் அதிகமானதை பெற்றுக்கொள்வதற்கும் மற்றும் செல்வத்தை திரட்டவும் இயலுமையாக்குகின்றது. இது உங்களது முதிர்ந்த வாழ்க்கைக்கு ஆகக்குறைந்த நிதியியல் ஞானத்தை வழங்குகின்றது.

நிதியில் உலகில் ஏற்படும் விரைவான மாற்றங்களுக்கு முகங்கொடுப்பதற்கு அனேகமான மக்கள் ஆயத்தமில்லாதிருக்கின்றார்கள். கடன் அட்டைகள் முதல் நடமாடும் பணப்பை போன்ற நிதியியல் கருவிகள் பெருகிக்கிடப்பதனை காணலாம். இவற்றுள் அனேகமானவை மக்களை தங்களிடம் இல்லாத பணத்தை செலவுசெய்யுமாறு வசீகரிக்கின்றன. இவற்றை கட்டுப்படுத்தப்படாவிட்டால் இவர்களை அதிக கஷ்டத்தினுள் தள்ளிவிடும். அரசாங்கங்கள் நிதியில் சேவைகளுக்கான அணுக்கத்தினை ஊக்கப்படுத்துவதனூடாக நிதியியல் ரீதியாக அனைவரும் உள்ளடக்கப்படுவதனை அதிகரிப்பதற்கு முயற்சிக்கின்றது. மக்களுக்கு அவசியமான நிதியியல் திறமைகள் இருந்தாலொழிய இந்த வாய்ப்புகள் உயர்ந்த கடன், அடமானக் கடன் தவறுதல் அல்லது வகையற்ற நிலை ஆகியவற்றிற்கு இட்டுச்செல்லும். குறைந்த நிதியியல் அறிவுடைய இளம் சந்ததியினருக்கு இது மிக விசேடமாக பொருந்தும்.

**"பெரும்பாலான மக்கள் நிதி நிலப்பரப்பில் விரைவான மாற்றங்களைச் சமாளிக்கத் தயாராக இல்லை. கிரெடிட் தயாரிப்புகள் முதல் மொபைல் வாலட்கள் வரை நிதி தயாரிப்புகளின் பெருக்கம் உள்ளது, அவற்றில் பல தங்களிடம் இல்லாத பணத்தை செலவழிக்க மக்களை கவர்ந்திழுக்கின்றன, அவை - அவர்கள் கட்டுப்படுத்தப்படாவிட்டால் - அவர்களை சிரமத்திற்கு ஆளாக்கும்."**

உலகிலேயே விரைவாக முதிர்வடையும் சனத்தொகையுடைய நாடுகளில் ஒன்றான இலங்கையில் ஓர் பணிஓய்வு நெருக்கடியானது உருவாகின்றது. ஒவ்வொருவரும் பணிஓய்வு திட்டமிடலுக்கு பாரிய பொறுப்பினை ஏற்கவேண்டியுள்ளது. மக்கள் இது குறித்து ஆயத்தமாக இல்லாததனை காணக்கூடியதாயிருக்கின்றது. இவர்கள் பணிஓய்வு வாழ்க்கையில் உள்ள பொருளாதார சவால்களை சந்திப்பதற்கு தேவையான நிதியியல் திறனின்றி காணப்படுகின்றார்கள்.

> நிதியியல் ரீதியாக அறிவுபடைத்த வயதுவந்தவர்கள் கடனுடன் எவ்விதமான சிக்கல்களையும் சந்திக்காது பணிஓய்வு வாழ்க்கைக்கும் மற்றும் ஏனைய காரணங்களுக்காகவும் சேமிப்பதனை ஆய்வறிக்கைகள் காட்டியுள்ளன.

இதன் விளைவாக, கொள்கை வகுப்பாளர்கள் நிதியியல் கல்வியினை புகட்டும் முயற்சியினை தீவிரப்படுத்தல் வேண்டும். இன்றைய பொரளாதாரத்தில் நிதியியல் அறிவின் முக்கியத்துவத்துவத்தினை கருத்திற்கொண்டு பாடசாலை மற்றும் பணி இடங்களில் அனைத்து வயதுவந்தோரும் நிதியியல் அறிவினை பெற்றுக்கொள்வதற்கு வசதியளித்தல் குறிப்பாக வெற்றியளிக்கும். குறிப்பிட்ட நடத்தைகள் மற்றும் சனத்தொகையில் கவனஞ்செலுத்தும் இலக்குவைத்த நிதியியல் கற்கை நிகழ்ச்சித்திட்டங்கள் சாதுரியமான நிதியியல் தீர்மானங்களுக்கு வழிகாட்டும் என்பதனை பல ஆய்வுகள் கூறுகின்றன.



# உசாத்துணைகள்


Frank K. Reilly & Keith C. Brown. 2012. "Investment Analysis and Portfolio Management" South-Western Cengage Learning.

Jamie Mcintyre. 2009. "Think & Grow Rich!" 21st Century Publishing.

Laurence B. Siegel. 2009. "The Future of Life-Cycle Saving and Investing: The Retirement Phase" The Research Foundation of CFA Institute.

Martize Smith. 2018. "Millionaire Scope: Secrets of Wealth & Prosperity"

Michael Jonah Jones. 2012, "Everything You Know About Money Is Wrong!" Jonah Jones at Smashwords.

Mwesige Emmanuel & Mustafa Mugambe. 2017 "Financial Literacy Handbook – Increase Your Financial Skills"

Restless Development. "Financial Literacy Manual – A Guide for Teaching Pupils"

Robert T. Kiyosaki. 2011. "Rich Dad Poor Dad: What the Rich Teach Their kids About Money – That The poor and Middle Class Do Not" Plata Publishing LLC.

Terry D. Clark. "The Simpler Way to Managing Money and Getting Your Finances in Order Without Going Crazy" TDC Enterprise.

# CFA INSTITUTE STATEMENT OF INVESTOR RIGHTS

The "Statement of Investor Rights" was developed by CFA Institute to advise buyers of financial service products of the conduct they are entitled to expect from financial service providers. These rights reflect the fundamental ethical principles that are critical to achieving confidence and trust in any professional relationship. The list applies to financial products and services such as investment management, research and advice, personal banking, insurance and real estate. Whether you are establishing an investment plan, working with a broker, opening a bank account or buying a home, the Statement of Investor Rights is a tool to help you get the information you need and the service you expect and deserve.

**Demanding that financial professionals abide by these rights helps you build trust in the person and/or firm you engage with, and thereby collectively restores trust, respect, and integrity in finance.**

## WHEN ENGAGING THE SERVICES OF FINANCIAL PROFESSIONALS AND ORGANIZATIONS, I HAVE THE RIGHT TO THE FOLLOWING:

1. **Honest,** competent, and ethical conduct that complies with applicable law;
2. Independent and **objective** advice and assistance based on informed analysis, prudent judgment, and diligent effort;
3. My financial **interests** taking precedence over those of the professional and the organization;
4. **Fair** treatment with respect to other clients;
5. Disclosure of any existing or potential **conflicts** of interest in providing products or services to me;
6. **Understanding** of my circumstances, so that any advice provided is suitable and based on my financial objectives and constraints;
7. Clear, accurate, complete and timely **communications** that use plain language and are presented in a format that conveys the information effectively;
8. An explanation of all **fees** and costs charged to me, and information showing these expenses to be fair and reasonable;
9. **Confidentiality** of my information;
10. Appropriate and complete **records** to support the work done on my behalf.

Visit cfainstitute.org/futurefinance

# நூலாசிரியரைப் பற்றி



திரு. ரவி அபேசூரிய அவர்கள் சென்வின் செக்கியூரிட்டீஸ் லிமிட்டட்டின் பிரதம நிறைவேற்று அதிகாரி Ã† பணிப்பாளர், கொழும்பு சிட்டி ஹோல்டிங்ஸ் பிஎல்சி, செர்வுட் கெப்பிட்டல் (பிரைவேட்) லிமிட்டட் ஆகியவற்றின் தலைவர் மற்றும் செலான் வங்கி பிஎல்சி, எச்.என்.பி. எசூரன்ஸ் பிஎல்சி, மற்றும் பயோ வுட்ஸ் (பிரைவேட்) லிமிட்டட் ஆகியவற்றில் நிறைவேற்றதிகாரமற்ற பணிப்பாளராகவும் கடமையாற்றுகின்றார். இவர் பட்டய நிதியியல் பகுப்பாய்வாளர்கள் நிருவகத்தின் இலங்கை சங்கத்தின் பரிந்துரைத்தல் தலைவர் மற்றும் சபையின் பணிப்பாளருமாவார். முன்னர், இவர் கன்டோர் குழுமத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி, ஹேலீஸ் குழுமத்தின் மூலோபாய வணிக அபிவிருத்தித் தலைவர், அம்பா ரிசேர்ச் லங்காவின் முகாமைப் பணிப்பாளர் மற்றும் விச் ரேட்டிங்ஸ் லங்காவின் முகாமைப் பணிப்பாளர் போன்ற பதவிகளை வகித்துள்ளார்.

திரு. அபேசூரிய அவர்கள் பிரதம மந்திரி பணிக்குழு நியமனமான நிதியியல் துறை மறுசீரமைப்பு குழுவின் (நி.து.ம.கு.) நிரந்தர அங்கத்தவராகவும் பணிபுரிந்துள்ளார். அத்துடன் இவர் இருமுறை இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் ஆணைக்குழு அங்கத்தவராகவும் நியமிக்கப்பட்டிருந்தார்.

இவர் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளராகவும் அதன் முதலீட்டுக் குழுவின் தலைவராகவும் சேவையாற்றியுள்ளார். திரு. அபேசூரிய அவர்கள் இலங்கை மத்திய வங்கியின் பணிப்பாளர் சபை இடர்நேர்கை மேற்பார்வைக் குழு மற்றும் நிதியியல் துறை உறுதித்தன்மை ஆலோசனைக் குழு ஆகியவற்றின் அங்கத்தவராகவும் கடமையாற்றியுள்ளார். அத்துடன் இவர் பல நிதியியல் மற்றும் தகவல் தொழில்நுட்ப சங்கங்களின் தலைவராகவும் சேவையாற்றியுள்ளார்.

திரு. அபேசூரிய அவர்கள் ஐக்கிய இராச்சியத்தின் பட்டய முகாமைத்துவக் கணக்காளர்கள் நிருவகத்தினதும் ஐக்கிய அமெரிக்கக் குடியரசின் (ஐ.அ.கு.) பட்டய உலகளாவிய முகாமைத்துவக் கணக்காளர்கள் நிருவகத்தினதும் சமூக அங்கத்தவராவார். இவர் ஐ.அ.கு. இன் பட்டய நிதியியல் பகுப்பாய்வாளர் மற்றும் அவுஸ்திரேலியாவின் மொனாஷ் பல்கலைக்கழகத்திலிருந்து வணிக நிர்வாகத்தில் முதுமானி பட்டத்தினையும் பெற்றுள்ளார்.

திரு. அபேசூரிய அவர்களுக்கு முதலீட்டு முகாமைத் துறைக்கு அவரது தலைசிறந்த பணி மற்றும் அர்ப்பணிப்பிற்காக ஐ.அ.கு. இன் பட்டய நிதியியல் பகுப்பாய்வாளர்கள் நிருவகத்தினால் 2017 இல் வெற்றிவாகைக்குரிய "வாழ்நாள் சாதனையாளர்" விருது வழங்கப்பட்டது.

நிதியியல் கல்வியறிவிற்கான

தொடக்க வழிகாட்டி

9 789557 120003

ISBN

ISBN978-955-71200-0-3